இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 28

சுடர் 32 | கதிர் 182 | வள்ளுவர் ஆண்டு 2048 | வைகாசி 13 சனிக்கிழமை 27.05.2017

## புலிகள் உயிர்ப்பு பளைச் சூடு நல்ல உதாரணமாம்



கொழும்பு, மே 27
புலிகள் மீண்டும் உயிர்பெற்று வருகின்றார்கள் என்பதற்குக் கிளிநொச்சித் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒரு சிறந்த உதாரணமாகும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரி

» 25

## மீனவர்களுக்கு சிறப்பு அறிவிப்பு

கொழும்பு, மே 27
மீனவர்கள் கடற்றொழிலுக்குச் செல்ல முன்னர் வானிலை அவதான நிலையத்தின்உரியஅறிவுரைகளைப்பெற்றுக் கொள்ளுமாறு கடற்றொழில் அமைச்சு மீனவர்களிடம் கேட்டுக் கொண்டுள்ளது. கடற்றொழிலுக்குச்

» 04

## முகாமைத்துவ உதவியாளர் பரீட்சை ஒத்திவைப்பு

கொழும்பு, மே 27
அரச முகாமைத்துவ உதவியாளர் தரம் மூன்றிற்கான போட்டிப் பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளன. இந்தப் பரீட்சைகள் இன்று மற்றும் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்ததாகப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.
சீரற்ற காலநிலை காரணமாகப் பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளதாக

» 25

## ஐ.நா., அயல் நாடுகளின் உதவியைக் கோருகிறது அரசு

கொழும்பு, மே 27
தெற்கில் ஏற்பட்டுள்ள பெரும் வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்பைச் சமாளிப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அயல் நாடுகளின் உதவியைக் கோரியிருக்கிறது கொழும்பு அரசு.

» 25

## பேரிடர் பாதிப்புக்கு உடன் உதவிப் பணி

ஆஸியிலிருந்து மைத்திரி உத்தரவு

கொழும்பு, மே 27
சீரற்ற காலநிலையால் நாட்டில் ஏற்பட்டுள்ள இடரில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உடனடி நிவாரணங்களை வழங்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன

» 04

## வடக்குப் பாடசாலைகளில் இனி பிளாஸ்ரிக் கிடையாது

திங்களன்று காலை உறுதிமொழி

யாழ்ப்பாணம், மே 27
வடக்கு மாகாணத்தில் உள்ள சகல பாடசாலைகளிலும் எல்லா வகையான பிளாஸ்ரிக் பைகளையும், ஒருநாள் பயன்படுத்திவிட்டு வீசும்

» 24




மேலும் விவரங்கள் பக். 14 - 15

# சாவு: 102, 110 பேரைக் காணோம்
# தத்தளிக்கிறது தெற்கு

- ஆறுகளின் நீர்மட்டம் அசாதாரணமாக அதிகரிப்பு
- மழைதொடர்ந்தால் இடர்பாதிப்பு பன்மடங்காகும்
- மேலும் மண்சரிவு அபாயம்
- 8 மாவட்டங்கள் பாதிப்பு
- தலைநகரும் தப்பவில்லை
- முப்படையும் மீட்புக் களத்தில் இறக்கம்

கொழும்பு, மே 27
கொளுத்தி எடுத்த வெயிலின் பின்னர் இலங்கையின் தென்பகுதியில் கொட்டித் தீர்க்கிறது கனமழை. காட்டாறாக வெள்ளம் எல்லா இடங்களிலும் பெருகி ஓடுகிறது. பல இடங்களில் மண்சரிவு ஏற்பட்டுள்ளது. வெள்ளம் மற்றும் மண் சரிவில் சிக்கி 102 பேர் உயிரிழந்துள்ளனர். 110 பேர் காணாமற் போயுள்ளனர் என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. 25 ஆயிரம் பேர் வரையில் கடும் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர் என்று இடர்முகாமைத்துவ மைய நிலையம் தெரிவித்தது.
கன மழையால் 8 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. துரித கதியில் மீட்பு நடவடிக்கை முடுக்கி விடப்பட்டுள்ளது. முப்படையினர், பொலிஸார், அரச அதிகாரிகள் தீவிரமாகப் பணியாற்றி வருகின்றனர்.
மழை தொடர்கிறது. இதனால் நீர்த் தேக்கங்கள் பலவற்றில் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. கிராமங்கள் நகரங்கள் வெள்ளத்தில் மூழ்கி வருகின்றன. ஆறுகளின் நீர்மட்டம் சடுதியாக

» 25

### உதவிப் பொருள்களை வழங்குமாறு அவசர கோரிக்கை

கொழும்பு, மே 27
தென்னிலங்கையில் வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிப் பொருள்களை வழங்கி உதவிடுமாறு

» 25

## இடர் பாதிப்பு விவரங்கள்

கொழும்பு, மே 27
'16 ஆயிரத்து 486 குடும்பங்களைச் சேர்ந்த 60 ஆயிரத்து 390 பேர் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ளனர். 102 பேர் உயிரிழந்துள்ளனர். 10 பேர் காயமடைந்துள்ளனர். 110 பேர் காணாமற்போயுள்ளனர்' இவ்வாறு இடர்

» 25

## மீண்டும் பின்னடைவு!

வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை இறுதிசெய்யப்படவில்லை

கொழும்பு, மே 27
எதிர்பார்க்கப்பட்டதற்கு மாறாக, தனது இடைக்கால அறிக்கையை இறுதி செய்யாமல் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது புதிய அரசமைப்புக்கான வழிநடத்தல் குழுவின் கூட்டம். இடைக்கால அறிக்கையை இறுதி செய்வதற்காக வழிநடத்தல் குழு இரண்டாவது தடவையாக நடத்திய இந்த நீண்ட அமர்விலும்

» 25

### கிணற்றுக்கு வெடிவைக்கும் முயற்சி இடை நிறுத்தம்

யாழ்ப்பாணம், மே 27
தையிட்டிப் பிரதேசத்தில் உள்ள கிணற்றில் இருக்கும் ஆயுதங்களை வெடிக்க வைக்கும் முயற்சி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்

» 25

## சிறுமியை வன்புணர்ந்த சிவில் படைச் சிப்பாய்க்கு 60 ஆண்டுகள் சிறை

வவுனியா மேல் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு

வவுனியா, மே 27
வவுனியாவில்பதின்மவயதுச்சிறுமியைவன்புணர்ந்த சிவில் பாதுகாப்பு படைச் சிப்பாய்க்கு அதியுச்ச தண்டனையாக 60ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனையை விதித்து வவுனியா மேல் நீதிமன்று

» 25

## இராணுவச் சதிப் புரட்சி விசாரணை இழுத்தடிப்பு

சபையில் கம்மன்பில சீற்றம்

கொழும்பு, மே 27
அரச தலைவர் தேர்தலன்று இராணுவச் சதிப் புரட்சித் திட்டமொன்று தீட்டப்பட்டதாகக் குறிப்பிட்டு அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு குற்றப்

» 04

## வித்தியா படுகொலை வழக்கு
## தீர்ப்பாயத்தின் 3 நீதிபதிகளும் திங்களன்று நேரில் ஆராய்வர்

யாழ்ப்பாணம், மே 27
புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கை விசாரிக்க நியமிக்கப்பட்ட தீர்ப்பாயத்தின் நீதிபதிகள் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் நாளைமறுதினம் திங்கட்கிழமை சந்தித்துக் கலந்துரையாடுவர்

» 25

## இனவாத நச்சு விதையை கூட்டு அரசினால் மட்டுமே இல்லாதொழிக்க முடியும்

முதலமைச்சர் விக்கி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 27
நாட்டின் இனங்களுக்கிடையே காணப்படும் வேற்றுமை உணர்வுகளும் சச்சரவுகளும், அரசியல்வாதிகளாலும்பிற்போக்குச்சிந்தனையாளர்களாலும்

» 23



# இனவாதமே இல்லாத ஒன்றுபட்ட சமூகத்தை அரசு உருவாக்கும்

*நிதி அமைச்சர் மங்கள வல்வெட்டித்துறையில் உரை*

யாழ்ப்பாணம், மே 27
"ஒரு சிலரால் தற்போது இனவாதம் பேசப்படுகின்றது. இனவாதம் எங்கும் இல்லை. கூட்டு அரசுடன் இணைந்து இனவாதம் இல்லாத ஒற்றுமையான சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகளை முன்னெடுப்பேன்"

இவ்வாறு நிதி மற்றும் ஊடக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

ஆழிக்குமரன் நினைவாக நீச்சல் தடாகம் அமைக்கும் நிகழ்வு நேற்று காலை 10 மணிக்கு வல்வெட்டித்துறை றேவடிக் கடற்கரையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆழிக்குமரனின் சாதனைகள் பருத்தித்துறையில் இருந்து தெய்வேந்திரமுனைவரை நல்லிணக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. முத்தையா முரளிதரன், சங்கக்கார போன்று ஆழிக்குமரனும் இலங்கைக்கு பெருமை சேர்த்தவர்களில் ஒருவராகத் திகழ்கின்றார்.

தற்போது இனவாதம் தலைதூக்கியுள்ளது. என்னைப் பொறுத்தவரையில் தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் எல்லோரும் ஒன்றுதான். இனவாதத்தை ஒழிக்கும் நடவடிக்கைகளில் அரசுடன் இணைந்து செயற்படுவேன். வடக்கு மாகாணத்தில் மட்டும் ஊடகவியலாளர்கள் பாதிக்கப்படவில்லை. நாடு முழுவதும் ஊடகவியலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விரைவில் அவர்களுக்கு உரிய தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என்றார்.

"கூட்டு அரசு செய்யும் நல்ல செயல்கள் வெளிவருவதிலும் பார்க்க தீமைகள்தான் அதிகமாக க்கதைக்கப்படுகின்றன. அண்மையில் அதிகளவிலான காணிகளை கூட்டு அரசு விடுவித்துள்ளது. எதிர்வரும் மாதங்களில் 3 ஆயிரம் ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படவுள்ளன. தற்போது நிதி அமைச்சராக உள்ள மங்கள சமரவீர மிகவும் நேர்மையானவாரகவும் சிறந்தவராகவும் காணப்படுகின்றார். இவர் வடக்கு மக்களுக்காக அரசுடன் இணைந்து மிகவும் சிறப்பாக செயற்பட்டு வருகின்றார். தற்போது இவர் நிதி அமைச்சராக இருக்கின்ற காரணத்தால் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை, ஆனையிறவு உப்பளம் என்பன நிதியமைச்சின் சிறப்பு கண்காணிப்பின் கீழ் இயங்கப்படவேண்டும்.

ஊடகவியலாளர் நிமலராஜன், சிவராம் போன்றவர்கள் இறந்தமை தொடர்பான விசாரணைகள் எடுக்கப்பட்டு உரிய தீர்வு வழங்கப்படவேண்டும். இறந்த ஊடகவிலயலாளர்களுக்கு நினைவுத் தூபி அமைக்கப்படவேண்டும். ஊடகவியலாளர்களுக்கு போதிய வருமானம் இல்லாததால் அவர்கள் பொருளாதார சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். அவர்களுக்கு கடன் உதவியோ அல்லது நிதி உதவியோ வழங்கப்படவேண்டும்" என்று இந்த நிகழ்வில் கலந்து கொண்ட சிறுவர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

நிகழ்வில் வடக்குமாகானமுதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராஜா, மாகாண கல்விஅமைச்சர் த.குருகுலராசா அவைத் தலைவர் சி.வி கே.சிவஞானம், மாகாணசபை உறுபப்பினர்களான கே. சிவாஜிலிங்கம், அஸ்மின், கொழும்பு விளையாட்டுத் துறை பிரதி அமைச்சர் ஹரிஸ், விளையாட்டுத்துறை அமைச்சரின் செயலாளர் திசாநாயக்கா மற்றும் ஆழிக்குமரன் ஆனந்தனின் பாரியார் திருமதி மானெல், ஆனந்தனின் புத்திரர்களான ராஜன் ஆனந்தன், குமார் ஆனந்தன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். ஆழிக்குமரன் ஆனந்தன் நினைவு பன்னாட்டு நீச்சல் தடாகத்துக்கான அத்திபாரக் கல்லை அமைச்சர் மங்கள சமரவீர நடுகைசெய்தார். அவருடன் ஏனைய விருந்தினர்களும் இணைந்து கொண்டனர். (வ-10-26-173)

# மேல் மாகாண சபையில் பெரும் அமளிதுமளி

கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த மேல்மாகாண சபையின் கூட்டம் உறுப்பினர்களிடையே ஏற்பட்ட வாக்குவாதங்களால் மூன்று முறை ஒத்திவைக்கப்பட்டது.

நிலைமை கட்டுக்கடங்காமல் போனதையடுத்துச் சபையின் பிரதித் தலைவர் யசபால கோரளகே அடுத்த அமர்வை ஜூன் 6ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

சபையின் அமர்வு ஆரம்பமானதும் உறுப்பினர் மொஹமட் பைரூஸ் முஸ்லிம்களின் கடைகள் தீயிட்டு கொளுத்தப்படுவதாகவும், அந்தச்செயலுக்கு முதலமைச்சரின் விளக்கம் என்ன எனவும் கேள்வி எழுப்பினார். இதற்குப் பதிலளித்த முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய, மேல்மாகாண சபை சிங்கள, தமிழ், முஸ்லிம் என்ற இனபேதங்களுக்கு அப்பாற்பட்டது எனவும், அத்தகைய அசம்பாவிதமொன்று பற்றி இந்தச் சபையில் பேசுவது பொருத்தமல்ல எனவும் கூறினார். அதனைத் தொடர்ந்து சபையில் ஆளுந் தரப்பினருக்கும் எதிர்த் தரப்பினருமிடையில் கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது. (கு-4)

*தமிழீழ அலங்காரம்:*

# ஆலய நிர்வாகத்தினர் மீது தொடர்ச்சியாக விசாரணை

யாழ்ப்பாணம் மே 28
யாழ்ப்பாணம், திருநெல்வேலி சிறி காளி அம்மன் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழாவில் தமிழீழத்தை சித்திரிக்கும் வகையில் அம்மன் அலங்காரம் செய்யப்பட்டமை குறித்து ஆலய நிர்வாக சபையினரிடம் அரச புலனாய்வாளர்கள் தொடர்ச்சியாக விசாரணைகளை முன்னெடுப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், திருநெல்வேலி சிறி காளி அம்மன் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா இடம்பெற்று வருகிறது. அதில் கடந்த 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற 3ஆம் நாள் திருவிழா காளி அம்மன் தமிழீழத்தை சித்திரிக்கும் வகையில் அலங்கரிக்கப்பட்டு புலி வாகனத்தில் அடியவர்களுக்கு காட்சியளித்தார்.

இதனை ஊடகங்கள் வாயிலாக அறிந்த அரச புலனாய்வுப் பிரிவினர் திருவிழாவின் மறுநாளில் இருந்து அந்தப் பகுதிக்குச் சென்று ஆலய நிர்வாக சபையினர், அர்ச்சகர் உள்ளிட்ட ஆலயத்துடன் தொடர்புடையவர்களுடன் தொடர்ச்சியாக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழீழத்தைச் சித்திரிக்கும் வகையிலான அலங்காரத்தை செய்வதற்கான நோக்கம் என்ன? திருவிழாவை நடத்தியவர்கள் யார்? வரைபடம் அமைக்கப்பட்டதில் ஏதாவது பின்புலம் இருக்கின்றதா? உள்ளிட்ட பல கோணங்களில் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-8)

# பாடத் திட்டத்தில் பாலியல் கல்வி

*அரசு நடவடிக்கை*

கொழும்பு, மே 27
சிறுவர் துன்புறுத்தல், பாலியல் இம்சைகள், மாணவிகள் கர்ப்பமடைதல் போன்ற அசம்பாவிதங்களைத் தவிர்ப்பதற்காக பாடசாலைகளில் 6ஆம் ஆண்டு முதல் 13ஆம் ஆண்டுவரை பாலியல் சுகாதாரக் கல்வியை அறிமுகப்படுத்த அரசு தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகின்றது.

இந்தத் திட்டத்தின் முதற்கட்டமாக மேல் மாகாணப் பாடசாலைகளில் பாலியல் சுகாதாரக் கல்வியைக் கற்பிப்பதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் ஜூன் மாதத்தில் ஆரம்பமாகவுள்ளதாக நாடாளுமன்றத்தின் ஆண், பெண் பாலியல் தொடர்பான ஆராய்ச்சிக் குழுவின் தலைவியும், கேகாலை நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் திருமதி துஷிதா விஜேமான்ன தெரிவித்தார்.

இதற்காக மாணவர் கைநூலொன்றும் தயாரிக்கப்பட்டிருப்பதாகவும், மாணவர்கள் கற்கும் வகுப்புகளுக்கமைவாக அவர்களுக்கு பாலியல் சுகாதாரக் கல்வி கற்பிக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தின் முதலாம் இலக்கக் கட்டடத்தொகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய கலாநிதி துஷிதா விஜேமான்ன, இந்தக் கைநூல் சிறப்பு வைத்திய நிபுணர்களினதும், கல்விமான்களினதும் ஆலோசனைகளுக்கமைவாகத் தயாரிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் சபாநாயகர் கரு ஜயசூரியவும், பிரதிச் சபாநாயகர் திலங்க சுமதிபாலவும் கலந்துகொண்டனர். கைநூலின் முதற்பிரதியை டாக்டர் துஷிதா விஜேமான்ன சபாநாயகரிடம் கையளித்தார். (கு-4)



# சிறைக் கைதிகளில் பெரும்பாலானோர் இளைஞர்களே

*நீதியமைச்சர் விஜேதாஸ வேதனை*

கொழும்பு, மே 27 .
இலங்கைச் சிறைகளிலுள்ள கைதிகளில் பெரும்பாலானோர் இளைஞர்களே என்பது வேதனைக்குரிய விடயம். இந்த நிலை நாட்டின் எதிர்காலத்துக்குப் பெரும் அச்சுறுத்தலாகிவிடும் .

இவ்வாறு நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ச கருத்துத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நீதிமன்றங்களில் வழக்கு விசாரணைகள் தாமதிக்கப்படுவதால் நிரபராதிகளான பலர் சிறைகளில் நீண்ட காலமாக அடைக்கப்பட்டுள்ளார்கள். அவ்வாறான நீண்ட சிறைவாசத்தின் பின் அவர்கள் குற்றமற்றவர்கள் என விடுவிக்கப்பட்டாலும் சமுதாயத்தின் பார்வையில் அவர்கள் குற்றவாளிகளாகவே தென்படுகிறார்கள்.

வழக்குகளைத் துரிதப்படுத்துவதற்கான தீவிர முயற்சிகளை அரசு மேற்கொண்டு வருகின்றது. நீண்ட காலமாக இழுபறியில் இருக்கும் சிவில் வழக்குகளில் சம்பந்தப்பட்ட இரு சாராரும் சமாதானமாகப் போவதற்கான வழிவகைகள் செய்யப்படவேண்டும்.

குற்றம் செய்த ஒருவர் பாதிக்கப்பட்டவருக்கு உரிய நட்டஈட்டை வழங்குவதற்கும் வழக்கின் சாட்சிகளுக்கான உச்சபட்ச பாதுகாப்பை வழங்கவும் சட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

நாட்டில் நடக்கும் குற்றச் செயல்களைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிறைச்சாலைகளில் ஏற்படும் நெரிசல்களைத் தவிர்ப்பதற்கு வழக்குகள் துரிதமாக விசாரித்து முடிக்கப்படவேண்டியது முக்கியம். குற்றச்செயல்கள் கட்டுப்படுத்தப்படாவிட்டால் நாட்டின் எதிர்காலம் பாழாகிப் போய்விடும்-என்றார். (கு-4)

# பேரிடரினுள் சிக்குண்ட லக்ஸ்மன் யாப்பா மீட்பு

கொழும்பு, மே 27
வெள்ளப் பேரிடரினுள், நிதி இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன சிக்குண்டுள்ளார். பின்பு உலங்குவானூர்தி மூலம் அவர் காப்பாற்றப்பட்டுள்ளார்.



மாத்தறை மாவட்டத்தில் பெரு வெள்ளம் ஏற்பட்டிருந்தது. இந்த வெள்ளப் பாதிப்பிலிருந்து நிதி இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தனவின் வீடும் தப்பவில்லை. அவரின் வீடு 15 அடி அளவு நீரில் மூழ்கியுள்ளது. இதனையடுத்து வீட்டின் மேல் மாடியில், லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன தஞ்சமடைந்தார்.

அவரைக் காப்பாற்றுவதற்குச் சிறப்பு உலங்குவானூர்தி வான் படையினரால் அனுப்பப்பட்டது. அவர் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளார். (கு-5)

# காவலூரில் பேருந்து மீது தாக்குதல்; பெண் உட்பட 15 பேருக்கும் மறியல்

யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறையில் விபத்தில் சிக்கிய பேருந்து மீது தாக்குதல் நடத்தினர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பெண் உட்பட 15 பேரையும் நாளைமறுதினம் வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் மன்று உத்தரவிட்டது.

ஊர்காவற்றுறை பாலக்காட்டு சந்திப் பகுதியில் கடந்த 17ஆம் திகதி தனியார் பேருந்தும் துவிச்சக்கர வண்டியும் மோதி விபத்துக்குள்ளாகின. அதில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த மெலிஞ்சிமுனையைச் சேர்ந்த ஜெயக்குமார் அகிலன் (வயது -18) என்ற இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

விபத்தையடுத்து அந்தப் பகுதியில் கூடிய 200க்கும் மேற்பட்ட பொது மக்கள் விபத்தில் சிக்கிய தனியார் பேருந்து மீது தாக்குதல் நடத்தினர்.

இந்த நிலையில் பேருந்து மீது தாக்குதல் நடத்தினர் என்ற குற்றச் சாட்டில் பெண் உட்பட 15 பேரைக் கைது செய்வதற்கு ஊர்காவற்றுறைப் பொலிஸார் நீதிமன்றில் பிடியாணை உத்தரவைப் பெற்றனர். அதன் அடிப்படையில் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த பெண் உட்பட 15 பேரை பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்தனர்.

15 பேரும் ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் நேற்றுப் பொலிஸாரால் முற்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரணை செய்த பதில் நீதிவான் இ.சபேசன், சந்தேகநபர்கள் அனைவரையும் நாளை மறுதினம் திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (வ-8)

## இடர் நிவாரணத்துக்கு உடனடி நிதி ஒதுக்கீடு

*அதிகாரிகளுக்கு ரணில் பணிப்புரை*

கொழும்பு, மே 27
நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண காலநிலை காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு, நிவாரண உதவிகளை வழங்குவதற்கான நிதியை ஒதுக்கீடு செய்யுமாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அதிகாரிகளுக்குப் பணித்துள்ளார்.
அலரி மாளிகையில் நேற்று இடம்பெற்ற சிறப்புச் சந்திப்பின் போதே, அவர் இந்த பணிப்புரையை விடுத்துள்ளார்.
நாட்டின் பல பாகங்களில் மழை கொட்டித் தீர்க்கின்றது. இதனால் பல இடங்களில் மண் சரிவுகளும், வெள்ள இடர்களும் ஏற்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கான மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. (த-10)

# நேர்மையாக ஆட்சியை பிடிக்கமுடியாமல் சிலர் வங்குரோத்து அரசியல்

*எரான் விக்கிரமரட்ன சாடல்*

கொழும்பு, மே 27
நேர்மையான தேர்தலொன்றின் மூலம் ஆட்சியைப் பிடிக்க முடியாத நிலையிலுள்ள ஒரு சில வங்குரோத்து அரசியல்வாதிகளே இனமுறுகலைத் தூண்டிவிடுகின்றனர். அவர்களின் விசமத்தனத்துக்கு மக்கள் பலியாகிவிடக்கூடாது எனப் பொது நிறுவனங்கள் அபிவிருத்தி பிரதியமைச்சர் எரான் விக்கிரமரட்ன தெரிவித்தார்.
இனக்கலவரங்களைத் தூண்டிவிடுவதன் மூலம் நாட்டில் அமைதியின்மையைத் தோற்றுவிக்க முயலும் இவர்கள், வெளிநாட்டு முதலீடுகள் இலங்கைக்கு வருவதைத் தடுப்பதற்குக் கங்கணங்கட்டி செயற்பட்டு வருவதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.
நாடு துரிதமாக அபிவிருத்தி அடைந்துவருவதால் இத்தகைய விசமிகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. மக்களின் செல்வாக்கை முற்றாக இழந்திருக்கும் இந்த வங்குரோத்து அரசியல்வாதிகள் இனங்களுக்கிடையே முறுகலை ஏற்படுத்தி நாட்டின் அமைதியைக் குலைக்க முயல்கிறார்கள். அவர்களின் இந்த சதித்திட்டத்தை மக்கள் நன்கு புரிந்துகொள்ளவேண்டும் எனவும் அவர் கூறினார். (த-4)

## கிராம அலுவலர் போட்டிப்பரீட்சை முடிவுகள் வெளியாவதில் இழுபறி

யாழ்ப்பாணம், மே 27
கிராம அலுவலர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான போட்டிப் பரீட்சை இடம்பெற்ற போதிலும், பரீட்சைப் பெறுபேறு இதுவரை வெளியாகவில்லை.
பரீட்சை இடம்பெற்று ஒரு வருடம் பூர்த்தி அடைந்துவிட்டது. வடக்கு மாகாணத்தில் 5 மாவட்டங்களிலும் 246 வெற்றிடங்கள் நீண்டகாலமாக நிரப்பப்படாதுள்ளன.
நாட்டில் கிராம அலுவலர்களது சேவை என்பது மிக முக்கியமானது. எனவே வெற்றிடம் உள்ள பகுதிகளுக்கு புதிய கிராம அலுவலர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.
கிராம அலுவலர் பரீட்சைப் பெறுபேறு வெளியாவதற்கும், நியமனங்கள் உரிய காலங்களில் இடம்பெறுவதற்கும் உடன் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனப் பரீட்சார்த்திகள் கேட்டுள்ளனர். (த-50)



## வியாபார நிலையத்துக்கு விசமிகள் சிலர் தீ வைப்பு

வவுனியா, மே 27
வவுனியாவில் வியாபார நிலையம் ஒன்று விசமிகளால் தீ வைக்கப்பட்ட சம்பவம் நேற்று முன் தினம் இரவு 11.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.
வவுனியா ஓயார்சின்னக்குளம் பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையத்தில் தீயை அதானித்த அயலவர்கள் கூக்குரல் இட்டதால் தீ அணைக்கப்பட்டு பெரும் இடர் தவிர்க்கப்பட்டது.
சம்பவம் தொடர்பாக வியாபார நிலைய உரிமையாளர் தெரிவித்ததாவது:
நேற்று (நேற்றுமுன்தினம்) இரவு 8.30 மணிக்குக் கடையை மூடிவிட்டு வீட்டிற்குச் சென்றேன். இரவு 11.00 மணியளவில் அயலவர்களின் கூக்குரல் கேட்டதைத் தொடர்ந்து கடைக்கு ஓடிச் சென்று பார்த்தபோது அது தீப்பற்றி எரிந்துகொண்டிருந்தது. அயலவர்களின் உதவியுடன் உடனடியாகத் தீ அணைக்கப்பட்டது. பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து அவர்கள் அங்கு வந்து விசாரணை மேற்கொண்டனர்-என்றார்.
கடைக்கு அருகில் மதுப்போத்தல்கள் காணப்பட்டதாகவும், மேலதிக விசாரணையை வவுனியா பொலிஸார் மேற்கொண்டுள்ளனர் எனவும் கூறப்பட்டது. (த)

## எழில்றஜன் மீது விசாரணை; மன்னிப்புச் சபை கரிசனை

கொழும்பு, மே 27
போரில் தமது உறவுகளை இழந்த பொதுமக்கள் அவர்களை நினைவு கூருவதற்கு உதவியதற்காக அருட்தந்தை எழில்றஜன் இலங்கைப் பொலிஸாரால் தொடர் துன்புறுத்தல்களுக்கு உள்ளாவதாக பன்னாட்டு மன்னிப்புச்சபை குற்றஞ்சாட்டியுள்ளது.
இரண்டு தடவை எழில்றஜன் விசாரிக்கப்பட்டார். மூன்றாவது தடவையாகவும் அவரை விசாரணைக்குவருமாறு அழைத்த பொலிஸார், பின்னர் அந்த உத்தரவை நீக்கினர் என மன்னிப்புச்சபை சுட்டிக்காட்டியுள்ளது.
இதேவேளை, பொலிஸ் அதிகாரியொருவர் எழில்றஜனை மீண்டும் விசாரணைக்கு அழைத்துள்ளார் என மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.
நினைவுத்தூபியில் பொறிக்கப்பட்ட பெயர் விவரங்களை அந்த அதிகாரி கோரியுள்ளார் என்றும் அது குறிப்பிட்டுள்ளது.
நினைவுத்தூபியில் உள்ள பெயர்களில் விடுதலைப் புலிகளின் பெயர்களும் காணப்படுவதாக அதிகாரிகள் தீர்மானித்தால் அருட்தந்தை எழில்றஜன் இலங்கையின் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுச் சித்திரவதை செய்யப்படலாம் எனவும் மன்னிப்புச் சபை கூறியுள்ளது.
எழில்றஜனின் பாதுகாப்பு குறித்து கரிசனை கொண்டுள்ளதாகவும் மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது. (த)

## பத்தரமுல்லையில் கிறீஸ் மனிதன் கைது

கொழும்பு, மே 27
கொழும்பு, பத்தரமுல்லைப் பகுதியில் நடமாடிய கிறீஸ் மனிதனைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
குறித்த நபர் நிர்வாணமாகப் பத்தரமுல்லையில் பல வீடுகளைச் சுற்றிவரும் காட்சி வீடொன்றில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி கமராவில் பதிவாகியுள்ளது.
கமராவில் பதிவான காட்சிகளைப் பயன்படுத்தி மேற்கொண்ட விசாரணைகளின் மூலம் குறித்த நபரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். வீடுகளில் பொருள்களைத் திருடியுள்ள இவர், பெண்களைத் துஷ்பிரயோகம் செய்யப் பல தடவை முயற்சி செய்துள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.
இவர் மித்தெனிய பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய இளைஞர் எனத் தெரியவந்துள்ளது.
சந்தேகநபரிடம் இருந்து தங்க ஆபரணங்களையும், சில பற்றுச் சீட்டுக்களையும், பெண்களின் உள்ளாடைகள் சிலவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (த-10)

## எம்மிடையேயான பிளவு உயிர்த் தியாகங்களை அர்த்தமற்றதாக்கிவிடும்

*வடக்கு அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவிப்பு*

அபிவிருத்திகளை இன்று இல்லாவிட்டாலும் நாளை நாம் பெற்றுக் கொள்ளமுடியும். ஆனால் ஒற்றுமையை எப்போதும் கடைப்பிடியுங்கள். பிளவுபடுவோமானால் நாம் விதைத்த உயிர்களுக்கு அர்த்தம் இல்லாது போய்விடும். இவ்வாறு வடக்கு மாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.
யாழ்ப்பாணம் தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வரணி கரம்பைக்குறிச்சி மதிஒளி சனசமூக நிலையத்தின் 45 ஆவது ஆண்டு நிறைவையொட்டிய கிராம மட்ட விளையாட்டுப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் மதியொளி விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நமக்குள் உள்ள ஒற்றுமையைக் குலைத்து மத ரீதியாகவும், பிரதேச ரீதியாகவும் பாகுபாடு பார்க்கக்கூடாது. அவ்வாறு பாகுபாடு பார்த்தோமானால் நாம் இத்தனை ஆண்டுகளாக விதைத்த உயிர்களுக்கு அர்த்தம் தேடமுடியாதவர்களாகப் போய்விடுவோம்.
கிராமத்தின் வறுமையான நிலையை மாற்ற ஒவ்வொரு குடும்பங்களும் வாழ்வாதாரத்தில் உயர்த்தப்படவேண்டும். கிராமத்திற்கு பொருத்தமான தொழில் முயற்சியை இனங்கண்டு வாழ்வாதாரத் திட்டம் ஒன்றை எனக்குத் தெரிவியுங்கள். அடுத்த ஆண்டு எனது கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் நிதி ஒதுக்கீட்டின் வாயிலாக ஒரு சிறந்த திட்டத்தை இரண்டு அல்லது மூன்று மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் செய்து தருகிறேன்.
வடமராட்சியையும் தென்மராட்சியையும் இணைக்கும் வீதி ஏற்கனவே 8 மில்லியன் ரூபா செலவில் கணிசமான அளவு புனரமைக்கப்பட்டுள்ளது. வெகு விரைவில் குறித்த வீதி முழுமையாகப் புனரமைக்கப்படும்என்றார்.
இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களான அ.பரஞ்சோதி, வே.சிவயோகன், க.தர்மலிங்கம் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (த-4)

## உடைந்து வீழ்ந்த கட்டடத்தின் உரிமையாளருக்குப் பிணை

கொழும்பு, மே 27
கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கொழும்பு வெள்ளவத்தைப் பிரதேசத்தில் உடைந்து விழுந்த மாடிக் கட்டடத்தின் உரிமையாளர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.
குறித்த கட்டட உரிமையாளர் கடந்த 21 ஆம் திகதி பொலிஸில் சரணடைந்த நிலையில் கைது செய்யப்பட்டுப் பின்னர் நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.
குறித்த வழக்கு நேற்று கல்கிசை நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது சந்தேக நபர் 25 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.
சந்தேகநபர் சார்பில் சட்டத்தரணி நளின் டி. இந்திரதிஸ்ஸ முன்னலையாகினார். வழக்கு எதிர்வரும் 9ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.
கடந்த 18ஆம் திகதி வெள்ளவத்தையில் கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் மூவர் உயிரிழந்துள்ளதுடன் 21 பேர் வரை காயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-10)

## அரச நிறுவனங்கள் எதையுமே நான் கேட்டுப் பெறவேயில்லை


*கூறுகிறார் அமைச்சர் கருணாதிலக*

கொழும்பு, மே 27
மூன்று அரச நிறுவனங்களை வழங்குமாறு தான் அரச தலைவரிடம் கோரிக்கை விடுத்ததாக வெளியான செய்திகளில் எந்தவித உண்மையும் இல்லையெனக் காணி மற்றும் நாடாளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.
காணி அமைச்சின் கீழ், இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனம், அரச அச்சகக் கூட்டுத்தாபனம், அரச அச்சகம் ஆகியவற்றைத் தனக்கு வழங்குமாறு அமைச்சர் கயந்த கருணாதிலக கோரிக்கை விடுத்தார் என ஊடகங்கள் சிலவற்றில் செய்திகள் வெளியாகியிருந்தன.
இந்தச் செய்தி தொடர்பில் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்திருந்த அமைச்சர் கயந்த கருணாதிலக, இந்தச் செய்திகளில் எந்தவிதமான உண்மையும் இல்லையென மறுத்ததுடன், தான் எந்தவொரு அரச நிறு வனத்தையும் தனக்கு வழங்குமாறு கோரவில்லையென்றும் தெரிவித்தார்.
இதுவரை தான் வகித்த பதவிகளோ அல்லது அமைச்சுப் பொறுப்புக்களோ கேட்டுப் பெறப்பட்டவை இல்லை. எனக்கு வழங்கப்பட்ட பொறுப்புக்களை முறையாக, சரியான முறையில் முன்னெடுத்துச் சென்றுள்ளேன்என்றார் அவர். (த-10)

இணுவில் அருள்மிகு
ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார்
திருக்கோயில்
வருடாந்த மஹோற்சவம் - 2017



ஒன்பதாம் திருவிழா - பெரியசப்பறம்
இன்று (27.05.2017) சனிக்கிழமை முற்பகல் 11.15 மணி
கைலாச வாகனத்தில் விநாயகர் வீதியுலா மாலை 7.00 மணி
விநாயகர், சுப்பிரமணியர் இடபவாகன சமேதராக
பெரியசப்பறத்தில் வீதியுலா



## ரமழான் நோன்பு இன்று ஆரம்பம்

கொழும்பு, மே 27
புனித ரமழான் மாதத்துக்கான தலைப்பிறை நேற்றிரவு தென்பட்டுள்ளதாக கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறிவித்தது.
திருகோணமலை நிலாவெளிப் பிரதேசத்தில் ரமழான் மாதத்துக்கான தலைப்பிறை நேற்றிரவு தென்பட்டது. அதன்படி இலங்கை வாழ் முஸ்லிம்களின் நோன்பு இன்று ஆரம்பமாகும் என்று கொழும்பு பெரிய பள்ளி வாசல் தெரிவித்தது. (வ)

## தனிநாட்டுக் கொள்கையை கூட்டு அரசு தோற்கடிக்கும்

### பிரதியமைச்சர் மனுச உறுதி

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தனிநாட்டுக் கொள்கையை தோற்கடிப்பதே எமது அரசின் ஒரே திட்டம் என்று பிரதி அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தன்று சிவாஜிலிங் கம் ஆற்றிய உரையை மகிந்த அணி பெரிதுபடுத்திக் கொண்டிருக்கின்றது. அவரது உரைக்கு அரச தலைவர் மைத்திரி பதில் கூறவில்லை என்று குறை கூறுகிறார்கள். உண்மையில் அது பதில்வழங்கப்பட வேண்டியஒன்றல்ல. சிவாஜிலிங்கம் இவ்வாறு கூறி வருவது ஒன்றும் புதிதல்ல. மகிந்த ஆட்சியிலும் அவர் இவ்வாறு உளறிக்கொண்டுதான் இருப்பார். அதைப் பற்றி நாம் பெரிதாக அலட்டிக்கொள்ளத் தேவையில்லை.
புலிகளின் கோரிக்கையான தனிநாட்டுக் கோரிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைவிடவில்லைஎன்பது உண்மைதான். ஆனால், அந்த நிலைப்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்கு-உண்மையாக்குவதற்கு எமது அரசு இடங்கொடுக்காது. வடக்கு-கிழக்கில் பெரிய அபிவிருத்தித் திட்டங்களை நாம் முன்னெடுத்து வருகின்றோம். அவற்றின் ஊடாக நாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் தனி நாட்டுக் கொள்கையை தோற்கடிப்போம்.
வடக்கு மாகாண சபைக்கு ஒதுக்கும் நிதியை அவர்கள் திருப்பி அனுப்பி நாம் அந்த மக்களுக்கு எதையும் செய்வதில்லை என்று உலகுக்குக் கூறி வருகின்றனர். ஜி.எஸ்.பி பிளஸ்வரிச்சலுகை இலங்கைக்குக் கிடைப்பதைக்கூட அவர்கள் எதிர்த்தனர்-என்றார். (து-3)

## அறிவுரை கூறிய தாயை கத்தியால் குத்த முயன்ற மகனுக்கு வகுப்புத் தடை

கொழும்பு, மே 27
பாடசாலை நண்பர்களுடன் சேர்ந்து போதைப்பொருள் பாவித்து வந்த மகனுக்குப் புத்திமதி சொன்ன தாயை அவர் கத்தியால் குத்த முயன்றுள்ளார். அந்த மாணவனுக்குப் பாடசாலை நிர்வாகம் ஒரு வாரம் வகுப்புத் தடை விதித்துள்ளது.
இந்தச் சம்பவம் அநுராதபுரத்தில் நடந்துள்ளது.
பாடசாலையின் ஒழுக்காற்றுக் குழு கடந்த செவ்வாய்க்கிழமை ஒன்பதாம் வகுப்பு மாணவர்களிடையே நடத்திய திடீர் சோதனையின்போது பல மாணவர்கள் தங்களது நாக்குகளின் கீழ் "தூள்" என அழைக்கப்படும் இந்தப் போதை மாத்திரையை வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. இதனையடுத்து அந்த மாணவர்கள் அடுத்த நாள் தமது பெற்றோரைப் பாடசாலைக்கு அழைத்து வரவேண்டுமென ஆசிரியர்கள் உத்தரவிட்டனர்.
அன்றைய தினம் இரவு தனது தாயிடம் இந்த விடயத்தை மாணவன் கூறியதும் அதிர்ச்சியடைந்த தாய், போதைப் பழக்கம் வேண்டாமென மன்றாடியிருக்கிறார். இதனால் கோபமடைந்த மாணவன் கூரிய கத்தியொன்றால் தாயைக் குத்த முயற்சி செய்துள்ளார். கத்திக் குத்திலிருந்து ஒருவாறு தப்பிக் கொண்ட தாய், அடுத்த நாள் பாடசாலைக்குச் சென்று தனது மகன் செய்த காரியத்தை அழுது புலம்பியவாறே கூறியிருக்கிறார். மாணவனின் சிறு வயதையும், அவரது எதிர்காலத்தையும் கருத்திற்கொண்ட பாடசாலை நிர்வாகம் அவரைச் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தாமல் ஒரு வாரம் வகுப்புத்தடை விதித்தது. (து-4)

## மென்பானத்திற்குள் சிலந்தி மறுக்கிறது உற்பத்தி நிறுவனம்



யாழ்ப்பாணம், மே 27
மென்பானத்திற்குள் சிலந்தி இருந்ததாகத் தமது நிறுவனத்தின் தயாரிப்புக்கு எதிராகச் செய்யப்பட்ட முறைப்பாடு திட்டமிடப்பட்ட ஒரு செயற்பாடு என்று நிறுவனத்தின் உரிமையாளர் தெரிவித்தார்.
கடையில் கொள்வனவு செய்யப்பட்ட மென்பானத்துக்குள் சிலந்தி இருந்தது என்று தெரிவித்து பாவனையாளர் அதிகார சபையிடம் பாவனையாளர் ஒருவரால் முறையிடப்பட்டது. அந்த மென்பானத்தை உற்பத்தி செய்யும் சிறுப்பிட்டியில் உள்ள நிறுவனத்தின் உரிமையாளர் அது தொடர்பில் விளக்கமளித்துள்ளார்.
அவர் தெரிவித்துள்ளதாவது:
சிறுப்பிட்டித் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் மென்பானம் உரிய சுகாதார மற்றும் சரியான உற்பத்திப் படிமுறைகளூடாகவே தயாரிக்கப்பட்டுச் சந்தைப்படுத்தப்படுகிறது.
இவ்வாறான படிமுறைகளுக்கு ஊடாக உற்பத்தி செய்யப்படும் மென்பானத்திற்குள் பிற பொருள்கள் உள்நுழைவதற்குச் சாத்தியம் இல்லை.
ஒழுங்கு முறையான உற்பத்திப் படிமுறைகளைக் கொண்ட உற்பத்திக்குள் சிலந்தி உட்புகுத்தப்பட்டது என்பது திட்டமிட்ட முறையில் உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் வளர்ச்சியை மழுங்கடிக்கும் செயலாகவே கருதப்படுகின்றது- என்றார்.

## வாழ்வு தந்த வாஸ் நாடக அரங்கேற்றம் இன்றும் நாளையும்

யாழ்ப்பாணம், மே 27
திருமறைக் கலாமன்றத்தின் தயாரிப்பில் 'வாழ்வு தந்த வாஸ்' எனும் வரலாற்று நாடகம் இன்றும் நாளையும் யாழ்ப்பாணம் முதன்மை வீதியில் அமைந்துள்ள கலைத்தூது மண்டபத்தில் அரங்கேற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டது.
இந்த நாடகம் கடந்த 21ஆம் திகதி மேடையேற்றப்பட இருந்த நிலையில் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டிருந்தது. இந்த நிலையிலேயே இன்று சனிக்கிழமை இந்த நாடகம் மேடையேற்றப்படும் என்று ஏற்பட்டாளர்கள் தெரிவித்தனர். (வ-21)

## கருத்தரங்கு பிற்போடப்பட்டது

வடக்கு மாகாணத்தில் ஜி.சீ.ஈ. உயர்தர கணித, விஞ்ஞான பிரிவு மாணவர்களுக்கு நாளைஒழுங்கு செய்யப்பட்டிருந்த பௌதீகவியல் கருத்தரங்கு பிற்போடப்பட்டுள்ளது. ஜி வெண்டர் வெளியீட்டகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கருத்தரங்கு எதிர்வரும் ஜீலை 2ஆம் திகதி யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-ரி)

## பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையின் தலைமையகக் கட்டடத் திறப்பு விழா

பச்சிலைப் பள்ளி பிரதேச சபையால் பளை நகரப் பகுதியில் 14.7 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட தலைமையக இருமாடிக் கட்டடமும் சபை எல்லைக்குட்பட்ட முள்ளிப்பற்று உப அலுவலக பிரிவில் 7.6 மிலலியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இயக்கச்சி பொதுச் சந்தை கடைத் தொகுதியும் இன்று திறந்துவைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.
பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையின் தலைமையகக் கட்டடம் முற்பகல் 9.30 மணிக்கும் இயக்கச்சி சந்தை மற்றும் கடைத் தொகுதி மு.ப 10.30 மணிக்கும் திறந்து வைக்கப்படவுள்ளன.
பிரதேச சபைச் செயலாளர் திருமதி செ. அனுஷியா தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ப.அரியரத்தினம் சு.பசுபதிப்பிள்ளை வை.தவநாதன் ஆகியோரும் கலந்து கொள்வர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இராணுவச்...

புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டது. அது பற்றிய விசாரணைகள் இழுபறி நிலையிலிருந்து வருகின்றன. இது நாட்டின் தேசிய பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தல்.
இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.
நாடாளுமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை பிரதிச் சபாநாயகர் திலங்க சுமதிபால தலைமையில் கூடியது. வாய்மூல விடைக்கான கேள்விநேரத்தில் கடந்த அரச தலைவர் தேர்தல் முடிவுகளை இடைநிறுத்தம் செய்ய மேற்கொள்ளப்பட்ட சதித் திட்டம் குறித்து முன்னுரிமை அடிப்படையில் புலனாய்வு செய்யுமாறு கோரி அமைச்சர் மங்கள சமரவீர செய்த முறைப்பாட்டின் விசாரணைகள் தொடர்பில் நீதி அமைச்சரிடம் கம்மன்பில கேள்விகளை எழுப்பியிருந்தார்.
இதற்கு பிரதி நீதி அமைச்சர் துஷ்மந்த மித்ரபால பதில்கள் வழங்கினார். எனினும், உரிய பதில்களைக் கிடைக்கவில்லையென விமர்சித்து இடையீட்டுக் கேள்வியொன்றை எழுப்பினார் உதய கம்மன்பில.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்த விடயம் தொடர்பில் சட்டம், ஒழுங்கு அமைச்சரிடம் கேட்கும்போது சட்டமா அதிபரின் ஆலோசனை கிடைக்கவில்லை எனக் குறிப்பிடுகின்றார். நீதி அமைச்சரைக் கேட்கும் போது பொலிஸால் தகவல் அனுப்பப்படவில்லை எனத் தெரிவிக்கின்றார். இரண்டு பக்கத்தாலும் பந்து பரிமாற்றம் செய்யப்படுகின்றது. நாட்டின் முக்கியமான ஒருவர் நிதி அமைச்சர் மங்கள சமரவீர. அவர் அயலுறவு அமைச்சராக இருக்கும்போது நாட்டின் தேசிய பாதுகாப்புக்கும் மற்றும் ஜனநாயகத்துக்கும் அச்சுறுத்தலான இராணுவ சதிப் புரட்சித் திட்டம் குறித்து முறைப்பாடு செய்துள்ளார். அவர் செய்த முறைப்பாட்டை விசாரணை செய்வதில் சட்டமா அதிபரும், பொலிஸாரும் இவ்வாறு இழுத்தடிப்பு செய்வார்களாயின் நாட்டின் தேசிய பாதுகாப்பு உண்மையிலேயே பெரும் அச்சுறுத்தலில் உள்ளது என்றார்.
வழக்குத் தொடர்வதற்குத் தேவையான தகவல்கள் உள்ளதா என்பது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களம் திருப்தியடைய வேண்டும். அந்தத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளவே பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுக்கின்றனர். விசாரணை ஒருபோதும் முடக்கப்படவில்லை என்றார் பிரதி அமைச்சர் துஷ்மந்த மித்ரபால.
இந்த விவகாரத்தின் பாரதூரமான தன்மையைக் கருத்திற்கொண்டு முன்னுரிமை அடிப்படையில் விசாரணை நடத்த சட்டமா அதிபருக்கு ஆலோசனை வழங்கப்படுமா? என தனது இரண்டாவது மேலதிக கேள்விநேரத்தில் உதய கம்மன்பில கேள்வி எழுப்பினார்.
சட்டமா அதிபர் திணைக்களத்தில் கடந்த காலங்களில் தாமதமான நிலை காணப்பட்டது. இது எமக்குத் தெரியும். அதனை நிவர்த்திசெய்ய நாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளோம். உங்களது கோரிக்கை சம்பந்தமாக நாங்கள் ஆராய்கின்றோம்" எனப் பிரதி அமைச்சர் துஷ்மந்த மித்ரபால வழங்கிய பதிலுக்கு தனது ஆட்சேபனையை வெளியிட்ட உதய கம்மன்பில "வாக்காளர்களுக்கு வழங்கும் 'ஆராய்கின்றோம்' என்ற பதிலையே அவர் எனக்கும் வழங்கியுள்ளார். எனவே, எனது மூன்றாவது மேலதிக கேள்வியைக் கேட்பதிலிருந்து விலகியிருக்கின்றேன்" என்று கூறினார். (து-4)

### பேரிடர்...

ஆஸ்திரேலியாவிலிருந்து பணிப்புரை விடுத்துள்ளார்.
இது தொடர்பில் அரச தலைவர் ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள பத்திரிகை அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:
மூன்று நாள் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டு ஆஸ்திரேலியா சென்றுள்ள அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, நேற்றுக் காலை உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன மற்றும் அரச தலைவரின் செயலாளர் பி.பீ. அபேகோன் ஆகியோரை தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான நிவாரணங்களை வழங்குவதற்கு உடனடி செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு ஆலோசனை வழங்கினார்.
நிவாரண நடவடிக்கைகளுக்குத் தேவையான நிதி ஏற்பாடுகளை நிதி அமைச்சிலிருந்து பெற்றுக்கொள்ளுமாறு அரச தலைவர் தெரிவித்துள்ளார்.
இடருக்குள்ளான மக்களை விடுவிக்கும் நடவடிக்கைகளுக்கு முப்படையினரின் உதவியைப் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவித்துள்ள அரச தலைவர், இடம்பெயர்ந்த மக்களுக்குத் தேவையான நலன்பேணல் நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாகக் கண்காணித்துவருமாறும் அரச தலைவரின் செயலாளர் பி.பீ. அபேகோனுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். (து-5)

### மீனவர்...

செல்லும் போது தொடர்பாடல் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களை எடுத்துச் செல்லுமாறும் ஒரு போதும் தொடர்பால் கருவிகளை செயலிழக்கச் செய்ய வேண்டாம் என்றும் கடற்றொழில் அமைச்சு மீனவர்களிடம் கேட்டுக் கொண்டுள்ளது. (வ-5)

# கிந்துப்பிட்டி மயானத்தின் சுற்று மதில் முற்றாக இடிப்பு

யாழ்ப்பாணம், மே 19

புத்தூர்மேற்கு, சிறுப்பிட்டி கிந்துப் பிட்டி மயானத்துக்குப் புதிதாக அமைக்கப்பட்ட சுற்றுமதில் இனந் தெரியாதோரால் நேற்று முன்தினம் இரவு இடித்து வீழ்த்தப்பட்டது.

புத்தூர் மேற்கு, சிறுப்பிட்டி கிந்துப் பிட்டி மயானத்தை அகற்றுமாறு ஒரு தரப்பினர் கோரிக்கைவிடுத்து வருகின்றனர். எனினும் அதனை அகற்ற முடியாது என்று மற்றொருதரப்பினர்உறுதியாக உள்ளனர். அவர்கள் நீதிமன்றின் அனுமதியுடன் மயானத்துக்கு சுற்று மதில் அமைத்து வருகின்றனர்.

நீதிமன்ற அனுமதியுடன் அமைக்கப்பட்ட சுற்று மதிலே நேற்றுமுன்தினம் இரவு இடித்து வீழ்த்தப்பட்டது. சம்பவம் தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (வ-37)



## மிருதங்க அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், மே 27

க.ப.சின்னராசாவின் மாணவனாகிய வசீகரன் ஜீவிதனின் மிருதங்க அரங்கேற்றம் இன்று சனிக்கிழமை பி.ப.3.30 மணிக்கு மானிப்பாய் பட்டின சபை மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ்ப்பாண மறை மாவட்ட ஆயர் கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை ஆகியோர் கலந்து கொண்டு ஆசி வழங்குவர் என்று தெரிவிக்கப்பட்டது.

(வ-10)

# திக்கம் படுகொலையின் 30ஆவது நினைவு நாளை

யாழ்ப்பாணம், மே 27

வடமராட்சி திக்கம் கிராமத்தில் . இராணுவத்தினரின் எறிகணைக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட 22 பேரின் 30ஆவது நினைவுகூரலும் தியாக தீபங்கள் மலரின் மீள் வெளியீடும் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு திக்கம் கலாச்சார மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

1987ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையின் போது எறிகணைக் குண்டு வீச்சுக்களாலும் எரிகுண்டுத் தாக்குதலாலும் திக்கம் கிராமத்தில் மூன்று நாட்களில் பிஞ்சுக் குழந்தைகள் உட்பட 22 பேர் உயிரிழந்தனர். இந்தச் சம்பவத்தால் பிள்ளைகளை இழந்த பெற்றோர்கள், பெற்றோர்களை இழந்த பிள்ளைகள், குடும்பத் தலைவர்களை இழந்த மனைவிகள் என பலதரப்பட்டவர்களின் உயிர்களும் காவு கொள்ளப்பட்டு திக்கம் கிராமமே சோகத்தில் ஆழ்ந்திருந்தது.

இந்த உறவுகளின் உள்ளக் குமுறல்களைத் தாங்கியவாறு "தியாக தீபங்கள் " எனும் மலர் வெளியிடப்பட்டது.

இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (வ-422)

## வைகாசி பொங்கல்

அளவெட்டி, மே 26

மல்லாகம் பெரியநாயகி தாயார் பெரியதம்பிரான் திருக்கோயில் திருமஞ்சோலை வருடாந்த வைகாசி பெரும் பொங்கல் விழா நாளை ஞாயிற்றுக்கிழமை நண்பகல் தீ மிதிப்பும் மாலை பொங்கலும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த விழாவின் முதல் நாளான இன்று சாடிமனை உற்சவம் இடம் பெறும். 8ஆம் மடை எதிர்வரும் ஜூன் மாதம் 3ஆம் திகதி நடைபெறும். இந்த நாள்களில் சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்று சுவாமி வீதியுலா வருவார் என்று ஆலய நிர்வாக சபையினர் தெரிவித்தனர்.

(வ36)

## பொதுக் கூட்டம்

சாவகச்சேரி, மே 27

சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு சிறிமுருகன் சனசமூக நிலையப் பொதுக் கூட்டம் இன்று சனிக்கிழமை மாலை 5மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

நிலையத் தலைவர் சு.தர்சன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு விருந்தினர்களாக சாவகச்சேரி நகரசபை சனசமூக அபிவிருத்தி அலுவலர் செல்வி தெஷாலினி, பிரிவு கிராம அலுவலர் ப. நிரஞ்சன் ஆகியோர் கலந்து கொள்வர். நிகழ்வில் சாதனையாளர் கௌரவிப்பும் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

(வ-9)

# வவுனியாவில் 4 லட்சம் கிலோ பப்பாசி ஏற்றுமதி

முல்லைத்தீவு, மே 27

வவுனியா வடக்குப் பழப்பயிர்ச் செய்கையாளர் கூட்டுறவுச் சங்கத்தால் மாதம் தோறும் 4 இலட்சம் கிலோகிராம் பப்பாசிப்பழம் ஏற்றுமதி செய்யப்படுகிறது என்று சங்கத்தின் தலைவர் தெரிவித்தார்.

"வவுனியா வடக்கு நெடுங்கேணிப் பிரதேசத்தில் பப்பாசிப் பயிர்ச்செய்கையில் அதிகளவிலானோர் ஈடுபட்டுள்ளனர். அதனால் பப்பாசிப்பழத்தின் விலை வெகுவாக வீழ்ச்சி அடைந்துள்ளது.

பொருளாதார ரீதியில் நாம் பாதிக்கப்பட்டுள்ளோம். ஒரு கிலோ கிராம் பப்பாசிப்பழம் எட்டு ரூபா தொடக்கம் பத்து ரூபாவுக்கு கொள்முதல் செய்யப்படுகிறது. பழங்களைச் சந்தைப்படுத்த முடியவில்லை" என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

இது தொடர்பாக வவுனியா வடக்குப் பழப்பயிர்ச்செய்கையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரிடம் கேட்ட போது,

'எங்களிடம் ஒப்பந்தம் செய்யப்பட்ட பயனாளிகளிடம் இருந்து நாங்கள் கொள்முதல் செய்யும்போது விலையில் எந்தவிதமாற்றமும் இல்லை. தற்போதும் நாங்கள் ஒரு கிலோ கிராம்பப்பாசிப்பழத்தை 30 ரூபாவுக்குக் கொள்முதல் செய்கின்றோம். ஏற்றுமதிக்குத் தகுந்தாற்போல்பழங்களை உற்பத்தி செய்வது தொடர்பாகப் பயனாளிகளுக்கு ஆலோசனை கொடுத்துள்ளோம். ஏற்றுமதி செய்யப்படும் பழங்கள் இரண்டு தொடக்கம் இரண்டரைக்கிலோ கிராமுக்குள் இருப்பதே பொருத்தமானது. வெளியில்உள்ளசில விவசாயிகள் உரங்களின் பாவனையை அதிகரித்து ஒரு பழத்தின் நிறையை 5 கிலோ கிராம் வரை அதிகரிக்கச் செய்துள்ளார்கள். ஏற்றுமதிக்காக கொள்முதல் செய்யப்படும் பழங்கள், ஏற்றுமதிக்கு ஏற்றாற்போல் கீறல்கள் விழாதவையாக, பழங்கள் காயாது இருக்க வேண்டும்.

இவற்றைப் பின்பற்றாது செய்யப்படும் பழங்கள் உள்ளூர்ச் சந்தைப் பெறுமதியிலேயே கொள் முதல் செய்யப்படும்.

கால் ஏக்கரில் பப்பாசிச் செய்கை மேற்கொண்டுள்ளவர்கள் ஏற்றுமதிக்காகப் பழங்களைத் தருகின்ற போது, சுமார் 40 ஆயிரம் ரூபா வரை வருமானம் ஈட்டக்கூடியதாக உள்ளது.

நாங்கள் ஒப்பந்தம் செய்த நிறுவனத்துக்கு மாதம் 4 இலட்சம் கிலோ கிராம் பழங்கள் கொடுக்க வேண்டும். எமக்கு அதனைப் பூர்த்தி செய்வதற்கு உற்பத்தி போதுமானதாக இல்லை.

எம்மால் வழங்கப்படும் உரிய ஆலோசனைகளைப் பின்பற்றிச் செய்கையில் ஈடுபடும் போது, பயனாளிகள் மட்டுமல்லாது அனைத்துப் பப்பாசிச் செய்கையாளர்களும் பயனடைய முடியும்." எனக் குறிப்பிட்டார். (ஐ -7)

## மாதகல் மேற்குக்குக் குடிதண்ணீரை வழக்குவதற்கான பணிகள் ஆரம்பம்

### நீர் வழங்கல் சபை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 27

"மாதகல் மேற்குப் பகுதிக்குக் குடிதண்ணீர் விநியோகிப்பதற்கான குழாய்கள் பொருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் ஜூலை மாத இறுதிக்குள் அந்தப் பணிகள் நிறைவடையும்"

இவ்வாறு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ்ப்பாண மாவட்டப் பணிப்பாளர் ஜெகதீசன் தெரிவித்தார்.

"யாழ்ப்பாண மாவட்டத்தில் பொது மக்களுக்கு சீரான குடிதண்ணீர் விநியோகத்தை வழங்குவதற்காக பல்வேறு பகுதிகளில் குழாய்கள் பொருத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

வடமராட்சியில் துன்னாலை, இன்பர்சிட்டி, சக்கோட்டை மற்றும் வலிகாமத்தில் மாதகல் மேற்கு ஆகிய பிரதேசங்களில் தற்போது குழாய்கள் பொருத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இவற்றில் இன்பர்சிட்டி, சக்கோட்டை மற்றும் மாதகல் மேற்கு ஆகிய பகுதிகளுக்கான குழாய்கள் பொருத்தும் பணிகள் எதிர்வரும் ஜூலை மாத இறுதியில் நிறைவடைந்து விடும். துன்னாலைப் பகுதிக்கான குழாய்கள் பொருத்தும் பணிகள் ஓகஸ்ட் மாதம் நிறைவடையும்.

குழாய்கள் பொருத்தும் வேலைகள் நிறைவடைந்ததும் குறித்த பகுதிகளுக்கான குடிதண்ணீர் விநியோகம் ஆரம்பமாகும். மாதகல் மேற்குப் பகுதிக்கு 10 கிலோ மீற்றர் தூரம் குழாய்கள் பொருத்தும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

அந்தப் பகுதிக்கான குடிதண்ணீரைக் கிணற்றிலிருந்து வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இன்பர்சிட்டி, சக்கோட்டை ஆகிய பகுதிகளுக்கான குடிதண்ணீரை பருத்தித்துறைப் பிரதேசத்திலுள்ள நீர்த் தாங்கியில் இருந்து வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்" என்று தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ்ப்பாண மாவட்டப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

(வ-ரி)

## விதை உற்பத்திச் சங்கத்தால் குடாநாட்டு விவசாயிகளிடமிருந்து 3,000 புசல் விதை நெல் கொள்வனவு

யாழ்ப்பாணம்,மே27

யாழ்ப்பாணக் குடாநாட்டு விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் இந்த ஆண்டு பெரும்போக நெற்செய்கைக்காக மூவாயிரம் புசல் விதை நெல்லை விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்துள்ளது என்று சங்கத்தின் பொது முகாமையாளர் ரி.ரவிமயூரன் தெரிவித்தார்.

"சங்கம் ஐயாயிரம் புசல் விதை நெல்லை கொள்வனவு செய்வதற்குத் திட்டமிட்டிருந்தது. எனினும் நெல்லுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டதால் போதியளவு விதை நெல்லைக் கொள்வனவு செய்ய முடியவில்லை.

கடந்த போகத்தின் போது போதிய மழை வீழ்ச்சி இன்மையால் நெற்செய்கை பாதிக்கப்பட்டது. இதன் காரணத்தால் நெல்லைப் போதிய அளவு பெற்றுக்கொள்ள முடியாத நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

கூடுதலாகப் பதிவு செய்யப்பட்ட விவசாயிகளிடம் இருந்தே விதை நெல் பெறப்பட்டு வந்தன.

கொள்வனவு செய்யப்பட்ட இந்த விதை நெல் சுத்தம் செய்யப்பட்டு ஆராய்ச்சிக்கு உட்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது" என்று யாழ்ப்பாணக் குடாநாட்டு விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த ஆண்டில் பெரும்போக நெற்செய்கையின் போது விதை நெல்லுக்கு பற்றாக்குறை ஏற்படும். இதன் காரணத்தால் அனேகமான செய்கையாளர்கள் தற்போதே நெல்லை கொள்வனவு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-17)



## சிறப்புற நடந்த ஏழிசை மாலை

தென்மராட்சி மே.27

தென்மராட்சி கல்வி வலயத்தின் இசை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இணைந்து வழங்கும் 'ஏழிசை மாலை 10' இசை நிகழ்வு நேற்று சாவகச்சேரி கலாமன்ற கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்வித் திணைக்கள மேலதிக கல்விப் பணிப்பாளர் ( பொது நிர்வாகம் ) திருமதி அ.சாந்தசீலனும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி தே.பாவும் கலந்து கொண்டனர். கௌரவ விருந்தினர்களாக ஓய்வுநிலை அதிபர் க.அருந்தவபாலன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைப் பீட இசைத்துறை மூத்த விரிவுரையாளர் கலாநிதி சி.மகேந்திரன், தென்மராட்சி கல்வி அபிவிருத்திக் கழகச் செயலாளர் யோ.ஜெயக்குமார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் சங்கீத வித்துவான் பொன்.ஸ்ரீவாமதேவனின் இசைக்கச்சேரி, தென்மராட்சி கல்வி அபிவிருத்திக் கழகத்தின் தமிழ் மரபுக் கலாலய மாணவர்களின் வயலினிசை, மிருதங்க இசை தென்மராட்சி கல்வி வலய இசை ஆசிரியர்களின் கூட்டு நிகழ்வாக காற்றினில் வரும் கீதங்கள் மெல்லிசை ஆகியவை இடம்பெற்றன. (வ -9 )

# இனவாத செயல்களுக்கு முற்றுப்புள்ளி இடவேண்டும்

## அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் வலியுறுத்து

அம்பாறை, மே 27

நாட்டில்விஸ்வரூபமெடுத்திருக்கும் இனவாத, மதவாத வெறித்தனச் செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். ஞானசார தேரர் போன்றவர்களின் சிறுபான்மைச் சமூகங்களுக்கெதிரான செயற்பாடுகள் அடக்கப்பட வேண்டும்.

இவ்வாறு அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத் தலைவரும் தொழிற்சங்கவாதியுமான எஸ். லோகநாதன் தெரிவித்தார்.

நாட்டின் சமகால நிலைமைகள் தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் உள்ளதாவது, அண்மைக்காலமாக நாட்டில் சிறுபான்மைச் சமூகங்களுக்கெதிராக முன்னெடுக்கப்பட்டுவரும் இனவாத, மதவாத வெறித்தனச் செயற்பாடுகள் பெரிதும் கவலையளிப்பதாகவேயுள்ளன.

குறிப்பாகச் சிறுபான்மையின முஸ்லிம்களுக்கெதிராக அண்மைக்காலமாகக் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறைகள், இனவாதச் செயற்பாடுகள் எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாதவையாக அமைந்துள்ளன.

கூட்டு அரசை மலரச் செய்யும் நோக்குடன் மறைந்த சோபித தேரர் ஒன்று சேர்த்த அமைப்பில், எமது சங்கமும் இணைந்து கொண்டது. அந்த வகையில் நடக்கும் சம்பவங்கள் அதிர்ச்சியையும், விசனத்தையும் தருகின்றன.

இந்த நாட்டின் சிறுபான்மைச் சமூகங்களான தமிழ், முஸ்லிம் மக்கள் ஒருமித்த வைராக்கியத்துடனும் நம்பிக்கை கொண்டுமே இந்த கூட்டு அரசு மலர வழிவகுத்தனர்.

ஆனால் இந்தப் பெருநம்பிக்கைக்குக் குந்தகம் ஏற்படும் வகையில் இனவாத மதவாத செயற்பாடுகள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.

அடிக்கடி ஞானோதயம் ஏற்படுபவர்போல் ஞானசார தேரர் சிறு பான்மையின மக்களுக்கெதிரான, குறிப்பாக முஸ்லிம்களுக்கெதிரான நச்சுக் கருத்துக்களை வெளிப்படுத்தி வருகின்றார்.

குறிப்பாக முஸ்லிம் மக்களின் உயிரிலும் மேலான அல்லாஹ்வையும், கண்மணி றசூலையும் நிந்திக்குமளவுக்கு இந்த ஞானசாரதேரரினதும், அவருக்குப் பக்கவாத்தியம் இசைக்கும் இராவண பலய போன்ற இனவாத அமைப்புகளினதும் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

### கோழைத்தனம்

அதே வேளை ஒளிந்திருந்தும் இரவு வேளையிலும் முஸ்லிம்களின் பள்ளிவாசல்கள் மீதும், முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்கள் மீதும் கோழைத்தனமான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை வன்மையாகக் கண்டிக்கத்தக்கதாகும்.

இவற்றையெல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டு நாம் வாழாவிருக்க முடியாது. முஸ்லிம் மக்கள் இன்று நாடு முழுவதும் அச்சம், பதற்றம், பீதி, ஆத்திரம், ஆவேசம் கொண்டவர்களாகவுள்ளனர். அது மட்டுமன்றி இளைஞர்கள் கொதிப்படைந்த நிலையிலுமுள்ளனர்.

### முடிவு கட்டுக

எனவே கூட்டு அரசு இத்தகைய இனவாதச் செயற்பாடுகளை முற்றாக ஒழிக்க முன்வருவதுடன் பின்புல சக்திகளின் தூண்டுதலால் இன, மத, வெறியாட்டம் ஆடும் சூத்திரதாரிகள் மீது காத்திரமான நடவடிக்கைகளை எந்த வித தயக்கமுமின்றி எடுக்க வேண்டும். அதிலும் நாட்டை இன்று அல்லோல கல்லோலப்படுத்தியுள்ள பொதுபல சேனவின் ஞானசாரதேரரின் இனவாத மதவாத பேயாட்டத்தை அடக்க வேண்டும். எப்போதும் பொறுமை காத்துவரும் சிறுபான்மைச் சமூகங்களை எள்ளி நகையாட முனையும் இந்த இனவாதச் சக்திகளின் எதிர்பார்ப்புக்கள் ஒருபோதும் நிறைவேறப் போவதில்லை.

### நம்பிக்கை இழக்கவில்லை

கூட்டு அரசு மீது சிறுபான்மையின மக்கள் குறிப்பாக முஸ்லிம்கள் இன்னமும் நம்பிக்கை இழக்கவில்லை. எனவே சட்டத்தையும் ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்ட வேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது.

இதனை அரசு காத்திரமாக முன்னெடுத்துசிறுபான்மையின மக்களின் அரசு மீதான நம்பிக்கை வீண் போகவில்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

அதேவேளை அரசின் ஸ்திரத்தன்மையை மலினப்படுத்த முன்னெடுக்கப்படும் மறைமுக சதி நடவடிக்கையின் ஓர் அங்கமாகவே இந்த இன, மத, வெறியாட்டங்கள் அமைந்துள்ளனவா என்பதையும் அரசு கண்டறிந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றுள்ளது.

(ஐ-30)

## நல்லூரில் இன்று தொழிற்சந்தை

யாழ்ப்பாணம், மே 27

மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் அனுசரணையுடன் நல்லூர் பிரதேச செயலகத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட தொழிற்சந்தை நிகழ்வு (வேலை வாய்ப்புக்கான நேர்முகத்தேர்வு) இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் பிரதேச செயலகத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

தொழில்தேடும் இளையோர் தேசிய அடையாள அட்டை, கல்விச் சான்றிதழ் மற்றும் சுயவிவரக் கோவையுடன் தொழிற்சந்தைக்குச் சமுகம் தருமாறு மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களம் கேட்டுள்ளது.

(வ)

## சமகால உலக விவாதங்கள் சிறப்புக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 27

சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் ஏற்பாட்டில் "சொந்த ஒரு வயலுக்காக - தென் ஆசியாவில் பால்நிலையும் நில உரிமையும்" என்ற தலைப்பில் சமகால பன்னாட்டு விவாதங்கள் தொடர்பான சிறப்புக் கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை பி.ப 4 மணியளவில் இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

"அறிமுக உரையினை நியந்தினி கதிர்காமர் வழங்குவார். பீனா அகர்வால் எழுதிய 'சொந்த ஒரு வயலுக்காக' - தென் ஆசியாவில் பால்நிலையும் நில உரிமையும் என்ற நூலில் பெண்களுக்கும், நில சொத்துரிமைக்கும் உள்ள தொடர்பைப் பற்றி ஆராயப்படுகின்றது. அவர் பெண்களின் நிலமையை பாதிக்கும் மிக முக்கியமான பொருளாதாரக் காரணி, சொத்தின் மீது கட்டளையிடும் பாலின இடைவெளி, என்று வாதிடுகின்றார். எனினும் பொருளாதாரப் பகுப்பாய்வுகள் மற்றும் பெண்களைப் பற்றிய அபிவிருத்திக் கொள்கைகள் யாவும் நீண்ட காலமாக வேலைவாய்ப்பையே மையப்படுத்தியுள்ளன.

பொருளாதார, இனத்துவ, வரலாற்று, அரசியல் மற்றும் சட்ட ஆதாரங்களை ஈர்த்து வரலாற்று ரீதியாக பெண்கள் அனுபவித்த சொத்து உரிமைகள், காலப்போக்கில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் சமகால சட்டத்தின் கீழ் அவர்களின் உரிமைகள் பற்றி கலந்துரையாடுகிறது. மேலும் பெண்களின் இரகசிய மற்றும் வெளிப்படையான எதிர்ப்பின் வடிவங்களை ஆராய்கிறது. இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம் மற்றும் இலங்கை ஆகிய 5 நாடுகளின் ஆய்வுகளை உள்ளடக்கிய இந்தப் புத்தகத்தின் கோட்பாட்டு ரீதியான கலந்துரையாடல்கள் இலங்கையில் நிலவி வரும் நிலம் சார்ந்த போராட்டங்களை விளங்கிக்கொள்ள பொருத்தமானதாக இருக்கின்றன.

இந்தப் புத்தகத்தின் சாராம்சம் தமிழிலே முதல் நாற்பது நிமிடங்களுக்குள் வழங்கப்படும். அதனை அடுத்துள்ள 90 நிமிடங்களுக்கு கிராமியப் பொருளாதாரம், நிலவுடமை மற்றும் பெண்களுக்கு உள்ள தொடர்பை பற்றியும் நிலம் சார்ந்த போராட்டங்கள் பற்றியும் ஒரு கலந்துரையாடல் இடம்பெறும்" என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

(வ)

### நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 600 | 800 | 800 | 500 |
| நண்டு | 400 | 300 | 400 | 300 |
| கணவாய் | 600 | 800 | 800 | 800 |
| பாரை | 600 | 600 | 700 | 800 |
| சுறா | 500 | – | 700 | – |
| சீலா | 400 | 600 | 500 | 500 |
| விளை | 500 | 300 | 500 | 600 |
| முரல் | 400 | 400 | 400 | – |
| கும்பிளா | 400 | 400 | 400 | 500 |
| கிளாக்கன் | 800 | – | 500 | 500 |
| ஓரா | 350 | 400 | 500 | – |
| திரளி | 250 | 200 | 200 | 200 |
| நகரை | 300 | 150 | 400 | 300 |
| சூடை | 200 | 120 | 200 | 150 |
| ஒட்டி | 250 | 200 | 300 | – |
| திருக்கை | 350 | 200 | 400 | – |
| மதனம் | 200 | 150 | 300 | – |
| கொய் | 100 | 30 | 50 | 100 |
| பாலை | 300 | 200 | 400 | 500 |
| வாழை | 200 | – | 300 | – |

## வலி. கிழக்கு விவசாயிகள் கீரைச் செய்கையில் ஆர்வம்

வலி. கிழக்குப் பிரதேசத்தில் கூடுதலான விவசாயிகள் கீரைச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். தமது விவசாய நிலங்களைச் சீர் செய்து அவர்கள் கீரைச் செய்கையில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

நீர்வேலி, கோப்பாய், சிறுப்பிட்டி, புத்தூர், உரும்பிராய் போன்ற பகுதிகளில் கூடுதலான விவசாயிகள் கீரைச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். கீரையின் விலை அதிகரிப்பையடுத்தே அவர்கள் அதன் செய்கையில் ஆர்வம் காட்டியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.


யாழ்ப்பாணக் குடாநாட்டு விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் விவசாயிகளுக்குக் கீரை விதைகளை விநியோகித்தது. தற்போது கீரை விதைகளுக்கு பற்றாக்குறை ஏற்பட்டாலும், அடுத்த வாரத்தில் இருந்து அவற்றைச் செய்கையாளர்கள் தாராளமாகப் பெற்றுக் கொள்ள முடியும் என்று அந்தச் சங்கம் தெரிவித்தது.

(வ-17)

## இறுவட்டு வெளியீடு

நாடகக் கலைஞர் கலைச்சாகரம் ஓய்வுநிலை அதிபர் சி.நாகராஜாவின் தயாரிப்பில் "பொம்மலாட்டம்" இறுவட்டு வெளியீடு இன்று சனிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

(வ)




பெண்களுக்கான அலங்கார மோதிரங்கள் தற்போது நவீன வடிவில் சந்தைக்கு வந்துள்ளன. இவை 350 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

### மரக்கறிகளின் நேற்றைய நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | சுன்னாகம் |
|---|---|---|---|---|
| முள்ளங்கி | 100 | 80 | 60 | 100 |
| கத்தரி | 140 | 120 | 120 | 140 |
| கரட் | 220 | 240 | 180 | 180-320 |
| மரவள்ளி | 70 | 80 | 60 | 60 |
| பயிற்றை | 150 | 120 | 80 | 120 |
| பாகல் | 180 | 280 | 160 | 200 |
| கருணைக்கிழங்கு | 100 | | | 100 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 100 | 100 |
| சி.வெங்காயம் | 300 | 300 | 250 | 240 |
| பூசணி | 60 | 60 | 50 | 80 |
| தக்காளி | 120 | 140 | 120 | 120 |
| வாழைக்காய் | 60 | 40 | 40 | 40 |
| கீரை | 25 | 50 | 15 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 50 | 40 | 20 |
| பச்சை மிளகாய் | 320 | 280 | 260 | 200 |
| புடோல் | 140 | 80 | 100 | 100 |
| கோவா | 150 | 160 | 200 | 180 |
| வெண்டி | 120 | 80 | 80 | 80 |
| போஞ்சி | 220 | 160 | 240 | 180 |
| லீக்ஸ் | 120 | 80 | 200 | 100 |
| தேங்காய் | 70 | 65 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 110 | 120 | 120 | 120 |
| தேசிக்காய் | 80 | 60 | 60 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 15 | 15 |
| கறிமிளகாய் | 200 | | 160 | 140 |
| இராசவள்ளி | 200 | | 280 | 200 |
| முருங்கைக்காய் | 120 | 120 | 100 | 140 |

# வடக்கு அமைச்சர்கள் மீதான விசாரணைக்கு ரூபா 3 லட்சம் செலவு

யாழ்ப்பாணம், மே 27

வடக்கு மாகாண அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட குழுவின் உறுப்பினர்களுக்கான மொத்தக் கொடுப்பனவாக 3 லட்சத்து 15 ஆயிரம் ரூபாவுக்கு அனுமதி கோரப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண அமைச்சர்கள் தொடர்பில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்காக மூவர் கொண்ட குழு முதலமைச்சரினால் கடந்த ஆண்டு நியமிக்கப்பட்டது.

அந்தக் குழு விசாரணை அறிக்கையைக் கடந்த 19ஆம் திகதி முதலமைச்சரிடம் கையளித்திருந்தது.

இந்தக் குழுவினருக்கு இதுவரை காலமும் எந்தவித கொடுப்பனவும் வழங்கப்படவில்லை. குழுவில் ஓய்வு பெற்ற நீதிபதிகள் இருவரும், முன்னாள் மாவட்டச் செயலர் ஒருவரும், குறித்த விசாரணையை முன்னெடுத்த சட்டத்தரணி ஒருவருமாக நால்வர் உள்ளடங்கியிருந்தனர்.

இவர்களுக்கான கொடுப்பனவாக மேற்படி தொகையை வழங்குவதற்கு முதலமைச்சரால் சிபாரிசு செய்யப்பட்ட கொடுப்பனவுப் பட்டியலை ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைத்துள்ளார் வடக்கு மாகாணத் தலைமைச் செயலர்.

குறித்த கொடுப்பனவு அமர்வு அடிப்படையிலேயே தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் அமர்வு ஒன்றுக்கு ஒருவருக்கு தலா 5 ஆயிரம் ரூபா என்ற வீதம் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-101)

# கலாபூசண விருதுக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், மே 27

2017 ஆம் ஆண்டுக்கான கலாபூசண விருதுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ. உமாமகேஸ்வரனால் அனுப்பி வைக்கப்பட்ட செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையின் கலை இலக்கியத்துறைகளுக்கு அளப்பரும் பங்காற்றுகின்ற கலைஞர்கள், இலக்கியவாதிகள், விற்பன்னர்களுக்கு வருடந்தோறும் அரசின் உயர்விருதான கலாபூசணம் எனும் விருது வழங்கப்படுகின்றது.

அறுபது வயதுக்கு மேற்பட்ட கலைஞர்கள் மட்டுமே இந்த விருதைப் பெறுவதற்கான தகைமையுடையவர்களாவர். சிற்பம், ஓவியம், நடனம், வாய்ப்பாட்டு, தவில், நாதஸ்வரம், நாடகம், சினிமா, நாட்டுப் புறவியல், இலக்கியம், நாட்டுக் கூத்து, ஊடகத்துறை போன்ற பல்வேறு துறைகளில் மிகவும் சிறப்புறச் சேவையாற்றியவர்கள் விருது பெறுவதற்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பப் படிவங்களை பிரதேச மாவட்டச் செயலகங்களில் பணிபுரியும் எமது திணைக்கள கலாசார உத்தியோகத்தர்களிடம் இருந்தும், திணைக்களத்திலும் பெற்றுக் கொள்ளலாம். மேலும் இந்த விண்ணப்பப் படிவங்களை www.hindudept.gov.lk என்ற இணையதள முகவரியிலிருந்தும் தரவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

முழுமைப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களோடு கலைஞர்கள் தமது தகுதியை உணர்ந்தும் முழுமையான ஆவணங்களைப் பிரதேச செயலகம் மற்றும் மாவட்டச் செயலகங்களில் எதிர்வரும் ஜூன் மாதம் 20ஆம் திகதிக்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும் என்றுள்ளது. (த-21)




# கிளிநொச்சி நீர்த்தாங்கியை விடுவிக்கிறது இராணுவம்

## 30 ஆம் திகதி குறித்த பிரதேசம் முழுவதும் நீர்ப்பாசனத் திணைக்களத்திடம் கையளிப்பு

யாழ்ப்பாணம், மே 27

கிளிநொச்சி ஏ-9 வீதியில் காக்காகடைச் சந்தியில் உள்ள நீர்த்தாங்கிப் பிரதேசம் முழுவதும் 30 ஆம் திகதி இராணுவத்தால் விடுவிக்கப்படவுள்ளது.

இது தொடர்பான அறிவித்தல் பாதுகாப்பு அமைச்சினால் மாவட்டச் செயலர் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரி ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதான நீர்த்தாங்கி இறுதிப் போரின்போது குண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட நிலையில் அதனுடன் இணைந்த 40 பேர்ச் காணி படையினரின் பிடியிலேயே உள்ளது. இதனால் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பணியில் பெரும் நெருக்கடி ஏற்பட்டு அந்த விடயம் பாதுகாப்பு அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இதனையடுத்து 8 ஆண்டுகளாகப் படையினரின் பிடியில் வெறும் காட்சிப் பொருளாகவுள்ள குறித்த பிரதேசம் எதிர்வரும் 30ஆம் திகதி நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பாவனைக்காக மீள ஒப்படைக்கப்படவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சினால் அனுப்பப்பட்ட கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

இந்த நீர்த்தாங்கி 1996 ஆம் ஆண்டு கிளிநொச்சியில் ஏற்பட்ட போரின் போது வீழ்த்தப்பட்டிருந்தது. இதனையடுத்து 2004 இல் மீண்டும் புதிய நீர்த்தாங்கி கட்டப்பட்டது. இவ்வாறு கட்டப்பட்ட நீர்த்தாங்கியே மீண்டும் இறுதிப் போர்க் காலத்தில் வீழ்த்தப்பட்டிருந்தது.

இந்த நீர்த்தாங்கி போர் அழிவுச் சின்னமாகப் பேணப்பட்டு வந்தது. அதனைக் கிளிநொச்சியில் உள்ள படையினர் பாதுகாத்து வந்தனர். பெருமளவான தென்னிலங்கைச் சுற்றுலாப் பயணிகள் வருகைதந்து இதனைப் பார்வையிடுவது வழக்கமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-101)

# பூநகரியில் கட்டுத் துவக்கு வைத்திருந்தவர் சிக்கினார்

யாழ்ப்பாணம், மே 27

அனுமதியின்றி வைத்திருந்த கட்டுத் துவக்கின் மூலம் விலங்குகளுக்கு வெடி வைக்கத் தயாரானவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவருக்கு 3 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் பூநகரியில் கடந்த புதன்கிழமை இடம் பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த ஒருவர், அனுமதியின்றிக் குறித்த கட்டுத் துப்பாக்கியை வைத்திருந்துள்ளார். அதனை வைத்திருப்பதாயின் பிரதேச செயலரின் அனுமதி தேவை. அவ்வாறு அனுமதி எதனையும் அவர் வைத்திருக்கவில்லை. அன்று மாலை அவர் விலங்குகளுக்குக் குறி வைத்துத் துப்பாக்கியைத் தயார்ப்படுத்தியபோது அந்த இடங்களில் சுற்றுக்காவல் மற்றும் புலனாய்வில் ஈடுபட்டிருந்த பொலிஸார் அவரைக் கைது செய்தனர். (த-4)

# வன்னிக் காட்டினுள் கசிப்பு உற்பத்தியை தடுக்கவேண்டுமாயின் ஆயுதங்கள் அவசியம்

## மதுவரித் திணைக்கள அதிகாரிகள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 27

வன்னிக் காட்டுப் பகுதியில் இடம்பெறும் கசிப்பு உற்பத்தியை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியாமைக்கு தம்மிடம் ஆயுதங்கள் இன்மையும் ஒரு காரணம் என மதுவரித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

வன்னியின் பல இடங்களிலும் இடம்பெறும் கசிப்பு உற்பத்தி தொடர்பில் தகவல்கள் கிடைக்கும்போது உடனடியாக நடவடிக்கையில் இறங்கிக் கட்டுப்படுத்தத் தற்போது பணியில் உள்ள குறிப்பிட்டளவு அலுவலர்களைப் பயன்படுத்துகின்றோம். இருப்பினும் சில சமயங்களில் அதிகளவானோர் இவ்வாறான சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடும் தகவல்களும், காடுகளில் கசிப்பு உற்பத்தி இடம்பெறும் தகவல்களும் கிடைக்கின்றன. அவ்வாறு கிடைக்கும் தகவல்கள் தொடர்பில் நாம் பகலில் சென்றால் உற்பத்தி செய்வோர் தப்பி ஓடி விடுகின்றனர். இருப்பினும் சாதுரியமாகச் செயல்பட்டே அவர்களைப் பிடிக்கின்றோம். இரவு வேளைகளில் நடவடிக்கைகளில் இறங்குவதன் மூலமே இதனைத் தடுக்கமுடியும். இவ்வாறு இரவு நடவடிக்கைக்குத் தயாராகும்போது கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுவோர் தாக்குதல் நடத்தினால் எம்மைப் பாதுகாப்பதற்கான போதிய ஆயுதங்கள் இல்லாதமை பெரும் பிரச்சினையாகவே உள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் தற்போது திணைக்களத்திற்குச் சுட்டிக்காட்டியுள்ளோம். எமது அலுவலர்களுக்கு ஆயுதங்களை கையாளும் பயிற்சி வழங்கப்படுகின்றது. இதன் அடிப்படையில் எதிர் காலத்தில் ஆயுதங்கள் வழங்கப்பட்டால் நடவடிக்கைகள் முன்னேற்றம் அடையும் என்றனர். (த-101)

# கால்நடைகளிடமிருந்து வயல்களைப் பாதுகாக்க வேலி அமைக்கும் பணி

கிளிநொச்சி, மே 27

கிளிநொச்சியில் வயல்களைக் கால்நடைகளிடமிருந்து பாதுகாப்பதற்கான பாதுகாப்பு வேலி அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இபாட் திட்டத்தின் கீழ் இந்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைப்புக்கள் தெரிவித்தன.

குறித்த திட்டத்தின் கீழ் 4ஆம் வாய்க்கால், மருத நகரின் கிழக்குப் பகுதிக்குப் பாதுகாப்பு வேலி அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. வேலியை அமைப்பதற்குரிய ஆரம்ப கட்டப் பணிகள் இடம்பெறுகின்றன. உடனடியாக 5 கிலோ மீற்றர் வேலியையே அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (த-101)

# தனிநாட்டுக் கொள்கையை நினைவூட்டவே மே 18 இல் முள்ளிவாய்க்கால் நினைவு

## கூட்டமைப்பை சாடுகிறது மகிந்த அணி

கொழும்பு, மே 27

தனி நாட்டுக் கொள்கையைத் தாம் இன்னும் கைவிடவில்லை என்று சர்வதேசத்துக்குக் காட்டுவதற்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒவ்வொரு வருடமும் மே 18 ஆம் திகதி முள்ளி வாய்க்கால் நினைவு தினத்தை அனுஷ்டித்து வருகின்றது. இனி வரும் காலங்களில் இவ்வாறான நிகழ்வுக்கு அரசு தடை விதிக்க வேண்டும் என்று மஹிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபயகுணவர்தன தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

30 வருடப் போர் வரலாற்றில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் புலிகளால் கொல்லப்பட்டனர். ஆனால், தமிழர்களின் உரிமைகளுக்காகப் போராடுகிறோம் என்று கூறுகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இது பற்றிப் பேசுவதே இல்லை. அவர்கள் படையினர் மீதே பழியைப் போடுகின்றனர்.



மே 18 ஆம் திகதியைத் தெரிவு செய்து அதை முள்ளிவாய்க்கால் தினம் என்று அனுஷ்டிக்கின்றனர். புலிகள் செய்த கொலைகளுக்காகச் சோகம் அனுஷ்டிப்பதாக இருந்தால் 365 நாள்களும் அனுஷ்டித்தே ஆக வேண்டும். அவ்வளவு தூரம் அவர்கள் தமிழர்களைக் கொலை செய்திருக்கின்றனர்.

அப்படி இருந்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஏன் மே 18 ஆம் திகதியை அனுஷ்டிக்கின்றனர் என்பதை நாம் தேடிப் பார்க்கத் தவறிவிட்டோம்.

புலிகளின் கோரிக்கையான தனிநாட்டுக் கோரிக்கையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கைவிடவில்லை என்பதைச் சர்வதேசத்துக்குக் காண்பிப்பதற்காகவே இந்தத் தினத்தை அனுஷ்டிக்கின்றனர் என்பதுதான் உண்மை. மிகவும் சாதுரியமாக அவர்கள் காய் நகர்த்துகின்றனர்.

இதைத் தொடர்ந்தும் அனுமதித்தால் அது எதிர்காலத்தில் நாட்டுக்குப் பேராபத்தை விளைவித்துவிடும். ஆகவே இனி வரும் காலங்களில் இந்த நிகழ்வு தடை செய்யப்படவேண்டும் - என்றார். (த-3)

# கல்வளைக் கிராமத்தில் நீர்த்தாங்கி திறந்துவைப்பு

யாழ்ப்பாணம் மே. 27

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கல்வளை கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்ட புதிய நீர்த்தாங்கி கடந்த புதன்கிழமை மாலை திறந்து வைக்கப்பட்டது.

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன், மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் மற்றும் வலி. தென் மேற்கு பிரதேச சபைச் செயலாளர் எஸ்.சற்குணராஜா ஆகியோர் இணைந்து புதிய நீர்த்தாங்கியைத் திறந்து வைத்தனர்.

கடந்த மாதம் அமைச்சர் டெனீஸ்வரனும், மாகாண சபை உறுப்பினர் கஜதீபனும் குறித்த கிராமத்துக்குச் சென்றபோது மக்களது குடிதண்ணீர்ப் பிரச்சினை இனங்காட்டப்பட்டது. இதனையடுத்து குறித்த பகுதி மக்கள் குடிதண்ணீர் பெற்றுக்கொள்வதற்கான



ஒழுங்குகள் வலி. தென் மேற்குப் பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்டுநீர்த்தாங்கி திறந்துவைக்கப்பட்டது.

(கு -21)

# குளங்களின் நீரேந்துப் பிரதேசம் வரையறுக்கப்படுவது அவசியம்

## ஒட்டுசுட்டான் விவசாயிகள் வலியுறுத்தல்

முல்லைத்தீவு, மே 27

ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட குளங்களுக்கான நீரேந்துப்பிரதேசம் வரையறுக்கப்பட வேண்டும் என விவசாயிகள் கோரியுள்ளனர்.

ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள குளங்களின் நீரேந்துப் பிரதேசம் வரையறுக்கப்படாமையால் அந்தக் காணிகள் மக்களது பயிர்ச் செய்கை நிலமாக மாறியுள்ளன. இதனால் குளங்கள் தூர்ந்து போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

குளங்களின் அணைக்கட்டிலிருந்து குறிப்பிட்ட அளவு தாண்டியே காணிகளுக்கான வேலிகள் இடப்பட வேண்டும். ஆனால் அணைக்கட்டுடன் வேலிகள் இடப்பட்டு வான் பயிர்களும் வைக்கப்பட்டுள்ளன. இதனால் குளம் புனரமைப்புச் செய்யும்போது அணைக்கட்டின் பின்புறமாக மண் எடுக்கவோ கனரக வாகனங்கள் வேலை செய்யவோ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாமல் கால்நடைகள் நீரேந்துப் பிரதேசங்களிலும் அணைக்கட்டின் பின்புறத்திலும் மேய்ந்து வந்தன. ஆனால் தற்போது அப்படியான வசதிகள் இல்லை.

எனவே குளங்களின் நீரேந்து எல்லைகள், அணைக்கட்டின் பின்புற எல்லைகள் என்பவை வரையறுக்கப்படவேண்டும். அதனை மீறி நடப்பவர்கள் மீது நட வடிக்கை மேற்கொள்ள வேண்டும் என விவசாயிகள் கோரியுள்ளனர். (கு-500)

# விவசாயக் கழகங்களை உருவாக்குவதன் மூலம் இளைஞர்களுக்குப் பயன்

## யாழ்ப்பாண மாவட்ட விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் தெரிவிப்பு

அச்சுவேலி.மே 27

இளைஞர் விவசாயக் கழகங்களை உருவாக்கி விவசாய முயற்சியில் ஆர்வத்துடன் ஈடுபடுவதுடன் விவசாயத் திணைக்களத்தினால் வழங்கப்படும் மானிய உதவிகள் மற்றும் சலுகைகளையும் பெற்றுக் கொள்ளலாம் என யாழ்ப்பாண மாவட்ட விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் அ.செல்வராசா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண மாவட்டத்தில் 19 இளைஞர் விவசாயக் கழகங்கள் செயற்படுகின்றன. கிராம அலுவலர் பிரிவு ரீதியாக 18 தொடக்கம் 30 வயதுக்கும் உட்பட்ட பத்துக்குக் குறையாத எண்ணிக்கையானவர்கள் கழகங்களை உருவாக்கலாம்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் விவசாயிகளுக்குப் பல்வேறு மானிய உதவிகள், இலவச உதவிகள் வழங்கப்படவுள்ளன. அத்தகைய உதவிகள் இளைஞர் விவசாயக் கழக உறுப்பினர்களுக்கும் வழங்கப்படவுள்ளன.

இத்தகைய உதவிகளைப் பெற்று இளைஞர்கள் விவசாய முயற்சியில் ஆர்வத்தோடு ஈடுபடலாம். தொழில் இல்லை என்று சோம்பி இருக்கத் தேவையில்லை. இளைஞர் விவசாயக் கழகங்களில் இணைந்து விவசாய முயற்சியில் ஈடுபடும் இளைஞர்களுக்கு விவசாயத் திணைக்களமும் இலவச உதவிகள், மானியங்களை வழங்குவதுடன் பயிர்ச்செய்கை தொடர்பானவழிகாட்டல் ஆலோசனைகளையும் வழங்கும்.

இளைஞர் விவசாயக் கழகங்களை அங்குராப்பணம் செய்வது தொடர்பாக விவசாயப் போதனாசிரியர்கள் மற்றும் மாவட்ட விவசாயத் திணைக்களத்துடன் நேரில் தொடர்பு கொள்ளலாம். பதிவு செய்வதற்கான படிவங்கள், கழகத்தின் செயற்பாடுகள், நிபந்தனைகள் தொடர்பான உப விதிகள் கையளிக்கப்படுவதோடு அங்குரார்ப்பணக் கூட்டத்தில் விவசாயத் திணைக்கள அதிகாரிக்ள கலந்துகொண்டு செயற்பாடு தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்கி வழிப்படுத்துவார்கள்-என்றார். (கு - 11)

## மன்னார்க் காட்டுப் பகுதியில்

# மாணவரை பயன்படுத்தி மரக் கடத்தல்

## உடனே தடுத்து நிறுத்துமாறு கல்வியியலாளர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், .மே 27

மன்னார் மாவட்டத்தின் சின்னவலயன் கட்டு, இரணை இலுப்பைக்குளம், பெரிய முறிப்பு போன்ற காடுகளில் இடம்பெறும் மரக் கடத்தல்களுக்கு பாடசாலை மாணவர்கள் பயன்படுத்தப்படுவதாகக் கல்வியியலாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தின் மடுக் கல்வி வலயத்துக்கு உட்பட்ட குறித்த கிராமங்களில் உள்ள மாணவர்களைப் பயன்படுத்தி அயலில் உள்ள காடுகளில் மரங்கள் வெட்டப்படுகின்றன.

காடுகளில் வெட்டப்படும் மரங்களை வாகனங்களில் ஏற்றிக் கடத்துவதற்கும் அயல் கிராமச் சிறுவர்களில் சிலர் பயன்படுத்தப்படுகின்றனர்.

மரங்கள் கடத்தப்படும்போது முக்கிய சந்திகளில் இரு சிறுவர்கள் வீதம் நிறுத்தப்படுகின்றனர். சிறுவர்களிடம் கைத்தொலைபேசிகள் வழங்கப்படுகின்றன. சந்திகளில் நிற்கும் சிறுவர்கள், வனவளத் திணைக்களத்தினர் அல்லது பொலிஸார் வந்தால் காட்டில் நிற்ப வர்களுக்குத் தகவல் வழங்குகின்றனர்.

இவ்வாறு தகவல் வழங்கும் சிறுவர்களுக்கு ஒருநாளுக்கு ஆயிரம் ரூபா கொடுப்பனவும் உணவும் வழங்கப்படுகின்றன.

எனவே இவற்றைத் தடுக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மடு வலயக் கல்விப் பணிப்பாளரிடம் கேட்டபோது ,

குறித்த விடயம் தொடர்பில் எமது கவனத்துக்கும் கொண்டு வரப்பட்டது. இதனையடுத்துக் குழுச் செயல்பாடுகளுக்குச் செல்லும் அதிகாரிகளுக்கு இந்த விடயம் தொடர்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளதோடு பொலிசாருக்கும் தகவல் வழங்கப்பட்டுள்ளது. பாடசாலை மாணவர்கள் பாடசாலை நேரத்தில் வீதியில் நிற்பதை பொலிசார் அனுமதிக்கமாட்டார்கள் என தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக வீதி ரோந்தை அதிகரிக்குமாறும் பொலிசாரிடம் கோரப்பட்டுள்ளது. இதன் மூலம் மாணவர்கள் இவ்வாறான செயல்களில் ஈடுபடுவதைத் தடுக்க ஆவன செய்யப்பட்டுள்ளது என்றார்.

(கு -101)

# குடும்பத் தகராறில் கைதான எண்மரும் தொடர்ந்து மறியலில்

யாழ்ப்பாணம், மே 27

குடும்பச் சண்டையில் ஈடுபட்டுக் கைது செய்யப்பட்டவர்களின் விளக்கமறியலை பருத்தித்துறை நீதிமன்ற நீதிபதி நீடித்துள்ளார்.

கற்கோவளம் பகுதியில் குடும்பத் தகராறு காரணமாக அதே பகுதியைச் சேர்ந்த 8 பேர் பருத்தித்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

நீதிமன்ற உத்தரவின் பேரில் அவர்கள் 14 நாள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்த வழக்கு கடந்த புதன்கிழமை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது குறித்த 8 பேரையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

(கு-10,26)

# தும்பு ஆலை மீளத் திறப்பு

முல்லைத்தீவு, மே 27

பனை, தென்னை வள அபிவிருத்திச் சங்கத்தினால் மூடப்பட்டிருந்த தும்பு ஆலை மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது.

ஒட்டுசுட்டான் பனை, தென்னை வள அபிவிருத்திச் சங்கத்தால் நடத்தப்பட்டு வந்த குறித்த தும்பு ஆலை தவிர்க்க முடியாத காரணங்களால் மூடப்பட்டிருந்தது.

சங்கத்துக்குப் புதிய தலைவர் தெரிவாகிய பின்னர் அதனை மீண்டும் இயங்க வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கடந்த 22 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் கூட்டுறவு ஆணையாளரின் அனுசரணையோடு குறித்த தும்பு ஆலை மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது.

(கு -500)

# பேருந்தில் நடத்துநரால் தாக்கப்பட்டார் மாணவன்

## முல்லை பொலிஸில் முறைப்பாடு

முல்லைத்தீவு, மே 27

தனியார் பேருந்தில் பயணித்த மாணவனைப் பேருந்தின் நடத்துநர் தாக்கியதாக முறையிடப்பட்டுள்ளது. இதனால் நடத்துநரும் சாரதியும் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். பேருந்தில் மாணவன் தவறான நடத்தையில் ஈடுபட்டதாலேயே தாக்கப்பட்டார் எனக் காரணம் கூறப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பிலிருந்து முல்லைத் தீவிலுள்ள தமதுவீடு நோக்கித் தனியார் பேருந்தில் பாடசாலைச் சீருடையுடன் பயணித்துக்கொண்டிருந்த உயர்தர வகுப்பு மாணவன் மீது பேருந்தின் நடத்துநர் தாக்குதல் மேற்கொண்டுள்ளார் என்று குற்ஞ் சாட்டப்படுகிறது.

இந்தச் சம்பவம்பற்றி தெரியவருவதாவது:

கடந்த திங்கட்கிழமை பாடசாலை முடிந்து சில மாணவர்களும் மாணவிகளும் புதுக்குடியிருப்பிலிருந்து முல்லைத்தீவு நோக்கி தனியார் பேருந்தில் பயணித்துக் கொண்டிருந்தனர். இதன்போது பேருந்தின் நடத்துநர் மாணவன் ஒருவர் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளார். இதனால் பாதிப்படைந்த மாணவன் சிகிச்சைக்காக மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்ட மாணவனால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. நடத்துநரின் செயல் தொடர்பில் பயணிகளும் பெற்றோரும் விசனம் வெளியிட்டுள்ளனர்.

"மாணவன் பேருந்தில் அநாகரிகமான முறையில் நடந்துகொண்டிருந்தால் அது குறித்து சம்பந்தப்பட்ட பெற்றோருக்கோ, பாடசாலை அதிபருக்கோ அல்லது பொலிஸ் நிலையத்திலோ முறையிட்டிருக்கலாம். மாறாகச் சட்டத்தைக் கையிலெடுத்து முறையற்ற விதத்தில் மாணவனைத் தாக்குவதற்கு நடத்துநருக்கு எந்த அதிகாரமோ உரிமையோ இல்லை. தவறான செயற்பாடுகளில் ஈடுபடுவதை அனுமதிக்கவும் முடியாது" என்று பயணிகள் கருத்துத் தெரிவித்தனர்.

"பாடசாலைச் சீருடையில் நின்ற குறித்த மாணவன் சிவில் உடையில் பேருந்தில் அமர்ந்திருந்த பெண்ணுடன் தவறான நடத்தையில் ஈடுபடுவதாக நடத்துநரிடம் முறையிடப்பட்டது. இதனால் முதலில் குறித்த மாணவன் எச்சரிக்கை செய்யப்பட்டார். பின்னரும் அவர் அவ்வாறே நடந்து கொள்வதாகக் குறித்த பெண் கூறியதால் நடத்துநர் மாணவனைத் தாக்கியதாகச் சங்கத்துக்குக் கூறப்பட்டது. தாக்கப்பட்டிருந்தால் அது தவறுதான். மாணவன் என்ன காரணத்துக்காக தாக்கப்பட்டார் என்பதனையும் கவனத்தில் கொள்ளவேண்டும். அது குறித்த விசாரணைக்குப் பேருந்தின் சாரதியையும் நடத்துநரையும் அழைத்துள்ளோம்" என்று முல்லைத்தீவு மாவட்ட பேருந்துச் சங்கத் தலைவர் அ.சிவலோகேஸ்வரன் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் செவி வழியாக அறிந்துள்ளோம். அதுபற்றிய தகவல்கள் எதுவும் எமக்கு தெரிவிக்கப்படவோ, முறையிடப்படவோ இல்லை என்று குறித்த மாணவன் கற்கும் பாடசாலையின் அதிபர் தெரிவித்தார். (கு - 4, 102)

# அதிகாரத்தைக் கைப்பற்ற மீண்டும் புலிப் பூச்சாண்டி

## தெற்குக் கடும் போக்காளர்களை கடுமையாகச் சாடுகிறது ஜே.வி.பி

கொழும்பு, மே 27
பிரபாகரன் மீண்டும் பிறப்பதை தெற்கில் உள்ள கடும் போக்குவாதிகளே அதிகம் விரும்புகின்றனர். மீண்டும் புலியைக் காட்டி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு இவர்கள் முயற்சி செய்கிறார்கள்.
இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.
வடக்கின் தற்போதைய நிலமை தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவித்த தாவது:
போர் முடிந்து எட்டு வருடங்கள் ஆகின்றன. ஆனால் போரால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மக்களை, இந்த நாட்டுக் குடிமக்களாக நடத்துவதற்கு இரண்டு அரசுகளாலும் முடிய வில்லை. அவர்கள் இந்த விடயத்தில் தோல் வியடைந்து விட்டனர்.
இனவாதம் காரணமாகவோ அல்லது பிரிவி னைவாதம் காரணமாகவோ தமிழர்கள் ஆயுதம் ஏந்தவில்லை. பொருளாதாரத்தைப் பகிர்வதில் ஏற்பட்ட இனப் பாகுபாடு காரணமா



கவே அவர்கள் ஆயுதம் ஏந்தினர்.
ஆட்சியாளர்களுக்கு இந்தக் காரணம் இன் னும் விளங்கவில்லை. விளங்கி இருந்தால் போர் முடிந்த இந்த எட்டு வருடங்களுக்குள் தமிழர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டி ருக்கும்.
இந்தச் சந்தர்ப்பத்தைத் தமிழ்ப் பிரிவினை வாதிகளும், புலம்பெயர் தமிழர்களும் நன் றாகப் பயன்படுத்துகின்றனர். இங்கே தமிழர் கள் பேராபத்தை எதிர்கொண்டு வருகின்ற னர் என்று உலகம் முழுவதும் பரப்புரைசெய்து வருகின்றனர். இந்தப் பரப்புரை காரணமாகத் தெற்கில் உள்ள கடும் போக்குவாதிகளும் நன்மை அடைந்து வரு கின்றனர்.
பிரபாகரனின் குடும்பத்தை விடவும் தெற்கில் உள்ள இந்த கடும்போக்குவாதிகளே பிரபாக ரன் மீண்டும் பிறப்பதை விரும்புகின்றனர். மீண்டும் புலியைக் காட்டி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு இவர்கள் முயற்சி செய்கி றார்கள்.
எட்டு வருடங்களாக எம்மால் இந்தக் குழுக்க ளைத் தோற்கடிக்கவும் முடியவில்லை. தமி ழர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க வும் முடியவில்லை. இந்த நிலமை இப்படியே தொடர்ந்தால் தெற்கில் உள்ள கடும்போக்கு வாதிகளின் திட்டம்தான் வெற்றிபெறும் என் பதை அரசு உணர்ந்து, அதற்கு ஏற்ப செயற் படவேண்டும் - என்றார். (பு - 3)

## பசறைத் தொகுதியின் ஐ.தே.க அமைப்பாளராக சுரேஸ் நியமனம்



பதுளை,மே 27
சுமார் ஒன்றரை வருடகாலமாக வெற்றிட மாக இருந்த பசறைத் தேர்தல் தொகு திக்கான, ஐக்கிய தேசியக்கட்சியின் பிர தான அமைப்பாளர் பதவிக்கு, பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வடி வேல் சுரேஸ் நியமிக்கப்பட்டார்.
ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவரும், தலைமை அமைச்சருமான ரணில் விக் கிரமசிங்கவால் கட்சியின் சிறிகொத்த தலைமையகத்தில், மேற்படி நியமனம் உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்டது.
அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ மற்றும் கட்சியின் செயலாளர் கபீர் ஹாசீம் உள் ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரின் நேரடி பரிந்துரையின் அடிப்படையில், இந்த நியமனம் வழங்கப்பட்டது.
நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ், ஐக்கிய தேசியக் கட்சியின் கட்டுப் பாட்டிலுள்ள இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச்செயலா ளராக உள்ளார். இவர் சிறிலங்கா சுதந்தி ரக் கட்சி ஆட்சிக்காலத்திலும், அக்கட்சி யின் பசறை தேர்தல் தொகுதியின் பிர தான அமைப்பாளராக கடந்த 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரை சேவையாற்றி கோடிக்கணக்கான ரூபா செலவிலான அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் பலவற்றை மேற்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## போர் வானூர்திகளுக்காக அரசால் வீண் நிதிச் செலவு

### திஸ்ஸ விதாரண சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 27
"நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏதும் இல்லாத இந்தச் சூழலில் எதற் காகப் போர் வானூர்திகளைக் கொள்வ னவு செய்ய வேண்டும்? பொதுமக்க ளின் நிதியை எதற்காக வீணாகச் செலவழிக்க வேண்டும்?" இவ்வாறு லங்கா சம சமாசக் கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண கேள்வி எழுப்பினார்.




கொழும்பில் நேற்று முன்தினம் நடை பெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றி லேயே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
திருகோணமலைத் துறைமுகத்தை மையப் பகுதியாகக் கொண்டு, அமெ ரிக்கக் கடற்படைத் தளம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. அதற்கான இர கசிய உடன்பாடு இலங்கை அமெரிக்க அரசுகளுக்கு இடையில் செய்து கொள் ளப்பட்டுள்ளது.
திருகோணமலையில் அமெரிக்கக் கடற்படைத் தளத்தை அமைப்பது குறித்து, இரண்டு நாடுகளுக்கும் இடை யில் இருதரப்பு உடன்பாடு ஒன்றும் இரகசியமாகக் கையெழுத்திடப்பட் டுள்ளது. எதிர்காலத்தில் திருகோணமலை யில் கடற்படைத் தளத்தை அமைப்ப தற்கு அமெரிக்கா இணங்கியுள்ளது.
அதேவேளை, அமெரிக்காவிடம் இருந்து 400 மில்லியன் டொலர் செல வில் போர் வானூர்திகளையும், 300 மில்லியன் டொலர் பெறுமதியான இரா ணுவத் தளபாடங்களையும் இலங்கை கொள்வனவு செய்யவுள்ளது. நாடு சுமுகமான நிலையில் இருக்கும்போது, ஏன் போர் வானூர்திகளைக் கொள்வ னவு செய்யவேண்டும் - என்றார். (ஐ -10)

## பிரிகேடியர் தேசப்பிரியவுக்கு விளக்கமறியல்



கொழும்பு, மே 27
கைது செய்யப்பட்ட பிரிகே டியர் அநுர தேசப்பிரிய குண வர்தனவை எதிர்வரும் 31 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.
கம்பஹா பிரதான நீதிவான் டீ.ஏ. ருவன்பத்திரன இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.
வெலிவேரிய ரத்துபஸ்வல பிரதேசத்தில் சுத்தமான குடிதண்ணீர் கேட்டுப் போராடிய மக்கள் மீது, துப்பாக் கிச் சூடு நடத்துவதற்கு இவர் உத்தரவு வழங்கினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. அதனடிப்படையில் பிரி கேடியர் அநுர தேசப்பிரிய குணவர்தன நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டார்.
2013 ஆம் ஆண்டு போராட்டம் நடத்திய மக்கள் மீது, நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்கா கக் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு பிரிகேடியர் தேசப் பிரிய குணவர்த்தன நேற்று முன்தினம் அழைக்கப் பட்டிருந்தார்.
விசாரணைகளை அடுத்து கைது செய்யப்பட்ட அவர், நேற்றுமுன்தினம் கம்பஹா நீதிமன்றில் முன்னி லைப்படுத்தப்பட்டார். அப்போது அவரை எதிர்வரும் 31ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஐ -10)

## கருணா மீதான வழக்கு செப்ரெம்பர் 6ஆம் திகதி



கொழும்பு, மே 27
முன்னாள் பிரதியமைச்சர் விநாயக மூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்) மீதான வழக்கு செப்ரெம்பர் 6ஆம் திக திக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
அரசுக்குச் சொந்தமான 9 கோடி ரூபாவுக் கும் அதிக பெறுமதி கொண்ட குண்டு துளைக்காத சொகுசு வாகனமொன்றைத் தனது சொந்தப் பாவனைக்காக வைத்தி ருந்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட கருணா அம்மான் மீதான விசாரணைகள் முடிவ டைந்திருப்பதாகப் பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவினர் நேற்றுமுன் தினம் கொழும்பு நீதிவான் மன்றில் தெரி வித்தனர்.
கடந்த புதன்கிழமை இந்த வழக்கு மீண் டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, கருணா அம்மான் மீதான விசாரணைகள் முடிவடைந்து அறிக்கை சட்டமா அதிபருக் குச் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகவும், அவ ரது ஆலோசனை இன்னும் கிடைக்க வில்லை எனவும் பொலிஸ் நிதி மோசடிப் பிரிவினர் தெரிவித்ததையடுத்து, கொழும்பு பிரதம நீதிவான் லால் பண்டார ரணசிங்க வழக்கின் அடுத்த விசார ணையை எதிர்வரும் செப்ரெம்பர் 6ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (பு - 4)

## இந்திய மீனவர்களது அத்துமீறல் குறைவு

கொழும்பு, மே 27
"இலங்கைக் கடற்பரப்பில் அத்து மீறி மீன்பிடியில் ஈடுபடும், இந் திய மீனவர்களின் செயற்பாடு கள் அண்மைக் காலமாக ஐம் பதுசதவீதமாகக்குறைவடைந்துள் ளன" என்று கடற்றொழில் மற் றும் நீரியல்வள அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
"இலங்கை வசம் உள்ள இந்திய மீனவர்களின் படகுகளை விடு விக்க வேண்டும் என்று மீனவர் கள் தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்து வருகின்றனர். அவர்க ளின் கோரிக்கைகளை ஏற்று 42 படகுகளை விரைவில் விடுவிக்க அரசு தீர்மானித்துள்ளது. இந்தி யத் தூதரகத்துக்கு இந்தத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.
எங்களது நிபந்தனைகளுக்கு உட்பட்டே படகுகள் விடுவிக்கப் படும். எங்களது நிபந்தனை களை மறுக்கும் பட்சத்தில், படகு



களை விடுவிக்க மாட்டோம்.
அதேபோன்று படகுகளை நாங் கள் மீண்டும் வழங்குகின்றோம் என்பதற்காக, இந்திய மீனவர்க ளின் படகுகளைக் கைப்பற்ற மாட்டோம் என்று அர்த்த மில்லை.
படகுகளைத் திருப்பிக் கொடுத்தா லும், இலங்கைக் கடல் எல்லை யில் இந்திய மீனவர்கள் தொடர்ந்து அத்துமீறினால், கைது நடவ டிக்கை மற்றும் விசைப்படகுகள் பறிமுதல் செய்யும் நடவடிக்கை களை நாம் தொடர்ச்சியாக முன் னெடுப்போம்" - என்றார். (ஐ - 10)

# அரசமைப்பு வழிநடத்தல் குழு உறுப்பினர்களுக்கு வாகனமா?

## மகிந்த அணியும், ஜே.வி.பியும் நாடாளுமன்றில் கடும் எதிர்ப்பு

கொழும்பு, மே 27

அரசமைப்பு வழிநடத்தல் குழு உறுப்பினர்களுக்குப் பல மில்லியன் ரூபா பெறுமதியான வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்காக முன்வைக்கப்பட்டுள்ள குறை நிரப்புப் பிரேரணைக்கு மகிந்த அணியான பொது எதிரணியும், ஜே.வி.பியும் நாடாளுமன்றில் கடும் எதிர்ப்பு வெளியிட்டன.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஒழுங்குப் பிரச்சினை யொன்றை எழுப்பிய மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன, "அரசமைப்பு வழிநடத்தல் குழு உறுப்பினர்களுக்கு வாகனம் கொள்வனவு செய்வதற்குக் குறைநிரப்புப் பிரேரணை யொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அரசமைப்பு வழிநடத்தல் குழுவில் உள்ள உறுப்பினர்களுக்கு வாகனம் கொள்வனவு செய்யும் போது, ஏற்கனவே நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகனம் கொள்வனவு செய்வதற்கு சமர்ப்பிக்கப்பட்ட குறைநிரப்புப் பிரேரணையில் உள்ளடக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களும், அரசமைப்பு வழிநடத்தல் குழு உறுப்பினர்களின் பெயர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இது பெரும் அநீதியாகும்" என்றார்.

இதன்போது குறுக்கிட்டுப் பேசிய சபை முதல்வரான அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, "நாங்கள் அமைச்சர்களுக்கு வாகனம் கொள்வனவு செய்யவில்லை. அமைச்சுக்கே வாகனம் கொள்வனவு செய்கின்றோம். இல்லாத பொல்லாததைக் கூறிச் சபையைக் குழப்ப வேண்டாம்" என்றார்.

"நான் அமைச்சர்களுக்கு வாகனம் கொள்வனவு செய்வதைப் பற்றிக் கூறவில்லை. சபை முதல்வர் விடயத்தைப் புரிந்து கொள்ளாமல் புலம்புகின்றார்" என்று பந்துல குணவர்தன கூறினார். மீண்டும் குறுக்கிட்டுப் பேசிய லக்ஷ்மன் கிரியெல்ல, "இல்லை. நாங்கள் அமைச்சருக்கு வாகனம் கொள்வனவு செய்யவில்லை. அமைச்சுக்கே வாகனம் கொள்வனவு செய்கிறோம்" என்று மீளவும் தெரிவித்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் குறிக்கிட்டுப் பேசிய தினேஷ் குணவர்தன, "அரசமைப்பு வழிநடத்தல் குழு உறுப்பினர்களின் வாகனம் கொள்வனவு தொடர்பாகவே பந்துல குணவர்தன கூறுகிறார். ஆனால், சபை முதல்வர் அமைச்சு சம்பந்தமாக பேசுகின்றார். அரசமைப்பு வழிநடத்தல் குழு உறுப்பினர்களுக்கு மில்லியன் கணக்கில் செலவு செய்து வாகனம் கொள்வனவு செய்யத் திட்டமிட்டுள்ளனர். அப்பாவி மக்களின் நிலைமையைப் புரிந்துக்கொள்ளா மல் அரசு செயற்பட்டுவருகின்றது. இந்தவிடயம்ஜயம்பதிவிக்கிரமரத்னவுக்குநன்றாகத்தெரியும். ஜயம்பதியேஎழுந்து பேசுங்களேன். உங்களுக்குதானே வாகனம் கொள்வனவு செய்யப்படுகின்றது" என்றார். இதன்போது சபைக்குத் தலைமை தாங்கிய பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால, "சபை முதல்வரே, பொது எதிரணியினர் வலியுறுத்தும் விடயம் வேறு. நீங்கள் பதிலளிப்பது வேறு விடயம்" என்றார்.

இதன்போது எதிர்க்கட்சிகளின் கொறடாவும் ஜே.வி.பியின் தலைவருமான அநுரகுமார திஸாநாயக்க கூறுகையில், "அரசமைப்பு வழிநடத்தல் குழுவின் உறுப்பினர்களுக்கு வாகனம் கொள்வனவு செய்யப்படுவது தொடர்பிலேயே இங்கே வலியுறுத்தப்படுகின்றது.

சபை முதல்வர் கூறுவது போல அமைச்சர்களுக்கு வாகனம் கொள்வனவு செய்வது தொடர்பிலும் பிரச்சினைகள் உள்ளன. அது வேறு விடயம்.

அமைச்சர்களுக்கு கார் கொள்வனவு செய்வது இடைநிறுத்தப்பட்டுள்ளன. அரசமைப்பு வழிநடத்தல் குழுவின் உறுப்பினர்களுக்கு வாகனம் கொள்வனவு செய்வதை உடன்நிறுத்த வேண்டும்" என்றார். (த-4)

NOTICE - ANNUAL GENERAL MEETING

THE ANNUAL GENERAL MEETING OF JAFFNA JOHNIANS SPORTS CLUB WILL BE HELD ON SATURDAY 10TH JUNE 2017 AT 5.30 P.M AT COLLEGE STAFF ROOM MEMBERS WHO WISH TO SUBMIT ANY RESOLUTIONS ARE KINDLY REQUESTED TO DO SO IN WRITING ON OR BEFORE 9TH JUNE 2017

PRESIDENT
JAFFNA JOHNIANS
SPORTS CLUB

SECRETARY
JAFFNA JOHNIANS
SPORTS CLUB

வாழ்த்துகிறோம்

இன்று (27.05.2017) சனிக்கிழமை
10 ஆவது ஆண்டில் காலடி வைக்கும்
அன்னை புத்தகசாலை
நிறுவனத்துக்கு "ஞானோதயம்"
வெளியீட்டின் சார்பில்
வாழ்த்துக்களைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.

வாழ்த்துவோர் :- ஞானோதயம்
"செல்வ சாந்தி" வெளியீட்டகம்

## ஜூன் 4 முதல் ரயில் ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு

தொடருந்துத் தொழிற்சங்கங்கள் எதிர்வரும் ஜூன் 4ஆம் திகதி நள்ளிரவு 12மணி முதல் 24 மணித்தியாலய பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் குதிக்கப் போவதாக அறிவித்துள்ளன.

இந்த மாதம் 5ஆம் திகதி மாலபே தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்துடன் இணைந்து தொடருந்துத் தொழிற்சங்கங்கள் போராட்டத்தில் குதித்திருந்தன. இதன் காரணமாக நாட்டில் ரயில் போக்குவரத்து முற்றிலும் தடைப்பட்டிருந்தது. இந்நிலையில், மீண்டும் எதிர்வரும் ஜூன் 4ஆம் திகதி நள்ளிரவு முதல் 24 மணி நேரப் போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளதாக தொடருந்துத் தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளமை தொடர்பில் மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர். (த-4)

சேவை நலன் பாராட்டு
திரு.பொ.சிவானந்தராஜா
[கோட்டக்கல்விப் பணிப்பாளர் [வேலணை – தீவகவலயம்]



எமது கல்வி வலயத்தில் கோட்டக் கல்விப் பணிப்பாளராகக் கடமை உணர்வுடனும் பக்தி சிரத்தையுடனும் தமது பணியை செவ்வனே செய்து மொத்த சேவைக்காலம் 39 வருடத்தை நிறைவு செய்து அகவை அறுபதில் 27.05.2017 இன்று ஓய்வுபெறுகின்ற திரு. பொ.சிவானந்தராஜா அவர்களை ஓய்வுக்காலத்தில் தனது குடும்பத்தினருடன் குதூகலமாகவும் சுகபலத்துடனும் வாழ இறைவனைப் பிரார்த்தித்து மனதார வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நலன்புரி கழகம்,
வலயக் கல்வி அலுவலகம்,தீவகம்,வேலணை.

வருடாந்த பொதுக் கூட்டம்

வடமராட்சி மணல் ஏற்றும் வாகன உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம்

காலம் : 28.05.2017 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 9.00 மணி
இடம் : சிவன்கோயில் மண்டபம் பருத்தித்துறை

அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமூகம் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்
செயலாளர் - வடமராட்சி மணல் ஏற்றும் வாகன உரிமையாளர் சங்கம்.
(எண்.291) (13)

வேலையாள்கள் தேவை

சுத்திகரிப்பாளர், சப்பிளயர் வேலைக்கு ஆண், பெண் இருபாலாரும்.
யாழ் மாநகரசபைக்கு உட்பட்டோர் விரும்பத்தக்கது.
வயது எல்லை 23 -45 வரை
தொடர்பு:
077 509 2098/ 076 323 1131

கடை வாடகைக்கு

அலுவலகதேவைக்கு கடை வாடகைக்கு உண்டு.
தொடர்பு : 077 248 7841
கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

வேலையாள்கள் தேவை

1. சமையல் உதவியாளர் (றொட்டி வீசத்தெரிந்தவர்)
2. முகாமையாளர்
3. சப்ளேயர்

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிப்படும்.
078 632 6111, 021 224 1555

வேலையாள்கள் தேவை

மிருசுவிலில் இயங்கும் தும்புத்தொழிற்சாலைக்கு வேலையாள்கள் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். பெண்களுக்கும் உகந்த வேலை.
077 220 8455

துன்பம் தீர்க்கும் கலியுக தெய்வம் நாகபூஷணி அம்பாள்



வெள்ளவத்தையில் பெர்னாந்து வீதியில் அமைந்துள்ள நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் அருள்வாக்கு கூறும் ஞானகணேஸ்வரி அம்மன் அவர்கள் 27.05.2017 இல் இருந்து 31.05.2017 வரை
ஞானவைரவர் ஆலயம், கலாசாலை வீதி, 2 ஆவது ஒழுங்கை, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணத்தில் அருள்வாக்குக் கூறுவார்.

★ 30.05.2017 செவ்வாய்க்கிழமை அன்னதானம் வழங்கப்படும்.

பூசை நேரம்: முற்பகல் 10.30 - 12.30 மணிவரை
மாலை 5.30 - 6.30 மணிவரை
குறிப்பு: கலாசார உடையுடன் வருகை தரவும்.
தொடர்பு: 021 221 9127, 077 801 2226
(CS/4242)

வெள்ளிவிழா வாழ்த்துக்கள்



திரு. திருமதி பிரேமச்சந்திரன் விக்னேஸ்வரி தம்பதிகள்

மலர்பொழிய மாங்கல்யபந்தம்
மாலையிட்ட மகத்தான நாளில்
வெள்ளிவிழா இன்று
வாழ்க்கையில் ஆனந்தவெளிச்சம்
தடையின்றி மின்னிட எமதும்
என்னை நான் காணும்
அவளினதுமான மடல்
ஆனந்தம் பொங்கி நீடூழி வாழ
உளமார்ந்த வாழ்த்துக்கள்





அன்புடன் வாழ்த்தும்
பிள்ளைகள்
ஆனைக்கோட்டை.



நல்லூர்க் கந்தன் திருமண சேவை

எல்லா மதம், எல்லா இனம், வெளிநாடு, உள்நாடு ஆகிய சகல திருமணங்களும் எம்மால் செய்து கொடுக்கப்படும்.

இல.303,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

வி.ஜெயந்தி
T.P: 077 9733 183
021 227 1468


நேரில் வருகை தரும் நேர்முகப் பரீட்சை

வடமாகாணம்
வணிக அபிவிருத்தி முகாமையாளர்
பதவிக்கானது

27 மற்றும் 28 வைகாசி 2017
காலை 10.00 மணி - மாலை 04.00 மணிவரை
இல: 111, 02ம் மாடி,
நக்கா வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி இலக்கம்: 076 6768295

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் நாகேந்திரம்



தோற்றம் 16.12.1948 மறைவு 24.05.2017

மீசாலை கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் நாகேந்திரம் 24.05.2017 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிர மணியம் - முத்துப் பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - நவமணி (உரும்பிராய்) தம்பதிகளின் அன்பு மருமகனும், மகாதேவியின் (தேவி அக்கா) அன்புக் கணவரும், திவாகரன் (கனடா), சுபாகரன் (ஆசிரியர் கண்டி /இரஜவல இந்து தேசிய பாடசாலை திகன) ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகராணி (கனடா), ஸ்ரீரஜனி (நல்லூர்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சின்னராசா, குலேந்திரம், இராசேந்திரம் மற்றும் கன்னிகாதேவி, மகேந்திரா தேவி, இந்திரா தேவி, சந்திராதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் உடன் பிறந்த சகோதரரும், மகாதேவன் (இளைப்பாறிய தொலைத்தொடர்பு திணைக்கள களஞ்சிய பொறுப்பாளர் - மட்டக்களப்பு), தங்கராஜா (ஜேர்மனி), Dr.பிரபாகரன், மதிவதனி, கலைவாணி (உதவிக்கல்விப்பணிப்பாளர் -சங்கீதம், கண்டி), யோகேஸ்வரி, முருகசோதி, தவமணிதேவி, குணரத்தினம், சின்னத்துரை, ஆனந்தராஜா, உதய குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், லோகேஸ்வரி (நல்லூர்), இந்திராணி (ஜேர்மனி), Dr.தமயந்தி (கண்டி), லோகநாதன் (கெகிராவ), ஜெகதீஸ்வரன் (அளவெட்டி) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.05.2017)ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் கச்சாய் எரியால்ப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மீசாலை கிழக்கு, மீசாலை.** **தகவல்:- குடும்பத்தினர்.**

**077 162 0651**

## மரண அறிவித்தல்



### திருமதி அனுராதா சுரபாஸ்கரன்

படித்த மகளிர் குடியேற்றத்திட்டம், மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி அனுராதா சுரபாஸ்கரன் 25.05.2017 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சிவத்திரு நவரத்தினம் ஐயா - மனோன்மணி அம்மா (தர்மகர்த்தா ஸ்ரீ ஞான துர்க்கை அம்மன் தேவஸ்தானம்) தம்பதியரின் அன்பு மகளும், கந்தையா வல்லிபுரம் - கமலா தேவி தம்பதிகளின் அன்பு மருமகளும், சுரபாஸ்கரன் (துர்க்கா ஸ்ரோர்ஸ். ப. ம. கு. திட்டம்) அவர்களின் அன்பு மனைவியும் , பிரணவன் (யா/ மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயம்), மிதுஷன் ஆகியோரின் அன்புத் தாயாரும், முகுந்தன் குருக்கள் (ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மன் தேவஸ்தானம்), பிரதீபன் (ஆஸ்திரேலியா), டினேஸ் (ஆஸ்திரேலியா), ஜெயதுர்க்கா, ஸ்ரீநந்தன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் , ஆர்த்திகன், ஸ்ரீநிதன், அபிசயா, கானுஜன் ஆகியோரின் அன்பு அத்தையும், லோஜிதா, சிவதர்சினி, பத்மசீலன், விஜயகுமாரன் ஆகியோரின் மைத்துனியும், சுதாயினியின் அண்ணியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.05.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக படித்த மகளிர் குடியேற்றத்திட்ட இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**"துர்க்காபுரம்"**
**படித்த மகளிர் குடியேற்றத் திட்டம்,**
**மிருசுவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

பிறப்பு 13 . 03 . 1951



இறப்பு 27 . 04 . 2017

27.04.2017 வியாழக்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

### அமரர் கந்தையா கணபதிப்பிள்ளை

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் 25.05.2017 (வியாழக் கிழமை) காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. இன்று (27.05.2017) சனிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொண்டு அன்னாரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறப்புச் செய்தி கேட்டு உடன் இவ்விடம் வந்து உதவிகள் பல புரிந்து துயர் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எம் இதயம் நிறைந்த நன்றிகள்.

**பத்திரகாளி கோயில் வீதி,**
**பருத்தித்துறை.**

**குடும்பத்தினர்.**
**077 962 9422**

## GOVERNMENT OF DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA
## DISTRICT SECRETARIAT, MULLAITIVU
## PROCUREMENT NOTICE

**Supply of Vehicle Cleaning Service for District Secretariat and other six Divisional Secretariats, Mullaitivu for one year period**

The Chairman, Departmental Procurement Committee, District Secretariat, Mullaitivu invites Sealed Bids from eligible and qualified Bidders from **Northern Provincial** for the Supply of **Vehicle Cleaning Service for 2017/2018**

| Vehicles **belonging Details for** Cleaning Service | **Duration of Service** | **Bid Bond** |
|---|---|---|
| 01. District Secretariat, Mullaitivu.<br>02. Divisional Secretariat, Maritimepattu.<br>03. Divisional Secretariat, Puthukkudiyiruppu.<br>04. Divisional Secretariat, Oddusuddan.<br>05. Divisional Secretariat, Thunukkai.<br>06. Divisional Secretariat, Manthai East.<br>07. Divisional Secretariat, Welioya. | **From 01.09.2017 to 31.08.2018** | **50000.00** |

01. The complete set of Bidding Documents can be purchased from **9.00 A.M to 3.00 P.M.** normal working days from **29th of May 2017 to 13th of June 2017** by Producing the receipt for the payment of non-refundable fee of Rs. 1000/= made to the **Shroff,** in this office or the Bid Documents can be sent by post, if the Bank draft obtained for non-refundable fee is sent along with the written request.

02. The eligible and qualified bidders must have the resident in northern provincial.

03. All Bids should be accompanied by a Bid Bond/Bid Security for the amount of **Rs. 50000.00** obtained from a recognized Bank approved by the Central Bank of Sri Lanka in favor of the District Secretary, District Secretariat, Mullaitivu and valid up to **90 days** from the date of closing of Bids.

04. The selected supplier's Bid Bond could be released with the terms of four installments. (After 03,06,09 and 12 Month with your satisfying Service)

05. The reference should be cleared mentioned on the top of the left hand corner of the envelope as "Supply of Vehicle Cleaning Service for 2017/2018"

06. Bids shall be addressed to the **"Chairman, Departmental Procurement Committee, District Secretariat, Mullaitivu"** and be delivered **on or before 2.00 P.M. on 14th of June 2017** and will be opened **immediately** in the presence of the Bidders or their Representatives.

Further details can be clarified by contacting to the Telephone nos.

**021 2290334**

**Chairman,**
**Departmental Procurement Committee,**
**District Secretariat,**
**Mullaitivu.**

(C/29032)(10)

# முஸ்லிம் கடைகளுக்கு தீ வைப்பதால் எவரும் முன்னேறவே இயலாது

## மறுமலர்ச்சி இயக்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 27

திறமை, பண்பாடுகளினூடாகவே முஸ்லிம்கள் வியாபாரத்தில் முன்னிற்கின்றனர். முஸ்லிம்கள் எவ்வாறு முன்னேற்றமடைந்தார்களோ அவ்விதம் முயற்சித்து முன்னேற வேண்டுமே தவிர கடைகளுக்குத் தீ வைத்து முன்னேற முடியாது என்ற செய்தியைச் சமூகமயப்படுத்த வேண்டியதே இன்றைய காலத்தின் தேவை என்று மறுமலர்ச்சி இயக்கத்தின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் விஜய உந்துபிட்டிய தெரிவித்தார்.

அண்மைக் காலமாகத் தெரிவு செய்யப்பட்ட முஸ்லிம் வர்த்தக நிலையங்கள், மதத் தலங்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களைக் கண்டித்து நேற்றுமுன்தினம் தேசிய நூலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் பிறக்கும்போது குறித்த இனமோ, மதமோ வேண்டுமென்று இறைவனுக்கு விண்ணப்பம் சமர்ப்பிப்பதில்லை. நாம் எதிர்பாராதவிதமாகவே ஏதோவொரு மதத்தை, இனத்தைச் சார்ந்துள்ளோம் என்ற சிந்தனை மாற்றம் மக்கள் மத்தியில் வரவேண்டும். முஸ்லிம்கள் வியாபாரத்துக்காகவே இலங்கைக்கு வந்தவர்கள். அவர்கள் வியாபாரத்தில் திறமைசாலிகள். முஸ்லிம்களின் மதத்தின் பிரகாரம் அவர்கள் வட்டி எடுப்பதோ, கொடுப்பதோ இல்லை. முஸ்லிம்களின் வியாபார முன்னேற்றத்தைப் பார்த்து ஏனையோர் பொறாமை கொள்கின்றனர். உண்மையில் பொறாமை கொள்வதைத் தவிர்த்து அவர்கள் முன்னேறிய விதத்தில் மற்றவர்களும் முன்னேற முயற்சிக்கவேண்டும் - என்றார். (த-4)

# பொருளாதார வீழ்ச்சிக்கு ரவி மீது பழி போடாதீர்

## கூறுகிறார் ஜி.எல்.பீரிஸ்



கொழும்பு, மே 27

இலங்கையின் பொருளாதாரப் பின்னடைவுக்கான முழுக் குற்றத்தையும் முன்னாள் நிதியமைச்சரான ரவி கருணாநாயக்க மீது சுமத்த முடியாதென பொது எதிரணியின் பேச்சாளர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ரவி கருணாநாயக்க தனது அமைச்சுப் பொறுப்புகளைச் சரிவர நிர்வகிக்கவில்லை என்பது தெரிந்த விடயமே என்ற போதிலும், நாட்டின் பொருளாதாரப் பின்னடைவுக்கு அவரே அடிப்படைக் காரணம் என்று கூறமுடியாது. அரசின் பலவீனமான பொருளாதாரக் கொள்கைகளும் சீரற்ற நிர்வாகமுமே இந்தப் பின்னடைவுக்கான முக்கிய காரணிகள். ரவி கருணாநாயக்க பெயரளவுக்கு நிதியமைச்சராக இருந்தாரே தவிர, அவரது அமைச்சின் முழு நிர்வாகமும் தலைமை அமைச்சரின் கையிலேயே இருந்து வந்தது.

ரவி கருணாநாயக்க நிதியமைச்சராக இருந்தபோது இலங்கை மத்திய வங்கியோ அல்லது ஏனைய வர்த்தக வங்கிகளோ அவரது கட்டுப்பாட்டில் இருக்கவில்லை. தலைமை அமைச்சருக்கு நெருக்கமானவர்கள் மாத்திரமே நிதிக் கட்டுப்பாட்டுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டார்கள்.

திறைசேரியினதும் மத்திய வங்கியினதும் நிர்வாகம் தலைமை அமைச்சரின் தனிப்பட்ட அதிகாரத்திலிருந்து வந்ததால் நிதியமைச்சரால் பெரிதாக எதையும் சாதிக்க முடியவில்லை என்பதுதான் ஏற்றுக்கொள்ளப்படவேண்டிய உண்மை என்றார். (த -4)

# ஆஸி. தலைமை அமைச்சரை சந்தித்துப் பேசினார் மைத்திரி

மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக ஆஸ்திரேலியாவுக்குச் சென்றுள்ள அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, அந்த நாட்டின் தலைமை அமைச்சரை நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

கான்பராவில் அமைந்துள்ள ஆஸ்திரேலிய நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாக, அரச தலைவர் ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

இலங்கையில் முன்னெடுக்கப்படும் நல்லிணக்கச் செயற்பாடுகள் குறித்துத் தாம் மிக்க மகிழ்ச்சியடைவதாக ஆஸ்திரேலியத் தலைமை அமைச்சர் மல்கம் டர்ன்புல் தெரிவித்துள்ளார். ஜனநாயகத்தைப் பலப்படுத்துவதற்காக இலங்கை அரசினால் சிறந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும்ஆஸ்ரேலியத்தலைமை அமைச்சர் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார்.

இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளுமாறு இதன் போது அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, ஆஸ்திரேலியத்தலைமை அமைச்சர் மல்கம் டர்ன்புல்லிற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

பேச்சுக்களைத் தொடர்ந்து இருநாடுகளுக்கும் இடையில் மூன்று ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

இருநாடுகளுக்கிடையிலான புரிந்துணர்வை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் ஆஸ்திரேலிய அயலுறவுத் துறை அமைச்சர் ஜூலி மற்றும் இலங்கை அயலுறவுத் துறை பிரதியமைச்சர் கலாநிதி ஹர்ச டி சில்வா ஆகியோர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர்.

இலங்கை புவிசரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம், ஆஸ்திரேலிய புவிசரிதவியல் நிறுவனம் ஆகியவற்றிற்கு இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றும் கைச்சாத்திடப்பட்டுள்ளது. ஆஸ்திரேலிய புவிசரிதவியல் நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி ஜேம்ஸ் ஜோன்சன் மற்றும் ஆஸ்திரேலியாவுக்கான இலங்கைத் தூதுவர் சோமசுந்தரம் ஸ்கந்தகுமார் ஆகியோர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர்.

இலங்கை சிறுநீரக நோய்த்தடுப்பு அரச தலைவர் செயலகம் மற்றும் ஆஸ்திரேலிய அணு ஆய்வு தொழில்நுட்ப அமைப்புகளிடையே புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றும் கைச்சாத்திடப்பட்டுள்ளது. ஆஸ்திரேலியாவின் அணு ஆய்வு தொழில்நுட்ப நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி அட்ரியன் பெடர்சன், ஆஸ்திரேலியாவுக்கான இலங்கைத் தூதுவர் சோமசுந்தரம் ஸ்கந்தகுமார் ஆகியோர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர். (த-5)

## கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 20.05.1935 — இறப்பு 25.05.2017



எமது பாடசாலை ஆசிரியர்
திருமதி
சுலோசனா சர்வகுணசீலன்
அவர்களின் பாசமிகு தாயார்
அமரர் மகேஸ்வரி சிவசுப்பிரமணியம்
அவர்களின்ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச்சமூகம்
யா/கோண்டாவில் இந்துக்கல்லூரி.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**இளையதம்பி நடராஜா**

தோற்றம் 24.02.1944 — மறைவு 19.05.2015

பாசமிகு கணவராக, பரிவுமிக்க தந்தையாக,
உன்னத பேரனாக,
கண்ணியம் தவறா தலைவனாக,
அனைவரிடத்தும் அன்பு காட்டும் ஆசானாக,
உறவுகளையெல்லாம் உள்ளன்போடு அரவணைத்து
வாழ்ந்து மறைந்துவிட்ட எங்கள் இதய தெய்வமே...
உங்கள் பிரிவுத் துயரின் மாறா நினைவுகளோடு
அன்பே உருவான தங்களின் உன்னத
ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

திதி: 27.05.2017

இல.16/2,
ஸ்ரான்லிக் கல்லூரி வீதி, அரியாலை.

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**மகேஸ்வரன் றெஜிந்தா**

அன்பு என்பது
எவ்வளவுதான் மனதைக்
காயப்படுத்தினாலும்
நாம் நேசித்த ஓர் இதயம் மட்டும்
என்றுமே நம்மால் மறக்கவோ
வெறுக்கவோ முடியாத ஒன்று......

என்றும் நினைவில்
**கந்தையா - குடும்பம்**
மடத்தடி வீதி,
சண்டிலிப்பாய்.
077 940 9720

பிறப்பு 20.05.1976 — இறப்பு 27.04.2017

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**மகேஸ்வரன் றெஜிந்தா**

நாள்கள் முப்பத்தொன்று சென்றிடினும்
மறந்திடுமா உன் நினைவு
பரிதவிக்குதம்மா எம் நெஞ்சம்
உன் புன்சிரிப்பைக் காண
விழியோரக் கண்ணீருடன்
உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

என்றும் நினைவில்
**கந்தசாமி - குடும்பம்**
தவசிகுளம்,
கொடிகாமம்.
077 449 2127

பிறப்பு 20.05.1976 — இறப்பு 27.04.2017

## நினைவஞ்சலிகள்

12ஆம் ஆண்டு



திருமதி
**இராசமணி பொன்னம்பலம்**
தோற்றம் 23.07.1916 — மறைவு 25.02.2005

19ஆம் ஆண்டு



அமரர்
**முத்து பொன்னம்பலம்**
(இளைப்பாறிய அதிபர்)
தோற்றம் 25.12.1914 — மறைவு 02.01.1998

30ஆம் ஆண்டு




அமரர்
**அருளம்பலம் முத்துராஜா**
(முன்னாள் உபதபால் அதிபர்
தொண்டமானாறு)
தோற்றம் 03.04.1930 — மறைவு 27.05.1987

பாசமுடன் பாங்காக வளர்த்தெம்மைப்பார் புகழ வாழ வைத்தீர்! எங்கள் அன்புத் தெய்வங்களே!
எம்மைவிட்டுப் பிரிந்து எத்தனை ஆண்டுகள் சென்றாலும்! உங்கள் நினைவலைகள் என்றும் எம்மை விட்டகலாது!
குல தெய்வங்களைப் பிரார்த்திக்கும்.

"முத்துவாசா"
கெருடாவில் தொண்டமானாறு.

குடும்பத்தினர்.



பிரிட்டனின் மன்செஸ்டர் நகரில் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த குண்டுவெடிப்பில் 22 பேர் உயிரிழந்தனர். 58 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் சேர்க்கப்பட்டிருக்கும் மன்செஸ்டர் மருத்துவமனைக்குப் பிரிட்டனின் ராணி எலிசபெத் சென்று அவர்களைப் பார்வையிட்டார். (ம)

# உங்கள் வெற்றியை உலகமே பேசுகிறது


## மக்ரோனிடம் சொன்னார் ட்ரம்ப்

பாரிஸ், மே 27

பிரான்ஸ் நாட்டின் புதிய அதிபர் மக்ரோன் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் இருவருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று நடைபெற்றது.

அமெரிக்க அதிபராகப் பொறுப்பேற்ற பின்னர் தனது முதலாவது ட்ரம்ப், பிரான்ஸ் அதிபர் மக்ரோனை நேற்றுச் சந்தித்தார். இந்தச் சந்திப்பில் பிரான்சின் வேலைவாய்ப்புப் பிரச்சினை தொடர்பில் அதிகம் ஆராயப்பட்டிருக்கலாம் என்று தெரிகிறது.

“இந்த உலகமே உங்கள் வெற்றி



சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ளார் ட்ரம்ப். சவூதி அரசர் சல்மான், இஸ்ரேல் அதிபர் நெத்தன்யாகு, பலஸ்தீன அதிபர் அப்பாஸ், பாப்பரசர், இத்தாலி அதிபர் செர்ஜியோ ஆகியோரைச் சந்தித்து அவர்களுடன் பேச்சு நடத்திய யைப்பற்றிப் பேசுகிறது. ஆச்சரியப்படும் வகையில் பரப்புரை நடத்தினீர்கள். மிகப்பெரிய வெற்றியாக இருந்தது” என்று மக்ரோனிடம் ட்ரம்ப் தெரிவித்தார் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

# அமெரிக்காவின் போர்க்கப்பலுக்கு சீனா கண்டனம்

தென்சீனக் கடற்பரப்புக்கு அமெரிக்கா தனது போர்க்கப்பல்களை அனுப்பியுள்ள நிலையில், அதற்குச் சீனா தனது கண்டனத்தைத் தெரிவித்தது. தென்சீனக் கடல் பகுதிக்கு சீனா, வியட்நாம், பிலிப்பைன்ஸ், மலேசியா, புருனே, ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் சொந்தம் கொண்டாடி வருகின்றன. இது தொடர்பில் பிலிப்பைன்ஸ் பன்னாட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது.

தென்சீனக் கடலில் சீனாவுக்கு உரிமையில்லை என்று பன்னாட்டு நீதிமன்றம் அறிவித்தது. இதைச் சீனா ஏற்கவில்லை. குறித்த பகுதியில் தனது நடவடிக்கைகளைத் தொடர்ந்துகொண்டுள்ளது. அது மட்டுமல்லாமல் செயற்கைக் கோள்களின் உதவியுடன் அந்தப் பகுதியை தமது கண்காணிப்பின் கீழ் எந்த நேரமும் வைத்துள்ளது. இந்த நிலையில் அமெரிக்கா கடந்த சில தினங்களுக்கு முன்னர் தென்சீனக் கடல் பரப்புக்குத் தனது போர்க் கப்பலொன்றை அனுப்பியது. இதை ‘ஆத்திர மூட்டும் செயல்’ என்று குறிப்பிட்டுள்ளது சீனா. “சீனாவின் அனுமதி இல்லாமல் அமெரிக்கக் கப்பல் தென்சீனக் கடலுக்குள் நுழைந்துள்ளது. இது ஆத்திர மூட்டும் செயல். இந்தத் தவறை அமெரிக்க சரிசெய்ய வேண்டும்” என்று சீனாவின் அயலுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் லூ காங் தெரிவித்தார். (ம)

# அதிபருக்கு எதிராக பிரேசிலில் கலவரம்



பிரேசிலியா, மே 27

பிரேசிலில் ஊழல் குற்றச்சாட்டு காரணமாக அதிபர் மைக்கல் டெமர் பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்திப் பல்லாயிரக்கணக்கான மக்கள் இணைந்து தொடர்ந்து பேரணிகளை நடத்தி வருகின்றனர். ஆங்காங்கே கலவரங்களும் வெடிக்கின்றன என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

பிரேசில் அதிபர் மைக்கல் டெமர் மீது முறையான ஆதாரங்களுடன் ஊழல் மோசடிக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இதனால் அவர் பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்தி எதிர்ப்புக் குரல்கள் வலுக்க ஆரம்பித்துள்ளன. எனினும் அவர் பதவி விலக மறுப்புத் தெரிவித்துள்ளார். இதனால் இளைஞர்கள் அரசுக்கு எதிராக பேரணிகளிலும் கலவரங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

தலைநகர் பிரேசிலியாவில் நேற்று முன்தினம் 35ஆயிரம் மக்களின் பங்குபற்றலுடன் மிகப்பெரும் பேரணி நடைபெற்றது. பேரணியில் ஈடுபட்டவர்களை தடியடி மற்றும்கண்ணீர் புகைக்குண்டுகளின் மூலம் பொலிஸார் கலைக்க முற்பட்டபோது பேரணி கலவரமாக மாறியது. இதையடுத்து அரச அலுவலங்கள் ஆர்ப்பாட்டக்காரர்களால் தீக்கிரையாக்கப்பட்டன.

பிரேசிலியாவில் மட்டுமல்லாமல் ரியோ டி ஜெனிரோ உள்ளிட்ட நகர்களிலும் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் வெடிக்க ஆரம்பித்துள்ளன.

உரிய தீர்வு காணப்படாது விடில் யேல் நிலமை மேலும் மோசமாகலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (ம)

# அல் ஜசீரா உள்ளிட்ட 21 ஊடகங்கள் தடை

## எகிப்து அரசு நடவடிக்கை

மத்திய கிழக்கு நாடுகளில் புகழ்பெற்ற ஊடகமான அல் ஜசீரா உட்பட 21 ஊடக இணையத்தளங்களை எகிப்து அரசு தடை செய்துள்ளது.

இது தொடர்பில் எகிப்து அரசின் மினா செய்தி நிறுவனம், ‘கட்டாரை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் அல் ஜசீரா உட்பட 21செய்தி இணையத்தளங்கள் தீவிரவாதத்தை ஆதரித்ததற்காகவும், பொய்யான தகவல்களை வெளியிட்டதற்காகவும் எகிப்தில் முடக்கப்பட்டுள்ளன. மேலும் அந்தச் செய்தி நிறுவனங்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது’ என்று குறிப்பிட்டது.

ஈராக், சிரியா நாடுகளில் நிலவும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான போர், சிரியாவில் நிகழும் உள்நாட்டுப் போர் தொடர்பான தகவல்களைவழங்குவதில் அல் ஜசீராவின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



# அமெரிக்க ஊடகங்களுக்கு பிரிட்டன் கடும் கண்டனம்

## வருத்தம் தெரிவித்தார் ட்ரம்ப்

லண்டன், மே 27

மன்செஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடைய கோரமான படங்களை வெளியிட்டமைக்காக சில அமெரிக்க ஊடகங்களுக்கு பிரிட்டன் கண்டனம் தெரிவித்தது. இந்தச் செயலுக்காக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் வருத்தம் தெரிவித்தார்.

மன்செஸ்டர் நகரில் கடந்த செவ்வாய்க்கிழமை தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டது. 22 பேர் உயிரிழந்தனர். 58 பேர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இது தொடர்பிலான தனது பிரத்தியேக ஒளிப்படங்களை நியூயோர்க் டைம்ஸ் வெளியிட்டது. இதற்கு பிரிட்டன் கண்டனம் தெரிவித்தது.

‘இவ்வாறான ஒளிப்படங்கள் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மீண்டும் மீண்டும் மனஅழுத்தத்தையும் வருத்தத்தையும் கொடுக்கும் செயல்’ என்று சாடியது. ‘இது அமெரிக்காவின் நம்பிக்கைத் துரோகம்’ என்றும் குறிப்பிட்டது. இதற்கு ட்ரம்ப் வருத்தம் தெரிவித்தார். ‘ஊடகங்களின் இந்தச் செயல்கள் மிகுந்த தொந்தரவாக உள்ளன’ என்றும் அவர் குறிப்பிட்டார். (ம)

# பிலிப்பைன்ஸின் மாராவியில் ஆயுததாரிகளுக்கு எதிராக கடும் சண்டை

மணிலா, மே 27


பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் இருந்து 800 கி.மீ. தொலைவில் உள்ள மாராவி தீவில் ஐ.எஸ். ஐ.எஸ். ஆதரவு ஆயுததாரிகள் ஊடுருவியதை அடுத்து அங்கு இராணுவத்துக்கும் ஆயுததாரிகளுக்கும் இடையில் கடும் சண்டை நடைபெற்று வருகிறது.


ஆயுததாரிகளை உடனடியாகக் கட்டுப்படுத்துவதற்காக மாராவித் தீவில் தனது கட்டளைக்கு உட்பட்ட இராணுவ



ஆட்சியை அறிவித்துள்ளார் பிலிப்பைன்ஸ் அதிபர் றொட்றிக்கோ டுடேர்தே. தீவில் இருந்த மக்கள் அவசரஅவசரமாக வெளியேற்றப்பட்டு ஏனைய இடங்களில் உள்ள மண்டபங்கள்மற்றும்பாடசாலைகளில்தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு இராணுவப் பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளது.

ஆயுததாரிகளை ஒடுக்கும் முயற்சியில் டுடேர்தேயும் இராணுவத்தினரும் கடும் முனைப்புக் காட்டுகின்றபோதிலும், ஆயுததாரிகள் மக்களையும் சில பாதிரியார்களையும் மனிதக் கேடயங்களாக பிடித்து வைத்திருப்பதால் நிலமை மேலும் மோசமடையும் என்று பிலிப்பைன்ஸ் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)













நாட்டில் அதிகூடிய மழை வீழ்ச்சி காரண மாக வெள்ளம் மற்றும் மண் சரிவுக ளால் சப்ரகமுவ மாகாணத்தின் பல பகு திகள் பேரிடரைச் சந்தித்துள்ளன .(ஐ-5)

# ஆறுகளை அண்டிய பிரதேசங்களில் வதியும் மக்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, மே 27

சீரற்ற காலநிலை காரணமாக ஆறுகளை அண்டிய பிரதேசங்களில் வாழும் மக்களை உடனடியாகத் தமது இருப்பிடங்களிலிருந்து பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அரச தகவல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

எதிர்வரும் 48 மணித்தியாலங்களுக்குள் வெள்ளம் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகளவில் இருப்பதால் இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

வெள்ள அபாயம் நிலவும் பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளுக்கு விடுமுறைவழங்கி, அந்தப் பாடசாலைகளில் பாதிப்புக்குள்ளாகும் மக்களைத் தங்க வைப்பதற்கான இடவசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)



# வானூர்தியிலிருந்து விழுந்த இரு வான்படையினர் காயம்

கொழும்பு, மே 27

இடர் நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த, உலங்கு வானூர்தியிலிருந்து விழுந்த இரு வான் படையினர் காயமடைந்தனர்.

நாட்டின் நான்கு மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள மிக மோசமான வானிலை காரணமாக, பலர் உயிரிழந்ததுடன், காணாமலும் போயுள்ளனர். இந்த இடர் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளில் முப்படையினரும் முழு மூச்சாக ஈடுபட்டுள்ளனர்.

பெல் 212 மற்றும் எம்.ஐ. 17 வகை உலங்கு வானூர்திகள் மீட்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்று வான் படை தெரிவித்தது.

இந்த நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இரண்டு வான் படையினர் உலங்கு வானூர்தியிலிருந்து தவறி வீழ்ந்தனர்.

இருவரும் காலி கராப்பிட்டிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ-5)

# களுத்துறையில் மண்சரிவு 9 பேர் சாவு; 12 பேர் மாயம்

கொழும்பு, மே 27

அடைமழை காரணமாக மண் சரிவு ஏற்பட்டதில் களுத்துறை மாவட்டத்தில் 9 பேர் உயிரிழந்தனர். கர்ப்பிணிப் பெண் உட்பட 12 பேர் காணாமற் போயுள்ளனர்.

கடந்த இரண்டு தினங்களாகக் கொட்டித் தீர்க்கும் கன மழை காரணமாக நாட்டின் தென்பகுதியில் பேரிடர் ஏற்பட்டுள்ளது. மேல்மாகாணத்துக்கு உட்பட்ட களுத்துறை மற்றும் கம்பகா மாவட்டங்களும் இதில் சிக்குண்டுள்ளன.

களுத்துறை மாவட்டத்தின் புளத்சிங்களப் பிரதேச செயலர் பிரிவில் அகலவத்தையில் நேற்று இந்த மண்சரிவு ஏற்பட்டது.

இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உள்ளிட்ட 9 பேர் உயிரிழந்தனர். அவர்களின் உடலங்கள் மிகுந்த சிரமங்களின் மத்தியில் மீட்கப்பட்டன. உடலங்கள் பிம்புர மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டன.

அதேவேளை, இந்த மண் சரிவு காரணமாக கர்ப்பிணிப் பெண் உள்ளிட்ட 12 பேர் காணாமற் போயுள்ளனர். அவர்களைத் தேடும் நடவடிக்கைகள் தொடர்கின்ற போதிலும், மழை காரணமாக சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்தனர். மழை தொடர்ந்தும் பெய்து கொண்டிருக்கின்றது. மண் சரிவு அபாயம் நீடிக்கின்றது.

அதன் காரணமாக மீட்பு நடவடிக்கைகளில் பாதிப்பு ஏற்படுவதாகப் பாதுகாப்புத் தரப்பினர் சுட்டிக்காட்டுகின்றனர்.

கம்பகா மாவட்டத்தின் பியகமப் பிரதேச செயலர் பிரிவில் நிலச்சரிவு காரணமாக 2 பேர் உயிரிழந்தனர். மதில் வீழ்ந்தே இவர்கள் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-5)

# வெள்ளத்தில் சிக்குண்டவர் தொலைபேசியில் அபயக்குரல்

## குழந்தைகளின் பசி தீர்க்குமாறு கோரிக்கை

கொழும்பு, மே 27

15 குழந்தைகளுடன் வெள்ளத்தில் சிக்குண்ட ஒருவர் அபயக் குரல் எழுப்பியுள்ளார். அங்கிருந்து உதவி வழங்குமாறு தொலைபேசியூடாக கோரிக்கை விடுத்துள்ளார்.

காலி மாவட்டத்தின் ஹினிதும நுககஹா பகுதியில் உள்ள வீடொன்றில் பதினைந்து குழந்தைகளுடன் இருபதுக்கும் மேற்பட்டவர்கள் சிக்கியுள்ளனர். இந்தத் தகவலை, அங்கிருப்பவர் தொலைபேசி மூலமாகத் தெரிவித்துள்ளார்.

'நேற்று முன்தினம் மாலை ஆறு மணியளவில் மழை பெய்ய ஆரம்பித்தது. மழை தொடர்ச்சியாகப் பெய்து கொண்டிருந்ததால் இரவு பத்து மணியளவில் இந்தப் பகுதியில் வீடுகள் அனைத்தும் வெள்ளத்தில் மூழ்க ஆரம்பித்தன.

இப்போது நாம் அனைவரும் ஒரு மாடி வீட்டிலேயே தங்கியிருக்கிறோம். நாம் இருக்கும் வீடு ஒரு தனித் தீவு போலக் காட்சியளிக்கிறது. ஏற்கனவே ஒரு வீட்டில் இருந்து கூக்குரல் எழுந்ததால், பரிசல் போன்ற ஒன்றை அமைத்துக்கொண்டு சென்று, அவர்களையும் மீட்டு வந்து எமது வீட்டில் தங்க வைத்திருக்கிறோம். நாம் செல்லும் வரை அவர்கள் கூரையைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருந்தனர். வெள்ளத்தில் மூழ்கவிருந்த சுமார் 15 குழந்தைகளும் தற்போது எம்முடன் [illegible]க்கின்றனர்.

குழந்தைகளின் பசியைத் தீர்க்கப் போதுமான உணவு இல்லாததே தற்போது பிரச்சினையாக இருக்கிறது. பேரிடர் நிவாரணக் குழுவுக்கு அழைப்பு விடுத்தபோது, அவர்களால் நாம் இருக்கும் பகுதிக்குள் நுழைய முடியாதுள்ளதாகத் தெரிவித்தனர். மழை இன்னும் விட்டபாடில்லை.

மழை மேலும்தொடர்ந்துபெய்தால்நாம்உயிர் தப்ப வழியே இல்லை' என்று அவர் தொலைபேசி ஊடாகத் தெரிவித்துள்ளார். (ஐ-5)

14
பெ
10பே

கொழும்பு, மே
14 வருடங்க
மாவட்டம் பெ
ஆகக் குறை
ரிழந்துள்ள
செயலர் ஊட
சப்ரகமுவ ம
னபுரி மாவ

# பேரிட
# பாடச

கொழும்பு, மே 2
பெருமழை, ம
ருக்கு என்று பே
சப்ரகமுவ மாக
லைகளுக்கும்
றைக்கு வரும்
விடப்பட்டுள்ள
மாவட்டச் செய
விடுமுறைஅனு
டுள்ளன. கடந்த
டித் தீர்த்த பெ
த்த மாகாண
ட்டுள்ளது.
அசாதாரண அ
ண்சரிவு ஏற்ப
கொள்ளப்பட்ட
இந்த இடர் நில
லைகளுக்கு வி
இந்தத் தகவ
கல்வி அமைச்











# 4 வருடங்களுக்குப் பின்னர் பரு வெள்ளத்தில் இரத்தினபுரி

## பேர் வரை சாவு

், மே 27
ங்களுக்குப் பின்னர் இரத்தினபுரி பெருவெள்ளத்தில் சிக்குண்டுள்ளது. றைந்தது பத்துப் பேர் வரையில் உயி ளனர் என்று மாவட்ட மேலதிகச் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.
வ மாகாணத்துக்கு உட்பட்ட இரத்தி ாவட்டத்தை ஊடறுத்துச் செல்லும் களுகங்கை பெருக்கெடுத்துள்ளது. தொடர் மழை காரணமாக பல்வேறு பாகங்களிலிருந் தும் வந்து சேர்ந்த வெள்ள நீர், களுகங்கையு டன் கலந்துள்ளது.
அதனால் களுகங்கையின் நீர் மட்டம் அசாதா ரணமாக உயர்ந்துள்ளது.
இந்தத் திடீர் நீர்மட்ட அதிகரிப்பால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் சிக்கிக் கொண்ட 10 பேர் உயிரிழந்தனர். மாவட்டத்தின் 5 பிரதேச செய லர் பிரிவுகளுமே பாதிப்பை எதிர்கொண்டுள் ளன. 34 குடும்பங்களைச் சேர்ந்த 128 பேர் இடர்களை எதிர்கொண்டுள்ளனர் என்று அறிக்கையிடப்பட்டுள்ளது. மீட்பு நடவடிக்கை களை மேற்கொள்வதற்கு மாவட்டத்துக்குப் படகுகள் தேவைப்படுவதாகவும் மாவட்ட மேலதிக செயலர் குறிப்பிட்டார். (ஐ-5)

## தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் இரு நுழைவாயில்களுக்குப் பூட்டு

கொழும்பு, மே 27
தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் கொக்மாதுவை மற் றும் வெலிப்பன்னை ஆகிய பிரதேசங்களின் நுழைவா யில்கள் மூடப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்த னர். அத்துடன் அதிவேக நெடுஞ்சாலையைப் பயன்படுத் தும் போது அவதானமாகப் பயன்படுத்துமாறும் அறிவித் துள்ளனர்.
நாட்டில் சீரற்ற காலநிலையால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள் ளது. பல ஆறுகள் பெருக்கெடுத்துள்ளமையால், பல பிர தேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. தெற்கு அதி வேக நெடுஞ்சாலையின் கொக்மாதுவை மற்றும் வெலிப்பன்னைப் பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.
இந்தப் பகுதியினூடாக உட்செல்லவோ அல்லது வெளி செல்லவோ முடியாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், இந்தப் பகுதியினூடாக பயணிக்கும் சாரதிகளை மாற்று வீதிகளைப் பயன்படுத்துமாறும் வேண்டுகோள் விடுக் கப்பட்டுள்ளது.
மேலும், அதிவேக நெடுஞ்சாலையைப் பயன்படுத்தும் போது மணிக்கு 60 கிலோ மீற்றர் வேகத்தில் வாகனத் தைச் செலுத்துமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபை சார திகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது. (ஐ-5)

# டரால் சப்ரகமுவ மாகாண சாலைகளுக்கு விடுமுறை

மே 27
ு. மண்சரிவு, வெள்ளப்பெ ு பேரிடரால் சிக்கித் தவிக்கும் மாகாணத்தின் சகல பாடசா கும் உடனடியாக நடைமு நம் வரையிலான விடுமுறை ள்ளது. அத்துடன் பிரதேச, செயலக அதிகாரிகளின் சகல அனுமதிகள் இடைநிறுத்தப்பட் டந்த இரு தினங்களாக கொட் பெருமழை காரணமாக, ாணத்தில் வெள்ளப் பெருக்கு து. ஆறுகளின் நீர்மட்டமும் அளவில் உயர்ந்துள்ளது. ஏற்பட்டு பல உயிர்கள் காவு ட்டன.
நிலைமை காரணமாகப் பாடசா விடுமுறை விடப்பட்டுள்ளது. வலை சப்ரகமுவ மாகாண மச்சின் செயலர் வெளியிட் டார். இதேவேளை, உள்நாட்டலுவல்கள் அமைச்சு மற்றும் பாதிக்கப்பட்டுள்ள பிர தேசங்களின் மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலக ஊழியர்கள் அனைவரது விடுமுறை அனுமதிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. அனைவரும் உடனடியாக சேவைக்குத் திரும்பு மாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். யாரேனும் அரச அதிகாரி வெள்ளத்தால் பாதிக்கப் பட்டுப் பணிக்குச் சமுக ரிக்க முடியாத நிலையில், அவருக்குப் திலாக மற்றொ ருவர் கடமையாற்ற வர வண்டும் என வும் அறிவிக்கப்பட்டுள்ள
பாதிக்கப்பட்ட பகுதிகளில் னிதவளப் பற் றாக்குறை ஏற்படுமிடத் ஓய்வுபெற்ற அரச அதிகாரிகளைத் காலிகமாகப் பணியமர்த்துவதற்கா முழு அதிகார மும் பாதிக்கப்பட்ட மாவ செயலாளர்க ளுக்கு வழங்கப்பட்டுள் தாகவும் தெரி விக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

### மண்மேடு சரிந்து விழுந்த இடரில்

# மண்ணுக்குள் புதையுண்ட பெண்களில் எழுவர் மாயம்

கொழும்பு, மே 27
காலி மாவட்டத்தின் நெலுவப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தேயிலைத் தொழிற்சாலையின் பெண்கள் விடுதி மீது மண்மேடு சரிந்து வீழ்ந்தது. அங்கிருந்த 10 பெண்கள் மண்ணுக்குள் புதை யுண்டு காணாமற்போயுள்ளனர் என்று இடர்முகாமைத்துவ மைய நிலையம் தெரிவித்துள்ளது.
அத்துடன் காலி, மாத்தறை, கேகாலை, அம்பாந்தோட்டை மாவட்டங்களில் 12 பேர் வரை யில் உயிரிழந்துள்ளனர்.
காலி மாவட்டத்தில் இதுவரை காலமும் வெள்ளத்தில் மூழ்காத பிரதேசங்கள் கூட இந்த வெள் ளப் பெருக்கில் மூழ்கியுள்ளன என்று அறிக்கையிடப்பட்டுள்ளது.
கடந்த 24 மணித்தியாலமாக தொடர்ந்து பெய்த மழை காரண மாக நாட்டின் பல பாகங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. களனி கங்கை, களு கங்கை ஆகியவற்றின் நீர் மட்டமும் சடு தியாக அதிகரித்துள்ளது. அத்து டன் மழை தொடர்வதன் காரண மாக மேலும் பல பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கி வருகின்றன.
தெனியாய, மொரவக்க பிரதே சத்தில் இடம்பெற்ற மண்சரி வால் 4 பேர் உயிரிழந்துள்ளனர். 16 பேர் வரை காணாமல் போயுள்ளனர். 12 வீடுகள் மண் ணில் புதைந்துள்ளன என்று மா[illegible] மாவட்டச் செயலகம் தெரிவித்துள்ளது.
பெலியத்த, வஹரக்கொடப் பிர தேசத்தில் வெள்ளத்தில் அடித் துச் செல்லப்பட்டு 11 வயதுடைய பாடசாலை மாணவர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலி ஸார் தெரிவித்தனர். வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட மாண வனை மீட்டெடுத்த பிரதேசவாசி கள் தங்காலை வைத்தியசாலை யில் சேர்ப்பித்த பின்னர், மாண வன் உயிரிழந்துள்ளார்.
காலி மாவட்டத்தின், நெலுவப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தேயிலைத் தொழிற்சாலையின் பெண்கள் விடுதி மீது மண் மேடு சரிந்து விழுந்ததில் அங்கிருந்த 10 பெண்கள் வரை மண்ணுக் குள் புதையுண்டு போயுள்ளனர்.
அதனையடுத்துப் பொலிஸாரும் வானூர்திப் படையினரும் இணைந்து மேற்கொண்ட தேடு தல் பணியில் 3 பெண்கள் மீட் கப்பட்டனர். அவர்களில் இருவர் கராப்பிட்டிய வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்ட பின்னர், அதில் ஒருவர் உயிரிழந்துள் ளார். காயமடைந்த மற்றைய பெண் கராப்பிட்டிய வைத்தியசா லையில் சிகிச்சை பெற்று வரு கின்றார். மண்ணுக்குள் புதைந் துள்ள ஏனைய பெண்களைத் தேடும் பணிகள் தொடர்ந்து இடம் பெற்றுக் கொண்டிருப்பதாக இடர்முகாமைத்துவ மைய நிலையம் தெரிவித்தது. (ஐ-5)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ரத்துப்பஸ்வெல சொல்லித்தரும் பாடம்

ரத்துப்பஸ்வெல என்ற இடத்தில் 2013ஆம் ஆண்டு பொதுமக்கள்மீது இராணுவத்தினர்நடத்தியதுப்பாக்கிச் சூடு தொடர்பில் இராணுவ அதிகாரியானபிரிகேடியர்தேசப் பிரிய குணவர்த்தன கைது செய்யப்பட்டிருக்கிறார். துப்பாக்கிச் சூட்டோடு தொடர்புபட்ட இராணுவ அணியின் கட்டளையிடும் அதிகாரியாக அவர் இருந்த காரணத்தால் கட்டளைப்பொறுப்பாளியானஅவர்குற்றவிசாரணைப்பிரிவின் சிறப்பு அணியினால் கைது செய்யப்பட்டிருக்கிறார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் என்ற சந்தேகத்தில் ஏற்கனவே 3 இராணுவத்தினர் கைது செய்யப்பட்டிருக்கும் நிலையில் இந்தக் கைதும் இடம்பெற்றுள்ளது.

சுத்தமான குடிதண்ணீர் கேட்டுப் போராட்டம் நடத்திய மக்களை அடக்குவதற்கு 2013ஆம் ஆண்டு ஆவணி மாதம் முதலாம்திகதி இராணுவத்தினர்துப்பாக்கிச்சூடுநடத்தினர். இதில் 14 வயதுச்சிறுவன் உட்பட 3 பேர் உயிரிழந்தனர். 33 பேர் காயமடைந்தனர். மகிந்த ஆட்சிக் காலத்தில் நடந்த இந்தச் சம்பவம் குறித்து தற்போதைய அரசின் காலத்தில் விசாரணைகள்தீவிரப்படுத்தப்பட்டே இந்தக்கைதுகள்எல்லாம் இடம்பெற்றுள்ளன.

பொதுமக்கள் அநியாயமாகக் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் அதற்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுத்திருப்பதற்காக அரசைப்பாராட்ட வேண்டும். அதிலும் சம்பவத்துக்காக 3 சிப்பாய்களைமட்டும்குற்றவாளிகளாக்கி மாட்டிவிடாமல் அதற்கான கட்டளையை வழங்கியவர்களையும் தேடிப் பிடிக்கத் தொடங்கியிருப்பது வரவேற்கத்தக்கது. கட்டளைகள் இன்னும் மேலிடத்திலிருந்தே பிரிகேடியருக்கும்கிடைத்திருக்கும்என்பது வெளிப்படையானது. அடுத்தடுத்த விசாரணைகளில் அவ்வாறு உத்தரவிட்ட, கட்டளை வழங்கியவர்களும் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன்பாக நிறுத்தப்பட வேண்டும்.

ரத்துப்பஸ்வெல சம்பவத்தில் எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகளைப் பார்க்கின்றபோதும், அதில் காட்டப்படும் அக்கறையைப்பார்க்கின்றபோதும், விசாரணைமுறையைப் பார்க்கின்றபோதும் தவிர்க்கவே முடியாமல் ஒரு கேள்வி எழுகிறது.

வடக்குகிழக்கில்போரின்போதுபடையினரிடம்ஒப்படைக்கப்பட்ட பின்னர்காணாமல் ஆக்கப்பட்டவர்களின்வழக்குகளிலும், படையினரால் சுற்றிவளைப்புகளின்போது கைது செய்து கொண்டு செல்லப்பட்டு, பின்னர்காணாமல் ஆக்கப்பட்டவர்களின் வழக்குகளின்போதும், இறுதிப் போரில் வைத்தியசாலைகள், போர்தவிர்ப்பு வலயம் ஆகியவற்றின் மீது தாக்குதல்களை நடத்திப் பொதுமக்கள் உயிர்களைக் காவு வாங்கிய வழக்குகளின் போதும் ஏன் இத்தகைய அக்கறையும் விசாரணை முறைமையும் காட்டப்படவில்லை என்பதே எழுகின்ற அந்தக் கேள்வி.

படையினரிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பிலும், படையினரால் கைது செய்யப்பட்ட பின்னர் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பிலும் குற்ற விசாரணைப் பொலிஸார் இதுபோன்ற விசாரணை முறையைப் பின்பற்றவுமில்லை; ஆர்வத்தைக் காட்டவுமில்லை. அப்படிக் காட்டியிருந்தால், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய படையணியில் இருந்து விசாரணைகளைத் தொடங்கி, அவர்கள்காணாமல் ஆக்கப்பட்டதற்குப் பொறுப்பாக இருந்தவர்கள், அதற்கானகட்டளைப்பொறுப்பாளர்கள்வரையில் அனைவரையும் கைது செய்து நடவடிக்கை எடுத்திருக்க முடியும். குறைந்தபட்சம்காணாமல் ஆக்கப்பட்டவர்களில் சிலருக்காவது என்னநடந்திருக்கும் என்று கண்டறிந்திருக்க முடியும்.

ஆனால், அப்படியெல்லாம் எதுவும் செய்யாமல் இருப்பது கொழும்பு அரசுகளின் ஒருகண்ணில் வெண்ணெய்யும், மறு கண்ணில் சுண்ணாம்புமான அணுகுமுறையையே வெளிப்படுத்திக் காட்டுகிறது. காணாமற்போனோர் தொடர்பான அலுவலகத்தை அமைப்பதற்குக்கூட இன்னமும் முன்வராத நிலையே இங்கு இருக்கிறது. தமிழ் மக்கள் இலங்கையில் இரண்டாந்தரக் குடிமக்களாகத்தான் நடத்தப்படுகிறார்கள் என்பதற்கு இதற்கு மேலும் உதாரணம் வேண்டுமா என்ன?

# அரசுக்குள்ளிருந்து தலைதூக்கிவரும் பிரளயத்துக்கான தீப்பொறிகள்

சிங்கள மூலம்-ஆதிபாத (ஞாயிறு மவ்பிம)
தமிழில் வீ.எஸ்.ரி

இலங்கையின் முதலாவது நாடாளுமன்றத் தேர்தலில் அதிகாரத்தைக் கைப்பற்றிய டி.எஸ். சேனாநாயக்கவின் அரசில் நிதியமைச்சராக நியமிக்கப்பட்டவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஆவார். டி.எஸ். சேனாநாயகவின் திடீர்ச் சாவையடுத்து தலைமை அமைச்சராக ஆன டட்லி சேனநாயகாவும் நிதியமைச்சராக ஜே.ஆரையே நியமித்தார். 1952 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் அதிகாரத்தை மீண்டும் கைப்பற்றிய டட்லி, ஜே. ஆரையே தமது அரசின் நிதி அமைச்சராக்கினார். அந்தவேளையில் டட்லிக்கும் ஜே.ஆருக்குமான உறவில் விரிசல் ஏற்பட்டிருந்தபோதிலும், 1953 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டதையடுத்து இருவரிடையேயான உறவு பெரிய அளவில் விரிசல் கண்டது. 1951 இல் இலங்கை 345 மில்லியன் ரூபா அபிரிமித நிதி வளத்தைக் கொண்டிருந்தபோதிலும் 1953 இல் அது 200 மில்லியன் ரூபா பற்றாக்குறையாக ஆகியிருந்தது. இதனால் ஜே.ஆர் 1953 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் நாடாளுமன்றில் முன்வைத்த வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகையை ஈடுகட்ட புதிய வரிகளை நாட்டு மக்கள் மீது சுமத்த வேண்டி ஏற்பட்டது. நாட்டின் பொருளாதாரப் பின்னடைவை ஈடுகட்ட மேற்குநாடுகள் உதவுமென ஜே.ஆர் நம்பினார். அமெரிக்காவிடம் 50 மில்லியன் டொலர் உதவிபெற ஜே.ஆர் மேற்கொண்ட முயற்சி வெற்றியளிக்கவில்லை.


அந்த வேளையில் உலக வங்கியின் ஆலோசனைகளுக்கு எடுபட்டு ஜே.ஆர் தயாரித்து முன்வைத்த வரவு செலவுத் திட்டம் கடைசியில் டட்லியின் தலைமையிலான அரசைப் பதவியிலிருந்து விலக வைக்கக் காரணமாயிற்று.

அதுவரை நாட்டு மக்களுக்கு அரசு வழங்கி வந்த பல நிவாரணங் களை நிறுத்திய ஜே.ஆர். அவற்றுக்கு மேலதிகமாக பல சேவைக்கட்டணங்களை உயர்த்தியதன் மூலம் நாட்டு மக்களது அதிருப்தியையும் எதிர்ப்பையும் சம்பாதித்துக் கொண்டார்.

### அரிசி விலையை அதிகரித்த ஐ.தே.கட்சி அரசு

ஐ.தே.கட்சி அரசு பதவியிலிருக்கும் வரை ஒரு கொத்து அரிசியை 25 சதத்துக்கு வழங்குமெனவாக்குறுதி வழங்கிப் பொது மக்களது ஆதரவை ஈட்டித் தேர்தலில் வெற்றி பெற்ற ஐ.தே.கட்சி அரசு, குறித்த அந்த வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒரு கொத்து அரிசியின் விலையை 70 சதமாக உயர்த்தியதன் மூலம் நாட்டு மக்களது கடும் எதிர்ப்பைச் சம்பாதித்துக் கொண்டது. நிதி அமைச்சரான ஜே.ஆரின் அந்த முடிவுக்கு எதிராக அந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட ஹர்த்தால் காரணமாக அரசுக்கு எதிரான எதிர்ப்புணர்வு தீவிரமடைய நேர்ந்தது. அரசுக்கு எதிரான அந்தத் தீவிர எதிர்ப்புக் காரணமாக கடைசியில் டட்லி சேனநாயக தனது தலைமை அமைச்சர் பதவியிலிருந்து தாமாக விலகிக் கொள்ள வேண்டி ஏற்பட்டது. ஜே.ஆர். தனது திட்டமொன்றை இதன் மூலம் நிறைவேற்றிக் கொண்டுள்ளார் என அந்த வேளையில் ஒரு சிலர் விமர்சித்ததுண்டு. பின்னர் தலைமை அமைச்சராகப் பதவியைக் கையேற்ற சேர். ஜோன்.கொத்தலாவலை, முதன் முதலில் மேற்கொண்ட நடவடிக்கை, ஜே.ஆரை, நிதி அமைச்சர் பதவியிலிருந்து அகற்றி அவருக்கு வேறு அமைச்சுப் பதவியொன்றை வழங்கியமை ஆகும். ஆனால் அந்த வேளையில் குதிரை லாயத்தை விட்டு வெளியேறிச் சென்று விட்டிருந்தது. 1956 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் ஐ.தே.கட்சி படுதோல்வியைச் சந்திக்க நேர்ந்தது. ஜே.ஆர். கூட தேர்தலில் தோல்வியைச் சந்திக்க நேர்ந்திருந்தது. ஆயினும் பின்னாளில் ஜே.ஆர். நாட்டின் அரச தலைவராகி நாட்டை நிர்வகித்த போதிலும், 1956 ஆம் ஆண்டில் டட்லி சேனாநாயகவின் அரசைப் பதவியிழக்க வைத்ததில் அந்தவேளைய எதிர்க்கட்சியினரை விட ஜே.ஆரே பெரும் பங்காற்றியதாக விமர்சனங்கள் வெளிவந்ததுண்டு.

1956 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் வெற்றியீட்டிய எஸ். டபிள்யூ ஆர்.டி. பண்டாரநாயகா தலைமையிலான சுதந்திரக்கட்சி களனி ராஜமகாவிகாரையில் மேற்கொண்ட மதவழிபாடுகளின் பின்னர், பஞ்ச மகா சக்தி மூலம் நிறுவப்பட்ட புதிய அரசைப் பொறுப்பேற்றுக் கொண்டது. அந்த அரசின் நிதி அமைச்சராக ஸ்ரான்லி டி.சொய்சா நிய மிக்கப்பட்டார். பண்டாரநாயகா படுகொலைசெய்யப்பட்டசம்பவத்தில் அதற்கு திட்டமிட்டதா கக் கூறப்பட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சிட்னி டி சொய்சாவின் சகோதரரே இந்த ஸ்ரான்லி டி.சொய்சா ஆவார். தம் மீதான கடும் விமர்





சனங்களையடுத்து 1959 நவம்பர் மாதம் 23 ஆம் திகதியன்று ஸ்ரான்லி டிசொய்சா தமது பதவியிலிருந்துதாமாக விலகிக் கொண்டார். அதன் தொடர்ச்சியாக அரசும் பதவியிழந்தது.

தலைமை அமைச்சர் என்ற பதவிநிலைகளுடன் ஒப்பிடும்போது நிதி அமைச்சின் செயற்பாடுகளிலேயே நல்லதும் கெட்டதும் அமைந்து, அதுவே அந்த அரசின் செயற்பாடுக்கு பாதிப்பாகவும், பாராட்டாகவும் அமைகிறது. அந்த வகையில் மிக அண்மையில் இடம்பெற்ற அமைச்சரவை மாற்றம் அரசின் வீழ்ச்சியின் ஆரம்பமாக அரசியல் அவதானிகளால் விமர்சிக்கப்படுகிறது. தாம் தமது நிதி அமைச்சின் செயற்பாடுகளை நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை நோக்கி இட்டுச் சென்றதாலேயே தமக்கு உலகின் சிறந்த நிதி அமைச்சர் என்ற கௌரவம் கிடைத்ததாகக் கூறிவந்த ரவி கருணாநாயக, தாம் அந்தப் பதவியை ஒருபோதும் கைவிடத் தயாரில்லை எனவும் கூறி வந்திருந்தார். ஆயினும் நிதி அமைச்சர் பதவிக்கு அவர் பொருத்தமானவரல்ல என அமைச்சரவை உறுப்பினர்கள் பலர் குற்றம் சாட்டி வந்தனர். அமைச்சரவை மாற்றம் மேற்கொள்ளப்படுவதன் நோக்கம், ஊழல் பேர் வழிகளை வெளியேற்றுவதாகும் எனவும் அவர்களில் பலர் கூறி வந்தனர்.

அதேவேளை அமைச்சர்களான சஜித் பிரேமதாச மற்றும் ஹரீன் பெர்னாண்டோ ஆகியோர் நிதி அமைச்சர் என்ற வகையில் ரவி கருணாநாயக தமது அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீட்டில் குறைப்புச் செய்வதாகக் குற்றம் சாட்டியிருந்தனர். ஆயினும் அவர்களுக்கும் ரவிக்கும்இடையில் கட்சிக்குள்ளான பிரபலத்துவம் குறித்த அதிகாரப் போட்டியே இத்தகைய குற்றச் சாட்டுக்களுக்கான பின்னணி எனவும் ஒரு தரப்பினர் சுட்டிக் காட்டியிருந்தனர்.

அதேவேளை நல்லாட்சி அரசு பதவி இழப்பதற்கு ரவி கருணாநாயக்க பெரும் உதவி புரிந்து வருவதாக கூட்டு எதிரணித்தரப்பின் ஒருசிலர் தெரிவித்துள்ளனர். ரவியிடமிருந்து எடுக்கப்பட்ட நிதி அமைச்சர் பதவி மங்கள சமரவீரவுக்கு வழங்கப்பட்டுள்ளமை, வெளியுறவு அமைச்சராக தமது கைவரிசையைக் காட்டி வந்த மங்களசமரவீரவுக்கு ஒரு தடுப்புக்கட்டை போடும் விதத்திலேயே தற்போது நிதி அமைச்சின் பொறுப்புக்கள்அவரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக மற்றொரு தரப்பினர் கருதுகின்றனர். வெளியுறவுத் துறையைச் சிறப்பாக முன்னெடுத்த மங்களவிடமிருந்து அந்த அமைச்சின் பொறுப்பைமீளப்பெற்று அதனை ரவி கருணாநாயகவுக்கு வழங்கியிருப்பது கேலிக்கு இடமானதொன்றெனவும்அந்தத்தரப்பினர்விமர்சித்துள்ளனர். ஆயினும் அண்மைய அமைச்சரவை மாற்றத்தின் பின்னர் அரசுக்குள் நீறு பூத்த நெருப்பாக இருந்த கருத்து வேறுபாடுகள், வெளியே பகிரங்கமாகத் தலைகாட்டத் தொடங்கியுள்ளன என்பது மட்டும் மறுக்க இயலாத உண்மையே.

அதேவேளை அண்மைய அமைச்சரவை மாற்றம், அமைச்சரவை உறுப்பினர்கள் மத்தியில் மட்டுமின்றி, அமைச்சர் மற்றும் ராஜாங்க அமைச்சர் பதவியொன்றை ஈட்டும் முனைப்பில் எதிர்ப்பார்புக்களுடன் காத்திருந்த அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியிலும் ஒரு அதிருப்தியையும் அரசுக்கு எதிரான ஒரு மனப்பொருமல் நிலையையும் தோற்றுவித்துள்ளது. மொத்தத்தில் இவர்களில் பலர் ஒரு குழப்ப நிலைக்கு உட்பட்டுள்ளதாகக் கருதமுடிகிறது.

அமைச்சரவை மாற்றம் காரணமாகச் சூடாகிப் போயுள்ள அரச தரப்புக்குள், எதிர்வரும் நாள்களில் எத்தகைய சிக்கல்கள் தலைதூக்கப் போகின்றன என்பதை எவராலும் நிச்சயிக்க இயலாது போயிருப்பினும், அரசுக்கும் ஏதோவொரு பிரளயம் தலைதூக்கவே வாய்பிருப்பதாக அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

அந்த வகையில் முன்னைய மகிந்த அரசைப் பதவியிலிருந்து அகற்றி, நல்லாட்சி அரசைப் பதவிக்குக் கொண்டு வந்து பெரும் அரசியல் மாற்றமொன்றை ஏற்படுத்திய தரப்புக்கள் இன்றைய நல்லாட்சி அரசைப் பதவி கவிழ்க்க முயலமாட்டா என எவராலும் உறுதி கூற இயலாது.


> 1952 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் அதிகாரத்தை மீண்டும் கைப்பற்றிய டட்லி, ஜே. ஆரையே தமது அரசின் நிதி அமைச்சராக்கினார். அந்தவேளையில் டட்லிக்கும் ஜே. ஆருக்குமான உறவில் விரிசல் ஏற்பட்டிருந்த போதிலும், 1953 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டதையடுத்து இருவரிடையேயான உறவு பெரிய அளவில் விரிசல் கண்டது. 1951 இல் இலங்கை 345 மில்லியன் ரூபா அபிரிமித நிதி வளத்தைக் கொண்டிருந்த போதிலும் 1953 இல் அது 200 மில்லியன் ரூபா பற்றாக்குறையாக ஆகியிருந்தது.



**மீண்டும் மீண்டும் ஐ.தே.கட்சி அரசின் நிதி அமைச்சர் ஜே.ஆரே**

1960 மார்ச் மாதம் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் டட்லி சேனாநாயகவின் தலைமையிலான ஐ.தே.க அரசு ஆட்சி அமைத்த வேளை அதன் நிதி அமைச்சராக ஜே.ஆர் நியமிக்கப்பட்டார். சிம்மாசனப் பிரசங்க வாக்கெடுப்பில் தோல்வியுற்ற அரசு, 30 நாள்களில் பதவிஇழந்தது. தொடர்ந்து அதே ஆண்டின் ஜூலை மாதத் தேர்தலில் சிறிமாவோவின் தலைமையிலான அரசு பதவியேற்றவேளை பீலிக்ஸ்டயஸ் பண்டாரநாயகா அந்த அரசின் நிதி அமைச்சராக நியமனமானார். அரசுக்குள் தமக்கெதிராக உருவான எதிர்ப்புக்களையடுத்து 1962 ஆம் ஆண்டில் பீலிக்ஸ் டயஸ் தமது நிதியமைச்சர் பதவியைக் கைவிட்டார். 1960 ஜூலை முதல் 1964 ஆம் ஆண்டுவரை நாட்டின் நிதி அமைச்சர்களாக ஐவர் பணியாற்றியிருந்தனர் என்பது சுவாரஸ்யமான ஒன்றாகும்.

அந்த வகையில் இலங்கை அரசியல் வரலாற்றில் பதவியிலிருந்த அரசுக்கள் கவிழ்க்கப்படப் பெரும்பாலும் காரணமாக அமைந்தது அந்தந்த அரசுக்களது நிதி அமைச்சர் பதவிகளே. ஒரு அரசின் அரசுத்தலைவர்,



## ஆசிரியருக்கான கடிதம்

### இனவாதிகளது அட்டகாசம் அடக்கப்பட வேண்டும்

நாட்டின் சகல இனத்தவர்கள் மத்தியிலும் நல்லிணக்கத்தையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்துவதன் மூலமே நாட்டில் அமைதியையும் ஒற்றுமையையும் உருவாக்க முடியும் என்ற கருத்து இன்று இனங்கள் மத்தியிலும் அரசியல்வாதிகள் தரப்பிலும் உறுதியாக நம்பப்படும் நிலை உருவாகி வருகிறது. இந்த நிலையில் கடந்த சில ஆண்டுகளாக சிங்கள, பௌத்த பெரும்பான்மை இனத்தவர்கள் மத்தியில் ஏனைய இனத்தவர்கள் மீதான இனவாத உணர்வைத் தூண்டி வளர்ப்பதில் ஞானசாரதேரர் போன்ற பௌத்த துறவிகள் தரப்பு கடும் அக்கறை காட்டிச் செயற்பட்டு வருகிறது.

பௌத்த மதக் கோட்பாடுகளுக்கு முற்றுமுழுதாக, நேர்மாறான விதத்தில் சண்டித்தனம் வெளிப்படுத்தும் இந்தத் தரப்பினர்களது அட்டகாசங்களும் அடாவடித்தனங்களும் நாளுக்கு நாள் எல்லை மீறிச் சென்று வருகின்றன. இதனால் தமக்குப் பல விதங்களில் பாதிப்பு ஏற்படக் கூடுமென தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் கடும் அச்சம் கொள்ளும் நிலை உருவாகி வருகிறது. அதற்குக் காரணம், குறித்த இனவாதத் தரப்பினர்களது அடாவடித்த னங்களைக் கண்டும் காணாத போக்கில் அரசு குறித்த தரப்பினருக்கு எதிராக எந்த வித நடவடிக்கைகளையும் மேற் கொள்ளாது இருந்து வருகிறது; அல்லது மேற்கொள்ளத் தயங்கி வருகிறது.

அதேவேளை நாட்டின் பல்வேறு தரப்பினர்களும் ஞானசாரதேரர் கூட்டத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அரசுக்குப் பல்வேறு வழிகளிலும் அழுத்தம் கொடுத்து வந்த நிலையில், அவையாவும் செவிடன் காதில் ஊதிய சங்கொலிக்கு ஒப்ப அரச இயந்திரத்தால் அலட்சியம் செய்யப்பட்டு வருகின்றன. இத்தகைய வாய்ப்பைக் கையிலெடுத்து ஞானசாரதேரர் கூட்டம், மேன்மேலும் வீறு கொண்டெழுந்து சட்டத்தைக் கையில் எடுத்துச் செயற்படும் விதத்தில் இனவாதத் தீயைப் பரப்பி வருகின்றது.

இப்போது தான் நித்திரையால் விழித்துக் கொண்ட நல்லாட்சி அரசு ஞானசாரதேரரரைக் கைது செய்யப் புறப்பட்டுள்ள நிலையில் தேரர் தலைமறைவாகியுள்ளாராம். காதில் பூச்சுத்துகிற இத்தகைய அரசியல் நாடகங்கள் வழமையாக அரங்கேறுபவை தானென்றாலும், அரசின் கௌரவத்துக்கே இழுக்குத் தேடிவைக்கும் விதத்தில் சவால் விடும் ஞானசார தேரர் தரப்பை அரசு உடனடியாகக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துவதன் மூலமே ஞானசார தேரர் போன்ற இனவாதிகளது கொட்டத்தை அடக்க இயலும்! தேரரைக் கைது செய்தால் பௌத்த புரட்சி வெடிக்கும் என்ற சவால்கள் ஒரு பக்கம் ஒதுங்கிக் கொள்ள, இன்று தாம் கைதாவதி னின்றும் தப்பித்துக் கொள்ள தேரர் தலைமறைவாகியுள்ளார் என்ற செய்தி வெறும் வாய்ச் சவடால்காரர்களது வீராவேசப் பேச்சாகக் கொள்ளத்தக்கதே.

பொ.சின்னையா
அராலி

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

## VACANCIES

Applications are invited by me up to30.06.2017 from suitably qualified persons for the following posts.

1.**CHIEF MEDICAL OFFICER (UNIVERSITY OF JAFFNA)**

**Qualifications:**

A Medical Degree of a recognized University with prescribed postgraduate qualifications and at least 12 years' experience as a medical practitioner.

**Salary Scale:**U-MO-2

89,850-15X2,020-119,880p.m as at 01.01.2020

63,828-15X1,438-85,398 p.m as at 01.01.2017

**Selection:** By Structured Interview

2. **UNIVERSITY MEDICAL OFFICER - (UNIVERSITY OF JAFFNA/ KILINOCHCHI PREMISES/ VAVUNIYA CAMPUS)**

**Qualifications:**

Medical Degree of a recognized University with at least 3 years' experience as Medical Practitioner.

The University is looking for a highly motivated individual. Training in counseling will be an added qualification.

NOTE: One year period of service as Intern Medical Officer will be considered for therequired period of experience.

Granting for study leave to the selected candidates to obtain postgraduate qualifications or experience according to the requirements of the University may be considered, subject to exigencies of service.

**Salary Scale**: U- MO 1 (II)

Rs. 54,380-10X1, 240; 1X1,520-68,300/-p.m. as at 01.01.2020

Rs. 38,768-10X883; 1X1,082-48,680/- p.m. as at 01.01.2017.

**Selection**: By Structured Interview.

3. **PROJECT MANAGER – CONSTRUCTION WORKS (UNIVERSITY OF JAFFNA)**

**Qualifications**

1. (a) Should possess a B.Sc Engineering degree from a recognized university/HEI specializing in Civil Engineering

**OR**

Should possess a B.Sc Engineering degree from a recognized university/HEI specializing in Quantity Surveying

**OR**

Equivalent professional qualifications recognized by the Institution of Engineers, Sri Lanka(IESL)

**AND**

(b) Possess a corporate membership from a recognized Institute of Engineering Institute.

**OR**

Possess a corporate membership from a recognized Institute of Quantity Surveying

**AND**

(c) A minimum of 10 years of relevant experience in construction projects, handling contracts as well managing direct labor.

**Salary Scale: U-EX2 (II)**

Rs.64, 710- 8X 1,240; 8X1, 520-86,790pm as at 01.01.2020

Rs.46,131-8X883;8X1, 082 – 61,851pm as at 01.01.2017

**Selection** : By Structured Interview.

4. **ASSISTANT REGISTRAR (LEGAL & DOCUMENTATION) (UNIVERSITY OF JAFFNA)**

**Qualifications:**

An Attorney-at-Law with A Degree in Law/Legal Studies with not less than two (02) years of experience gained in Court work, Legal work and drafting legal documentation in a State/Corporation or Reputed Private Sector Organization or official bar after obtaining the above qualification.

**OR**

An Attorney-at-Law with not less than three (03) years of experience gained in Court work, Legal work and drafting legal documentation in a State/Corporation or Reputed Private Sector Organization or official bar after obtaining the above qualification.

**Salary Scale: U-EX 1(II)**

Rs. 49,860-3X1,125-53,235(EB) 54,475;12X1,240-69,355/- p.m. as at 01.01.2020

Rs. 35,556-3X801-37,959(EB) 38,842;12X883-49,438/-p.m as at 01.01.2017

**Selection** : By Structured Interview

5. **AUDIO VISUAL TECHNICAL OFFICER – GRADE II - (UNIVERSITY OF JAFFNA)**

**Qualifications:**

1. Diploma in Technology of the Open University of Special Engineering apprenticeship Certificate issued from 1989 by the National Apprenticeship Board or National Diploma in Technology or City and Guilds Final Certificate in the field of Electronics or Power, together with one year's experience in relevant video work

**OR**

Diploma in Educational Technology or Diploma in Audio Visual Techniques of a recognized polytechnic or University provided that the courses for the Diploma in Educational Technology or the Diploma in Audio Visual Techniques are of two years duration, with one(01) years' experience in relevant video work.

**OR**

2. Pass in 3 subjects at the G.C.E (A/L) Examination in Science one sitting and six (06) years' experience in Audio Visual work.

**Salary Scale**: U-MN3 (II)

Rs 42,590- 18 X 615; 53,660p.m as at 2020.01.01

Rs 30,380- 18 X 438; 38,264 p.m as at 2017.01.01

**Selection**: By Interview

6. **CURATOR (LANDSCAPE) GRADE III - (UNIVERSITY OF JAFFNA/ VAVUNIYA CAMPUS)**

**Qualifications:**

1. Should possess a four year special Degree in Agriculture or Agricultural Technology & Management and majoring in Crop Science / Horticulture / Floriculture / Forestry from a recognized University /HEI with not less than one (01) year of experience in landscaping in a State/Corporation or reputed Private Sector organization in supervisory capacity.

**OR**

2. Should possess a four year special Degree in Botany of a recognized University/HEI with not less than two (02) years of experience in Landscaping in State/Corporation or reputed Private Sector organization in supervisory capacity.

**Salary Scale**: U- EX1 (II)

Rs. 49,860- 3X1,125-53,235(EB) 54,475; 12X1,240-69,355/-p.m as at 01.01.2020

Rs. 35,556- 3X801 - 37,959(EB) 38,842; 12X883- 49,438/- p.m as at 01.01.2017

**Selection**: By Structured Interview.

7. **GRADUATE TRANSLATOR- GR-II - (UNIVERSITY OF JAFFNA)**

**Qualifications:**

1. A degree of a recognized University with Sinhala/Tamil as a subject

**AND**

A credit pass in English Language or Literature at the G.C.E (Ordinary Level) Examination or should have passed the G.C.E (Advanced level) or Higher examination in the English medium.

**Note:**

1. If the vacancy is for a Sinhala/English Translator then these two subjects should be specified in the advertisement calling for applications. Similarly if the vacancy is for Tamil/English or Sinhala/Tamil then these subjects should be specified.

2. Preference will be given to graduates who have offered English as a subject for the degree and/or who are proficient in all three languages.

**Salary Scale**: U-MN3 (II)

Rs 42,590- 18 X 615; 53,660p.m as at 2020.01.01

Rs 30,380- 18 X 438; 38,264 p.m. as at 2017.01.01

**Selection**: By Selection Test and Interview

8. **SUPERVISOR (MAINTENANCE) GRADE III – (VAVUNIYA CAMPUS)**

**Qualifications:**

1. (a) G.C.E (Ordinary Level) Examination in six subjects at not more than two sittings with credit passes in Sinhala / Tamil / English Language or Literature and Arithmetic / Commercial Arithmetic / Mathematics;

**OR**

(b) Employees of the UGC or Higher Educational Institutions, who have passed G.C.E(Ordinary Level) Examination in six subjects at not more than three sittings with Sinhala / Tamil / English Language or Literature and Arithmetic / Commercial Arithmetic / Mathematics and who have completed 8 years' satisfactory services in such institution;

**OR**

(c). Employees of the University Grants Commission or Higher Educational Institutions, who have passed the 7th standard and who have completed 15 years' satisfactory services in such institutions

2. At least 3 years' experience in Labour supervision.

**Salary Scale** : U-MN1 (IIIA)

Rs.30,725-17x300-35,825 p.mas at 01.01.2020

Rs.21,932-17x213 -25,553 p.mas at 01.01.2017

**Selection**: By Aptitude Test and Interview

**Age limit for all the above posts: Not more than 45 years**

(*Note – Age limit is not applicable for applicants in the Government Departments /State Corporations and Statutory bodies)

**STATUTORY BENEFITS.**

1. Allowances approved by the University Grants Commission
2. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System
3. Gratuity payment
4. Employment Trust Fund benefits
5. Free medical care

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Non Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post on a payment of Rs.100/- per application form at the People's Bank, University Branch or at the Shroff's counter of the University of Jaffna.

Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/ Postal Order for Rs.100/- per application form drawn in favor of the **Bursar, University of Jaffna** together with a **self-addressed stamped envelope** 23x10 c.m. in size.

The envelope containing duly filled application form, must bear **"the name of the post applied for"** on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the **Senior Assistant Registrar/Establishment Branch (Non Academic) University of Jaffna, Thirunelvely, and Jaffna**on or before30.06.2017.

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through the Heads of respective Institutions. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received.

Incomplete and illegible applications and applications that are received after the closing date will be rejected.

**REGISTRAR,**
**University of Jaffna,**
**24.05.2017.**

# இனரீதியான பாகுபாட்டின் குறிகாட்டிகளான ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள்

கலாநிதி பா.தனபாலன்

கல்வியே நிலைத்து நிற்கும் அபிவிருத்தியின் முதன்மைக் குறிகாட்டியாகும். அறிவுச் சமூகமாக மாறிவரும் இன்றைய உலகச் சூழலில் அறிவுச் சமூகத்தின் நான்கு தூண்கள் என உலக கல்விக்குப் பொறுப்பான யுனெஸ்கோ நிறுவனம் பின் வருவனவற்றை இயம்புகின்றது.

1. நல்லாட்சி
2. கல்வி கற்ற மனித வளம்
3. புத்தாக்கமும் ஆய்வும்
4. தகவல் தொழில் நுட்பக் கட்டமைப்பு.

இவற்றை மையமாகக் கொண்டு நாடுகளையும், பிரதேசங்களையும் விரைவாக நிலைத்து நிற்கும் அபிவிருத்தியை நோக்கி முன்னேற்ற உலகளாவிய ரீதியில் இன்று பல கல்வி அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதற்கான ஆதாரங்களை அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு, கலாசார அம்சங்கள் வழங்க பிரதேச ரீதியான ஒருங்கிசைவும், அபிவிருத்தியும் விருத்தியடையும். இந்த விருத்தி இலங்கையின் வடக்கு, கிழக்கிலும் மலையகத்தில் மிக மந்த நிலையில் காணப்படுகின்றது. இனவாதம், சுயமிழந்த அரசியல் புத்தி ஜீவிகளின் விழிப்புணர்வின்மை, கதிரைகளைப் பாதுகாக்கும் அரச உத்தியோகத்தர்கள், மிகச் சாதுரியமாகத் திட்டமிட்டு நிர்வாகச் சீர்கேட்டை ஏற்படுத்தும் இனவாத தந்திரோபாயங்கள் பொருத்தமற்ற வளப்பிரயோகம் எமது பாடசாலைக் கல்வியில் பெரிய கல்விப் பின்னடைவுகளை ஏற்படுத்தி வருகின்றன. இதன் குறிகாட்டியாகவே ஜி.சி.ஈ. சாதாரணப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

அட்டவணை 1

**ஜி.சி.ஈ. (சா/த) பரீட்சை 2015-2016**
**முதலாவது தடவை பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளது பெறுபேறுகள்**
**(மாவட்ட ரீதியில் இறங்குமுக அடிப்படையில் சித்தி விகிதாசாரப்படி)**

| மாவட்டங்கள் | | 2015 | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 5க்கும் 5க்கு மேற்பட்ட பாடங்களுக்கும் தோற்றியோர் | க.பொ.த(உ/த) கற்கத் தகுதி பெற்றோர் | | சகல பாடங்களிலும் சித்தி பெறத் தவறியோர் (6 அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்களில்) | |
| | | | தொகை | வீதம் | தொகை | வீதம் |
| 01 | கொழும்பு | 31,085 | 23,649 | 76.08 | 835 | 2.69 |
| 02 | மாத்தறை | 11,358 | 8,629 | 75.97 | 201 | 1.77 |
| 03 | அம்பாந்தோட்டை | 8,508 | 6,406 | 75.29 | 174 | 2.05 |
| 04 | காலி | 14,935 | 11,138 | 74.58 | 347 | 2.32 |
| 05 | கேகாலை | 11,001 | 7,967 | 72.42 | 349 | 3.17 |
| 06 | குருநாகல் | 21,730 | 15,729 | 72.38 | 585 | 2.69 |
| 07 | கண்டி | 18,813 | 13,266 | 70.52 | 5530 | 2.82 |
| 08 | களுத்துறை | 15,267 | 10,734 | 70.31 | 497 | 3.26 |
| 09 | கம்பகா | 26,665 | 18,679 | 70.05 | 900 | 3.38 |
| 10 | மன்னார் | 1,648 | 1,125 | 68.26 | 12 | 0.73 |
| 11 | இரத்தினபுரி | 13,784 | 9,375 | 68.01 | 520 | 3.77 |
| 12 | அனுராதபுரம் | 11,545 | 7,839 | 67.90 | 432 | 3.74 |
| 13 | அம்பாறை | 8,869 | 5,995 | 67.59 | 232 | 2.62 |
| 14 | பதுளை | 12,039 | 8,069 | 67.02 | 397 | 3.30 |
| 15 | மாத்தறை | 6,415 | 4,210 | 65.63 | 251 | 3.91 |
| 16 | வவுனியா | 2,533 | 1,623 | 64.01 | 42 | 1.66 |
| 17 | மட்டக்களப்பு | 7,171 | 4,210 | 63.63 | 171 | 2.38 |
| 18 | புத்தளம் | 10,003 | 1,623 | 63.57 | 264 | 2.64 |
| 19 | பொலநறுவை | 5,015 | 4,590 | 62.59 | 274 | 5.46 |
| 20 | மொனராகலை | 6,192 | 6,375 | 60.83 | 344 | 5.56 |
| 21 | யாழ்ப்பாணம் | 9,,776 | 3,191 | 56.59 | 485 | 4.96 |
| 22 | நுவரெலியா | 9,424 | 3,936 | 60.83 | 352 | 3.74 |
| 23 | திருகோணமலை | 5,653 | 6,191 | 56.59 | 238 | 4.21 |
| 24 | முல்லைத்தீவு | 1,618 | | 51.98 | 78 | 4.82 |
| 25 | கிளிநொச்சி | 2,177 | | 46.44 | 188 | 8.64 |
| தீவு தழுவிய | | 273,2244 | | 69.33 | 8,698 | 3.18 |

| மாவட்டங்கள் | | 2016 | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 5க்கும் 5க்கு மேற்பட்ட பாடங்களுக்கும் தோற்றியோர் | க.பொ.த(உ/த) கற்கத் தகுதி பெற்றோர் | | சகல பாடங்களிலும் சித்தி பெறத் தவறியோர் (6 அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்களில்) | |
| | | | தொகை | வீதம் | தொகை | வீதம் |
| 01 | கொழும்பு | 11,438 | 8,950 | 78.25 | 197 | 1.72 |
| 02 | மாத்தறை | 31,933 | 24,382 | 76.35 | 854 | 2.67 |
| 03 | அம்பாந்தோட்டை | 8,779 | 6,701 | 76.33 | 165 | 1.88 |
| 04 | காலி | 14,777 | 11,177 | 75.64 | 288 | 195 |
| 05 | கேகாலை | 23,242 | 17,046 | 73.34 | 499 | 2.15 |
| 06 | குருநாகல் | 20,197 | 14,632 | 72.45 | 590 | 2.92 |
| 07 | கண்டி | 11,624 | 8,382 | 72.11 | 386 | 3.32 |
| 08 | களுத்துறை | 27,719 | 19,556 | 70.55 | 962 | 3.47 |
| 09 | கம்பகா | 15,762 | 11,056 | 70.14 | 447 | 2.84 |
| 10 | மன்னார் | 13,209 | 9,735 | 69.71 | 490 | 3.51 |
| 11 | இரத்தினபுரி | 12,254 | 8,482 | 69.22 | 406 | 3.31 |
| 12 | அனுராதபுரம் | 7,109 | 4,911 | 69.08 | 246 | 3.46 |
| 13 | அம்பாறை | 9,814 | 6,600 | 67.25 | 241 | 2.46 |
| 14 | பதுளை | 13,209 | 8,844 | 66.96 | 526 | 3.98 |
| 15 | மாத்தறை | 6,304 | 4,148 | 65.80 | 276 | 4.38 |
| 16 | வவுனியா | 2,540 | 1,660 | 65.35 | 69 | 2.72 |
| 17 | மட்டக்களப்பு | 5,832 | 3,788 | 64.95 | 238 | 4.08 |
| 18 | புத்தளம் | 10,591 | 6,850 | 64.68 | 285 | 2.69 |
| 19 | பொலநறுவை | 1,715 | 1,090 | 63.56 | 21 | 1.22 |
| 20 | மொனராகலை | 9,433 | 5,847 | 61.98 | 440 | 4.66 |
| 21 | யாழ்ப்பாணம் | 10,359 | 6,389 | 61.68 | 389 | 3.76 |
| 22 | நுவரெலியா | 8,098 | 4,708 | 58.14 | 345 | 4.26 |
| 23 | திருகோணமலை | 1,620 | 927 | 57.22 | 79 | 4.88 |
| 24 | முல்லைத்தீவு | 5,832 | 3,309 | 56.22 | 291 | 4.99 |
| 25 | கிளிநொச்சி | 2,105 | 1,038 | 49.31. | 170 | 8.08 |
| தீவு தழுவிய | | 286,2551 | 200,208 | 69.94 | 8,900 | 3.11 |

**மாவட்ட ரீதியாக 2016 ஜி.சி.ஈ. (சா.த) பெறுபேறுகள்**
**2015 - 2016 ஒப்பீடு**

**அட்டவணை 1**

இன ரீதியான பாகுபாட்டின் பல்வேறு வகையான தாக்கங்கள் ஜி.சி.ஈ. சாதாரணதரப் பெறுபேறுகளின் விளைவுகளாகவுள்ள மையப் புள்ளி விவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. மாவட்ட அடிப்படையில் பெறுபேறுகளின் வீழ்ச்சி தமிழர்கள் கூடுதலாக வாழும் கிளிநொச்சி, திருகோணமலை, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, நுவரெலியா, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய மாவட்டங்களில் காணப்படுகின்றன.

கல்வியில் சமவாய்ப்பு என்பது பொதுவான உலகக் கல்விச் செல்நெறியாக இருந்தபோதிலும், இலங்கையில் இது கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் பல்வேறு அரசியல் இனப்பாகுபாட்டுக் கொள்கைகளின் பின்னணித் தாக்கங்கள், போரின் விளைவுகள், சரியான வளப்பங்கீடு ஒதுக்கப்படாமை, தமிழ் மொழி மூலக் கல்வி நூல் வெளியீடுகள், ஆசிரிய கைந்நூல்கள் மற்றும் வள நூல்களின் குறைபாடுகள், பொறுப்பு வாய்ந்த தமிழ் கல்வி அதிகாரிகள் இல்லாமை, இருப்பவர்களும் முன்னின்று செயற்பட முடியாத சூழ்நிலைகளால் இலங்கையில் சிங்கள மொழி மூலக் கல்வியுடன் ஒப்பிடும் பொழுது தமிழ் மொழி மூலக் கல்வியில் பெரும் சமவீனங்கள் காணப்படுகின்றன.

இதில் கிளிநொச்சி மாவட்டம் மிகப் பின்னடைவாகக் காணப்படுகின்றது. கல்வியில் அர்த்தமற்ற அரசியல் தலையீடுகளும் இதற்குக் காரணமாகின்றன.

அட்டவணை 2

**க.பொ.த (சா/த) பரீட்சை 2015-2016 முதலாவது தடவை பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளது பெறுபேறுகள் (மாவட்ட ரீதியில் இறங்குமுக அடிப்படையில் சித்தி விகிதாசாரப்படி)**

| மாகாணங்கள் | | 2015 | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 5க்கும் 5க்கு மேற்பட்ட பாடங்களுக்கும் தோற்றியோர் | க.பொ.த(உ/த) கற்கத் தகுதி பெற்றோர் | | சகல பாடங்களிலும் சித்தி பெறத் தவறியோர் (6 அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்களில்) | |
| | | | தொகை | வீதம் | தொகை | வீதம் |
| 01 | மேல் | 34,801 | 26,173 | 75.21 | 722 | 2.07 |
| 02 | மத்திய | 73,071 | 53,062 | 72.67 | 2,232 | 3.06 |
| 03 | தென் | 24,785 | 17,342 | 69.97 | 869 | 3.51 |
| 04 | வட | 31,652 | 22,104 | 69.66 | 849 | 2.68 |
| 05 | கிழக்கு | 34,652 | 23,209 | 66.98 | 1,133 | 3.27 |
| 06 | வடமேல் | 16,560 | 11,030 | 66.61 | 709 | 4.226 |
| 07 | வட மத்திய | 18,231 | 12,005 | 65.85 | 741 | 4.06 |
| 08 | ஊவா | 21,693 | 13,784 | 63.54 | 641 | 2.95 |
| 09 | சப்ரகமுவ | 17,752 | 10,719 | 60.38 | 805 | 4.53 |
| தீவு முழுவதும் | | 273,224 | 189,428 | 69.33 | 8,698 | 3.18 |

| மாகாணங்கள் | | 2015 | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 5க்கும் 5க்கு மேற்பட்ட பாடங்களுக்கும் தோற்றியோர் | க.பொ.த(உ/த) கற்கத் தகுதி பெற்றோர் | | சகல பாடங்களிலும் சித்தி பெறத் தவறியோர் (6 அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்களில்) | |
| | | | தொகை | வீதம் | தொகை | வீதம் |
| 01 | மேல் | 34,994 | 26,828 | 76.66 | 650 | 1.86 |
| 02 | மத்திய | 75,414 | 54,994 | 72.92 | 2,263 | 3.00 |
| 03 | தென் | 25,589 | 18,177 | 70.80 | 876 | 3.42 |
| 04 | வட | 33,833 | 23,896 | 70.63 | 784 | 2.32 |
| 05 | கிழக்கு | 37,665 | 25,932 | 68.85 | 1,225 | 3.25 |
| 06 | வடமேல் | 18,558 | 12,630 | 68.06 | 682 | 3.67 |
| 07 | வட மத்திய | 19,041 | 12,632 | 66.34 | 764 | 4.01 |
| 08 | ஊவா | 23,744 | 14,617 | 61.56 | 877 | 3,69 |
| 09 | சப்ரகமுவ | 17,413 | 10,562 | 60.66 | 779 | 4.47 |
| தீவு முழுவதும் | | 286,251 | 200,208 | 69.94 | 8,900 | 3.11 |

**மாகாண மட்டத்தில் ஜி.சி.ஈ. (சாதாரண தர) பெறுபேறுகள்**
**2015-2016 ஒப்பீடு**

**அட்டவணை 2**

மேற்படி இலங்கையில் மாகாண ரீதியாக 2016ஆம் ஆண்டு ஜி.சி.ஈ. சாதாரணப் பெறுபேறுகளில் தேசிய ரீதியாக ஜி.சி.ஈ. உயர்தரத்துக்குத் தகுதியான சித்தி வீதம் 69.94. இதனை விடக் குறைவாகவே தமிழர்கள் செறிவாக வாழும் வடக்கு மாகாணம் (60.66), கிழக்கு மாகாணம் (61.56), மத்திய மாகாணம் (68.85) காணப்படுகின்றன. தேசிய ரீதியான கலைத்திட்டம், மத்திய கல்வியமைச்சின் மூலமான நிர்வாகம், தேசியக் கல்வி நிறுவகம் மூலமான கலைத்திட்டப் பிரயோகம் என்பவை காணப்படும் நிலையில் இலங்கையில் தமிழர்கள் வாழும் பிரதேசப் பாடசாலைகளின் பெறுபேறுகள் பெருமளவிலான வீழ்ச்சி தொடர்ச்சியாகக் காணப்படுகின்றது. இதற்கு மாகாணக் கல்வியமைச்சுக்களின் செயன்முறைகளையும் நோக்குதல் வேண்டும்.

ஆரம்பக் கல்வியிலும், இடைநிலைக் கல்வியிலும் கலைத்திட்டத்தை முறையாகப் பிரயோகிக்கின்ற திட்டமிடல், நடைமுறைப்படுத்தல், முகாமைத்துவம், பாடசாலை மட்டத்தில் நலிவாகவுள்ளமையும் மேற்குறிப்பிட்ட வீழ்ச்சிகளுக்கு முக்கிய காரணங்களாகவுள்ளன.

பாடசாலை அதிபர்கள் முழுமையான கலைத்திட்ட மேற்பார்வைத் தேர்ச்சியுடையவர்களாக இருக்க வேண்டும்.

அடுத்த வருடம் பரீட்சை எடுப்போரைக் கணிப்பிட்டு பின்னடைவானவர்களுக்கு விரைவாக உரிய அடிப்படைத் தேர்ச்சிகளை குறுகிய காலத்தில் வழங்கி ஒரு வகையில் பெறுபேறுகளை உயர்த்தலாம்.

நீண்ட கால நோக்கில் பாடசாலை மட்டத்தில் தரம் 6இல் இருந்து உரிய கணிப்பீடுகள் மூலம் பின்னடைவான மாணவர்களை இனங்கண்டு உரிய பரிகார நடவடிக்கைகளைப் படிப்படியாக மேற்கொள்ளும்போது பெறுபேறுகளில் உயர்வைப் பெறமுடியும்.

இதற்கான வேலைத் திட்டங்களைப் பாடசாலைகளை மையமாக வைத்து அதிபர், ஆசிரியர், மாணவர், பெற்றோர்களுக்கு வலுவூட்டி பாடசாலை மட்டத்திலேயே செயல்நிலை ஆய்வுகளை மேற்கொண்டு தீர்வுகளைக் காணலாம். மாற்று ஏற்பாடுகளைச் செய்யலாம். தந்திரோபாய முகாமைத்துவ உத்திகளைப் பிரயோகிக்கலாம்.

**அட்டவணை 3**

ஒப்பீட்டுக் கல்வி ஆய்வுகளின் கோட்பாடுகளைப் பிரயோகித்து மேற்கொள்ளும் பகுப்பாய்வில் தேசிய மட்டத்தில் பின்னடைவான பெறுபேறுகளை கிழக்கு, வடக்கு மாகாண வலயங்கள் பெற்றுள்ளன.

அட்டவணை 3

**ஜி.சி.ஈ. (சாதாரண தர) பரீட்சை - 2016**
**முதலாவது தடவை பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளது பெறுபேறுகள் (கல்வி வயல ரீதியான இறங்குமுக அடிப்படையில் சித்தி விகிதாசாரப்படி)**

| கல்வி வலயம் | | | 2015 | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 5க்கும் 5க்கு மேற்பட்ட பாடங்களுக்கும் தோற்றியோர் | க.பொ.த(உ/த) கற்கத் தகுதி பெற்றோர் | | 9ஏ சித்திகள் பெற்றோர் | | சகல பாடங்களிலும் சித்தி பெறத் தவறியோர் (6 அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்களில்) | |
| | | | | தொகை | வீதம் | தொகை | வீதம் | தொகை | வீதம் |
| கிழக்கு | 01 | மட்டக்களப்பு | 2,365 | 1,408 | 59.53 | 60 | 2.53 | 112 | 4.74 |
| | 02 | கல்குடா | 1,456 | 725 | 49.79 | 9 | 0.62 | 94 | 6.46 |
| | 03 | பட்டிருப்பு | 1,442 | 880 | 61.03 | 14 | 0.97 | 32 | 2.22 |
| | 04 | மட்டக்களப்பு மத்தி | 1,862 | 1,315 | 70.62 | 45 | 2.42 | 19 | 1.02 |
| | 05 | மட்டக்களப்பு மேற்கு | 973 | 380 | 39.05 | 0 | 0.00 | 88 | 9.04 |
| | 06 | அம்பாறை | 2,431 | 1,699 | 69.89 | 31 | 1.28 | 72 | 2.96 |
| | 07 | கல்முனை | 2,459 | 1,767 | 71.86 | 58 | 2.36 | 30 | 1.22 |
| | 08 | சம்மாந்துறை | 1,351 | 789 | 58.40 | 19 | 1.41 | 53 | 3.92 |
| | 09 | மகா ஓயா | 584 | 349 | 59.76 | 2 | 0.34 | 26 | 4.45 |
| | 10 | தெஹியத்த கண்டி | 903 | 574 | 63.57 | 2 | 0.22 | 39 | 4.32 |
| | 11 | அக்கரைப்பற்று | 1,224 | 880 | 71.90 | 16 | 1.31 | 8 | 0.65 |
| | 12 | திருக்கோவில் | 862 | 542 | 62.88 | 7 | 0.81 | 13 | 1.51 |
| | 13 | திருகோணமலை | 1,775 | 1,190 | 67.04 | 56 | 3.15 | 53 | 2.99 |
| | 14 | மூதூர் | 1,235 | 660 | 53.44 | 4 | 0.32 | 48 | 3.89 |
| | 15 | கந்தளாய் | 874 | 570 | 65.22 | 7 | 0.80 | 34 | 3.89 |
| | 16 | கிண்ணியா | 1,349 | 589 | 43.66 | 7 | 0.52 | 92 | 6.82 |
| | 17 | திருகோ.வடக்கு | 599 | 300 | 50.08 | 21 | 0.33 | 64 | 10.68 |
| வடக்கு | 01 | யாழ்ப்பாணம் | 3,345 | 2,288 | 68.40 | 119 | 3.56 | 113 | 3.38 |
| | 02 | தீவகம் | 619 | 321 | 51.86 | 0 | 0.00 | 38 | 6.14 |
| | 03 | தென்மராட்சி | 1,004 | 588 | 58.57 | 12 | 1.20 | 72 | 7.17 |
| | 04 | வலிகாமம் | 2,853 | 1,570 | 55.03 | 18 | 0.63 | 165 | 5.78 |
| | 05 | வடமராட்சி | 1,612 | 1,080 | 67.00 | 49 | 3.04 | 52 | 3.23 |
| | 06 | கிளிநொச்சி | 2,105 | 1,038 | 49.31 | 7 | 0.33 | 170 | 8.08 |
| | 07 | மன்னார் | 1,348 | 902 | 66.91 | 18 | 1.34 | 15 | 1.11 |
| | 08 | மடு | 353 | 187 | 52.97 | 0 | 0.00 | 6 | 1.70 |
| | 09 | வவுனியா | 2,057 | 1,361 | 66.16 | 34 | 1.65 | 57 | 2.77 |
| | 10 | வவு.வடக்கு | 497 | 300 | 60.36 | 0 | 0.00 | 12 | 2.41 |
| | 11 | முல்லைத்தீவு | 1,158 | 688 | 59.41 | 7 | 0.60 | 53 | 4.58 |
| | 12 | துணுக்காய் | 462 | 239 | 51.73 | 0 | 0.00 | 26 | 5.63 |

(தொடரும்)

# நீங்கள் அத்தனை பேரும் உத்தமர்கள் தானா?

2010 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெறுவதற்குச் சில மாதங்களுக்கு முன்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வெளியேறியிருந்தார். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்ற பெயரில் அவர் புதிய கட்சியைத் தொடங்கியிருந்தாலும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் என்ற பெயரில் இப்போது வரையில் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்து வருகின்றார்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தனிக் கட்சி ஆரம்பித்த நாளிலிருந்து இன்று வரையில் ஒரே அரசியலைத்தான் செய்து வருகின்றார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதைச் செய்தாலும் எதிர்ப்பதும், கூட்டமைப்பை எப்போதும் விமர்சிப்பதும் அவரது வேலையாகப் போய் விட்டது. இதை விட்டால் அவர் அரசியல் அநாதைதான். இந்த மூன்றாம் தர அரசியலுக்காக, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இடையிடையே பல கதைகள் கூறி வருகின்றார். முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினத்தன்று, அந்தப் பெரு வெளியில் நின்று கொண்டும் தனது அரசியல் வங்குரோத்துத்தனத்தை வெளிப்படுத்தியிருந்தார். வழமைபோன்று, போரின் இறுதிக் கட்டத்தில் இரா.சம்பந்தன் இந்தியாவில் இருந்த நிலையில் தனது அலைபேசியை அணைத்து வைத்திருந்தார்என்ற குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார். கஜேந்திரகுமாரின் இந்தக் கருத்துக்கு சமூகவலைத் தளங்களில் எதிர்வினையான கருத்துக்கள் பலமாக முன்வைக்கப்பட்டிருந்தன. போரின் இறுதிக் கட்டத்தில் சம்பந்தன் இந்தியாவில் நின்று கொண்டிருந்தார் என்றால், நீங்கள் முள்ளிவாய்க்காலில் படுத்துக் கிடந்தீர்களா? என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை நோக்கிப் பதில் கேள்வி எழுப்பப்பட்டிருந்தது.

2009ஆம் ஆண்டு போரின் இறுதித் தருணங்களான ஏப்ரல், மே மாதங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலேயே, கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன் போன்றவர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தார்கள். இரா.சம்பந்தன் அந்தக் காலப் பகுதிகளில், அலைபேசியை அணைத்து விட்டு இந்தியாவில் தங்கியிருந்தார் என்று இப்போது சொல்பவர்கள், அதனை அந்தச் சம்பவம் நடைபெற்ற காலத்திலேயே (2009ஆம் ஆண்டே) ஏன் வெளிப்படுத்தவில்லை? சம்பந்தரின் உண்மை முகத்தைத் தோலுரிக்க வேண்டும் என்று இவர்கள் நினைத்திருந்தால் சம்பவம் நடைபெற்ற தருணத்திலேயே மக்களுக்கு அதை அம்பலப்படுத்தியிருக்கலாமே?

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவராக இருக்கின்ற கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அடிக்கடி கூறிக் கொள்கின்ற விடயம், நாம் பதவிக்கு ஆசைப்பட்டிருந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இருந்திருப்போம். ஆனால் நாம் கொள்கை வாதிகள் என்பதாகும்.

சம்பந்தர் அலைபேசியை அணைத்துவிட்டு இந்தியாவிலிருந்ததை 2009ஆம் ஆண்டே கஜேந்திரகுமார் வெளிப்படுத்தத் தவறியதற்கு இரண்டு காரணங்கள்தான் இருக்க முடியும். ஒன்று இதனை வெளிப்படுத்தினால் கூட்டமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்டி ருக்கலாம். பதவி போய் விடும். பதவி ஆசையின் காரணமாகவே இதனை வெளிப்படுத்தாமல் விட்டிருக்கலாம். இரண்டாவது, இப்படியொரு சம்பவமே நடக்காமல், இப்போது அரசியல் வங்குரோத்துத்தனத்துக்காக சொல்லப்படுகின்ற 'புலுடாக்கதை'யாகக் கூட இது இருக்கக் கூடும். இரண்டில் ஒன்றுதான் நடந்திருக்க வேண்டும். தனது கட்சி எப்போது எந்தச் சந்தர்பத்தில் உதயமாகியது என்பதை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அடிக்கடி மறந்து போகின்றார். இதனால் 'பதவி ஆசைஅற்றவர்கள்' என்ற உத்தமர்களாகத் தங்களைக் காண்பிக்க முயல்கின்றார். 2010 ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் உரிய ஆசனப்பங்கீடு கிடைக்கவில்லை என்பதற்காகத்தான், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து 2010 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வெளியேறினீர்கள். 'ஆசனப்பங்கீடு' பதவி கிடைக்கவில்லை என்பதால் கூட்டமைப்பைச் சிதைத்த நீங்கள், பதவிஆசைஅற்றவர்கள் என்று வாய் கூசாமல் பொய் சொல்லாதீர்கள்.

பத்தி எழுத்து

# 'தாரபலன்' உங்களுக்கு எப்படி?



(நேற்று முன்தினம் வெளியான பகுதியின் தொடர்ச்சி)

நல்ல தொடக்கம், பாதி முடிந்ததுக்குச் சமம். 'நாள் உதவுவது போல் நல்லவன் கூட உதவமாட்டான்' என்பார்கள். நாம் எந்த ஒரு செயலைத் தொடங்குவதற்குமுன்னரும், அந்த நாள் எமக்கு வெற்றியைத்தரக்கூடிய நாள் தானா? என்பதைத் தெரிந்துகொண்டு தொடங்க வேண்டும்.

ஜோதிட ரீதியாக இதனை 'தாரபலன்' என்று கூறுவார்கள். அதாவது ஒரு செயலை செய்பவரின் நட்சத்திரத்துக்கும் அதைத் தொடங்குகிற நாளின் நட்சத்திரத்துக்கும் உள்ள பலனே தாரபலன் என்று சொல்வார்கள்.

இதன்படி செயற்பட்டு வாழ்வில் வெற்றி பெற, எந்தெந்த நட்சத்திரக்காரர்கள் எந்தெந்த நட்சத்திர நாளில் புதிய முயற்சிகளை புதிய யுக்திகளைக் கையாண்டால் வெற்றி வாய்ப்பு அதிகமாகும் என்பதைத் தெரிந்து கொள்வோம்.

- **விசாகம்:** பூசம், அனுஷம், உத்திரட்டாதி, அச்சுவினி, மகம், மூலம், உத்திரம், உத்திராடம், சித்திரை, அவிட்டம், சுவாதி, சதயம்.
- **அனுஷம்:** ரோகிணி, அஸ்தம், திருவோணம், சுவாதி, சதயம், விசாகம்,ரேவதி.
- **கேட்டை:** அச்சுவினி, மகம், மூலம், உத்திரம், உத்திராடம், சித்திரை, அவிட்டம், விசாகம், பூசம், அனுஷம், உத்திரட்டாதி.
- **மூலம்:** ரோகிணி, அஸ்தம், திருவோணம், சுவாதி, சதயம், அனுஷம், உத்திரட்டாதி, ரேவதி.
- **பூராடம்:** உத்திரம், உத்திராடம், மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம், விசாகம், ரேவதி, அச்சுவினி, மகம், மூலம்.
- **உத்தராடம்:** ரோகிணி, அஸ்தம், திருவோணம், சுவாதி, சதயம், அனுஷம், உத்திரட்டாதி, அச்சுவினி, மூலம்.
- **திருவோணம்:** மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம், புனர்பூசம், விசாகம், உத்திராடம், ரேவதி.
- **அவிட்டம்:** சுவாதி, சதயம், பூசம், அனுஷம், உத்திரட்டாதி, அச்சுவினி, மூலம், உத்திராடம், ரோகிணி, திருவோணம்.
- **சதயம்:** புனர்பூசம், விசாகம், ரோகிணி, திருவோணம், மிருகசீரிடம், அவிட்டம், ரேவதி.
- **பூரட்டாதி:** பூசம், அனுஷம், உத்திரம், அசுவினி, மகம், மூலம், உத்திராடம், மிரு கசீரிடம், அவிட்டம், சதயம்.
- **உத்தரட்டாதி:** ரோகிணி, அஸ்தம், திருவோணம், சதயம், புனர்பூசம், ரேவதி.

(முற்றும்)

# வரலாற்றில் இன்றைய தினம்

927 -பேரரசராக அங்கீகரிக்கப்பட்ட முதல் பல்கேரியனான முதலாம் சைமன் உயிரிழந்தார்.
1153 -ஸ்கொட்லாந்து அரசரானார் நாலாம் மல்கொம்.
1199 -இங்கிலாந்து அரசராக ஜோன் முடிசூடினார்.
1813 -கனடாவில் அமெரிக்கப் படைகளில் ஜோர்ஜ் கோட்டை கைப்பற்றப்பட்டது.
1849 -லண்டன் ஈஸ்டன் மத்திய ரயில் நிலையம் திறந்து வைக்கப்பட்டது.
1883 -ரஷ்யாவின் சார் மன்னராக மூன்றாம் அலெக்ஸாண்டர் முடிசூடினார்.
1927- போர்ட் மோட்டர் கம்பனி போர்ட் மொடல் `ரி' வாகனத் தயாரிப்பை நிறுத்தி, போர்ட் மொடல் `ஏ' வாகனங்களை உருவாக்கத் தக்கவாறு கருவிகளை மாற்றியமைக்கத் தொடங்கியது.
1933- `திறீ லிற்றில் பிக்ஸ்' கார்ட்டூன் திரைப்படம் வோல்ற் டிஸ்னி நிறுவனத்தால் வெளியிடப்பட்டது.
1933-நூற்றாண்டின் முன்னேற்றம் எனும் தொனிப்பொருளிலான உலக சந்தை சிக்காகோவில் தொடங்கப்பட்டது.
1960-துருக்கியில் இராணுவ சதிப்புரட்சியில் அரசதலைவர் செலல் பெயர் மற்றும் அவரது அரசும் அகற்றப்பட்டது.
1966-ரஷ்ய அரசதலைவர் பொறிஸ் ஜெல்ற்சின், செஸ்னிய கலகக்காரர்களை முதன் முதலாக சந்தித்து போர் நிறுத்தம் பற்றிப் பேச்சு நடத்தினார்.
2006-மத்திய யாவா யோக்யஹர்டா நில நடுக்கத்தில் 5700 பேர்வரை சாவடைய 37000 பேர்வரை காயமடைந்தனர்.
2016-ஹிரோஷிமா சமாதான நினைவுப் பூங்காவுக்குச் சென்ற முதல் அமெரிக்க அரசதலைவரானார் பராக் ஒபாமா. அணு குண்டுத் தாக்குதலில் உயிர் பிழைத்த ஹிபகுஷாவையும் சந்தித்தார்
2016-இந்தோனோஷியாவில் 6.2 ரிக்டர் அளவில் காலை 5.45 க்கு நில நடுக்கம் ஏற்பட்டது இதில் 3 ஆயிரம் பேர் சாவு.
2016-அனைத்து இன மக்களுக்கும் நாட்டில் சம உரிமை உண்டு. இதனடிப்படையிலேயே நல்லாட்சி நடப்பதாக யாழ்ப்பாணத்தில் நீதியமைச்சர் தெரிவிப்பு.
2016 -கிழக்கு மாகாண முதல்வரை விசாரணைக்கு உட்படுத்துமாறு மகிந்த ராஜபக்ச வலியுறுத்து. ,
2016-முல்லை மாவட்டத்தைத் தமிழர் கையிலிருந்து தட்டிப்பறிக்கும் போக்குக் காணப்படுவதாக உதயன் ஆசிரிய தலையங்கம் எடுத்துரைப்பு.

**நாளை**

**வைகாசி-14**
ஞாயிற்றுக்கிழமை -28.05.2017
திதி: திருதியை மு.இ. 07.02
நட்சத்திரம்: திருவாதிரை மு.இ.08.16
சுபநேரம்:08.52-10.22 வரை
ராகுகாலம்:04.22-05.52 வரை
அக்கினி நாள் முடிவு







இன்றைய காலக்கட்டத்தில் இரக்கமும், உறக்கமும் ஒன்றுதான். இரண்டையும் அளவோடுதான் பயன்படுத்த வேண்டும். அதிகம் உறங்குபவன் சோம்பேறி ஆகிறான். அதிகம் இரக்கம் காட்டுபவன் ஏமாளி ஆகிறான்...!






# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** நற்செயலில் ஈடுபட்டுப் புகழ் பெறுவீர்கள். மனம், செயலில் புத்துணர்வு மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். பூர்வீகச் சொத்து மூலம் வருமானம் கிடைக்கும்.

**இடபம்:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். நண்பரின் நற்செயலைப் பாராட்டி மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் நிலுவைப்பணி நிறைவேறும். வருமானம் படிப்படியாக உயரும்.

**மிதுனம்:** மனதில் குழப்பமான சூழ்நிலை ஏற்படலாம். பெற்றோரின் ஆலோசனை நம்பிக்கை அளிக்கும். தொழில், வியாபாரத்தில் லாபம் சீராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்.

**கடகம்:** உறவினரில் சிலர், எதிர்பார்ப்பு எண்ணத்துடன் அணுகுவர். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர்.

**சிங்கம்:** கடந்த கால உழைப்புக்கான நற்பலன் தேடி வரும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். லாபம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு விரும்பிய இடமாற்றம் கிடைக்கும்.

**கன்னி:** மற்றவரின் தேவையறிந்து உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் தாராள பணவரவு கிடைக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தினரிடம் பரிசு, பாராட்டுப் பெறுவர். ஆரோக்கியம் பலம் பெறும்.

**துலாம்:** திட்டமிட்ட பணியில் திடீர் மாற்றம் செய்ய நேரிடலாம். தொழில், வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**விருச்சிகம்:** குடும்பப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் லாபம் சீராக இருக்கும். பணியாளர்கள், சக ஊழியர்களுடன் நட்புப் பாராட்டுவர். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**தனுசு:** வாழ்வில் இனிய அனுபவம் கிடைக்கப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வியத்தகு அளவில் முன்னேற்றம் உண்டாகும். பணியாளர்கள் பரிசு, பாராட்டு பெற்று மகிழ்வர்.

**மகரம்:** பேச்சு, செயலில் நிதானத்தைக் கடைபிடிக்கவும். தொழிலில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாக நேரிடலாம். பெண்கள் குடும்ப ஒற்றுமையைப் பேணுவது நல்லது.


**கும்பம்:** பேச்சில் அன்பும், பண்பும் கலந்திருக்கும். நல்லவர்களின் அறிமுகமும், நட்பும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சியால் ஆதாயம் உயரும். பணவசதிக்கேற்ப புத்தாடை, நகை வாங்குவர்.

**மீனம்:** செயலில் தடுமாற்றம் உருவாகலாம் கவனம். தொழில், வியாபாரத்தில் மூலதனம் அதிகம் தேவைப்படும். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்தித்தாலும் வருமானம் காண்பர்.

# வெற்றியில் தவறியது கோச்சடையான்

ஒஸ்கார் விருதை வென்ற இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் பாகுபலி படம் பற்றி கருத்துத் தெரிவித்துள்ளார். “பாகுபலிக்கு முன்பே பல இயக்குனர்கள் இப்படிப் பிரமாண்டமாக முயற்சி செய்தனர். கோச்சடையான் படம் பாகுபலியாக இருந்திருக்கும், ஆனால், அனிமேஷன் சரியாக இல்லாததால் அந்தப் படம் சரியாக ஓடவில்லை. அதனால் பாகுபலி தான் பிரமாண்டமான முதல் படம் எனக் கூற முடியாது, அதற்கு முன் வந்த படங்கள் தோல்வியடைந்து விட்டன. ஆனால் பாகுபலி கொஞ்சம் லக்கி, அனைத்தும் சரியாக அமைந்ததால் பிரமாண்ட வெற்றியைச் சுவைக்க முடிந்தது” என்று ரகுமான் பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.





@manithan

கைத்தட்டுபவர் குறை சொல்லக் கற்றுக் கொள்வதும், குறை சொல்பவர் கைத்தட்டக் கற்றுக் கொள்வதும் தான் சிறந்த சமூகம் உருவாவதற்கான எளிய வழி.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | | 6 | | 8 | 2 | | |
| | | | | | 5 | | 7 | 4 |
| | | 5 | | | | | 6 | |
| | | 3 | | 4 | | | | |
| | | | | 3 | | 6 | | 1 |
| | | 2 | | | 6 | 3 | | |
| | | | 4 | | 9 | | 2 | |
| 1 | | | | | | | | 8 |
| | 9 | | | 7 | | | | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறு வனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 4 | 7 | 3 | 6 | 8 | 5 | 9 | 1 |
| 6 | 9 | 3 | 1 | 4 | 5 | 7 | 8 | 2 |
| 1 | 8 | 5 | 9 | 7 | 2 | 4 | 6 | 3 |
| 8 | 5 | 1 | 2 | 3 | 4 | 6 | 7 | 9 |
| 7 | 2 | 4 | 5 | 9 | 6 | 3 | 1 | 8 |
| 9 | 3 | 6 | 8 | 1 | 7 | 2 | 5 | 4 |
| 3 | 6 | 2 | 7 | 8 | 9 | 1 | 4 | 5 |
| 5 | 7 | 9 | 4 | 2 | 1 | 8 | 3 | 6 |
| 4 | 1 | 8 | 6 | 5 | 3 | 9 | 2 | 7 |

# கல்லிலே கலை வண்ணம்

ஒரு நாள் அற்புதமான சிற்பி ஒருவர் தெருவில் போய்க் கொண்டிருந்தார். பாதை ஓரத்தில் இருந்த கடையருகே அவர் பாறாங்கல் ஒன்றைப் பார்த்தார். ஒரு புதையலைப் பார்த்த மகிழ்ச்சியுடன் அவர் அந்தக் கடைக் காரனிடம் "ஐயா இந்தக் கல் தங்களுக்குத் தேவையா? அல்லது நான் இதை எடுத்துச் செல்லலாமா?" என்று கேட்டார். ஓ... தாராளமாக எடுத்துச் செல்லுங்கள். இது இந்த இடத்தில் பலகாலமாகப் பெரிய தடையாய்க் கிடக்கிறது. போவோர் வருவோர் எல்லாம் இதன் மேல் இடறி விழுகின்றனர்" என்றார் கடைக்காரர். அந்தக் கல்லை உருட்டிச் சென்ற சிற்பி. அதை நுட்பமாகச் செதுக்கி அற்புதமான கடவுள் சிலை ஒன்றை உருவாக்கினார்.



அந்தச் சிலை கடைத் தெருவில் விலைக்கு வந்தது. போட்டி போட்டுக் கொண்டு ஊர் மக்கள் அதனை நல்ல விலைக்குக் கேட்டனர். அப்படி கேட்டவர்களுள் கல்லைக் கொடுத்த கடைக்காரரும் ஒருவர். முடிவில் அந்தக் கடைக்காரரே அதிக விலை கொடுத்து அந்தச் சிலையை வாங்கிக் கொண்டார்.

அந்தச் சிற்பியை மறந்து விட்ட கடைக்காரர் "இந்த அற்புதமான சிலைக்குரிய கல்லை எந்த மலையில் இருந்து எடுத்து வந்தீர்கள்?... என்று சிற்பியிடம் கேட்டார். "வேறு எங்கிருந்துமில்லை. தங்கள் கடை வாசலில்தான் இதனைக் கண்டெடுத்தேன். என்னை நினைவில்லையா தங்களுக்கு? ஆறு மாதங்களுக்கு முன்பு வருவோர் போவோருக்கு இடையூறாய்க் கிடக்கிறது என்று சொல்லி என்னிடம் நீங்கள் கொடுத்த கல்தான் இது" என்றார். கடைக்காரர் வியந்து போனார். சிற்பியோ "ஆம், தங்கள் பார்வையில் இது தடைக் கல்லாய்த் தெரிந்தது. ஆனால் இது என் பார்வையில் கடவுளைப் பொறித்து வைத்திருக்கும் சிற்பக் கல்லாய்த் தெரிந்தது. வேண்டாத பகுதிகளையெல்லாம் செதுக்கி எடுத்தேன். உள்ளே இருந்த கடவுளின் உருவம் வெளிப்பட்டது" என்றார்.

மேலும் ஒருவனுக்கு அவன் பாதையில் தடைக் கற்களாக இருப்பவை, மற்றொருவனுக்கு மேலே ஏறுவதற்கேற்ற படிக்கற்களாக மாறி விடுகின்றன. ஒருவன் பார்வையில் வெறும் கல்லாகத் தெரிவது. மற்றெருவர் பார்வையில் கடவுளாகத் தெரிகிறது.

உலகில் எதனையும் எமக்குப் பயனற்றவை என்று தள்ளி விடலாகாது. என்றோ ஒரு நாள் அவை எமக்கு உதவும்" என்றார் சிற்பி.

**கல்லில் தேவையற்ற பகுதிகளை நீக்க அங்கே தெய்வம் வெளிப்பட்டு நின்றது போல, தேவையற்ற வார்த்தைப் பிரயோகங்களை வாழ்வில் நீக்கி நடந்தால் நாமும் விலை மதிப்பற்ற மனிதராய் வாழ்ந்து காட்டலாம்.**



# செய்திகள்.... வாசிப்பது...

**வணக்கம் நண்பர்களே!**

செய்திகள் வாசிப்பது ஊர்வசி

இன்றைய செய்திகள் புத்திசாலியான மிருகங்கள் பற்றியவை.

மனிதர்கள் தான் மிகவும் புத்திசாலித்தனமானவர்கள் என்று நாம் நினைக்கிறோம். ஆனால் உண்மையில் மனிதர்களை விடவும் புத்திசாலிகளான மிருகங்கள் பல உள்ளன.

நாம் வீடுகளில் செல்லமாக பிராணிகளை வளர்க்கிறோம். நாம் அவற்றை அழைத்தால் உடனே அவை எம்மிடம் வருகின்றன. இந்தப் புத்திசாலித்தனம் ஒவ்வொரு மிருகத்துக்கும் ஏற்றவாறு மாறுபடும்.

**மனிதக் குரங்கு** :– இது நாம் என்ன சொன்னாலும் அதனை விரைவில் புரிந்து கொண்டு சரியாகச் செய்யும் திறன் படைத்தது. சில சமயங்களில் இந்த மனிதக் குரங்குகளுடன் மனிதர்கள் போட்டி போட்டால் இவை மனிதர்களையே தோற்கடித்து விடும். அந்த அளவுக்கு இவை புத்தி கூர்மையுடன் உள்ளது.

**டொல்பின்** :– இந்த மீன் தனக்கு ஏற்படும் பிரச்சினைகளைத் தானாகவே எளிதில் சரிசெய்து விடும் அளவுக்கு புத்திசாலித் தனமுடையது. புத்திசாலியான விலங்குகளில் நாம் பேசுவதை எளிதில் புரிந்து கொண்டு செயற்படுவதில் டொல்பின் மிகவும் சிறந்தது என்று ஆய்வுகள் கூறுகின்றன.

**பென்குயின்** :– பென் குயினிடம் எதைச் சொன்னாலும் அதை அப்படியே திருப்பிச் சொல்லும் திறன் உள்ளது. இதற்கு ஏதாவது செயற்பாடுகளைச் சொல்லிக் கொடுத்தால் விரைவில் அவற்றைப் பழகிக் கொள்ளும் திறனுடையது.

செய்திகள் தொடர்கின்றன....

வாசிப்பவர் :- அமிழ்தன்

**எறும்பு** :– எறும்பு எந்த ஒரு பிரச்சினை வந்தாலும் அதிலிருந்து எளிதில் தப்பித்துக் கொள்ளும் புத்திசாலித்தனமான திறனைக் கொண்டது.

**கிளி** :– கிளிக்கு மனிதர்கள் போலவே குரல் உண்டு. அது நாம் பேசுவதைக் கூர்மையாகக் கவனித்து பேசும் தன்மையும் கொண்டது. எதைச் சொல்லிக் கொடுத்தாலும் அதை நன்கு ஞாபகம் வைத்திருக்கும்.

**யானை** :- யானை ஒரு வகையில் மனிதர்களைப் போலத்தான். இது விலங்குகளில் மிகவும் சிறந்தது எனக் கூறலாம். இதற்கு மனிதர்களைப் போல எல்லா உணர்ச்சிகளும் உள்ளன. ஞாபக சக்தி கூடிய விலங்கு.

**நாய்** :– இது மனிதர்களின் உணர்ச்சிகளைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப நடக்கத் தெரிந்த சிறந்த புத்திசாலியான விலங்கு.

இத்துடன் இன்றைய செய்திகள் முடிவடைந்தன.

**வணக்கம்**

# வினைச் சொல்

ஒரு செயலை அல்லது தொழிலைக் குறிக்கும் சொற்கள் வினைச் சொற்களாகும். இவை இரண்டு வகை

1. முற்று வினை 2. எச்ச வினை

**முற்று வினை** :- ஒரு செயல் நடந்து முடிந்ததைக் குறிப்பது. இது காலத்தைக் காட்டி நிற்கும்.

உ+ம் :- படித்தான் (இறந்த காலம்)
படிக்கிறான் (நிகழ்காலம்)
படிப்பான் (எதிர்காலம்)

**எச்ச வினை** :- ஒரு செயல் முடிவு பெறாது குறையாக எஞ்சி நிற்பது.

உ+ம் :- ஆடிய, ஓடிய, விழுந்து, துள்ளிப் பாய்ந்து.

# எச்ச வினைகள்

எச்ச வினைகள் இரண்டு வகைப்படும்.

1. பெயரெச்சம் 2. வினை எச்சம்.

**பெயரெச்சம்** :- வினைச்சொல் ஒன்று பெயரைக் கொண்டு முடிவதற்காய் எஞ்சி (குறையாக) நிற்கும்.

உ+ம் :- ஓடிய (சிறுமி) பேசிய (மனிதன்)
சரிந்த (மரம்) பாடுகின்ற (பறவை)
துள்ளிய (மாடு) சிரிக்கின்ற (பிள்ளை)

**வினைஎச்சம்** :- வினைச் சொல் ஒன்று வினையைக் கொண்டு முடிவதற்காய் எஞ்சி (குறையாக) நிற்கும்

உ+ம் குளித்து (முடித்தேன்)
துள்ளி (ஓடியது)
பாய்ந்து (வந்தான்)
விழுந்து (எழுந்தான்)
நடந்து (சென்றான்)

## கீழ்வரும் சொற்களைப் பெயர்ச் சொல், வினைச் சொல், பெயரெச்சம், வினையெச்சம் என வகைப்படுத்துவோம்

ஓடி, போனான், மாணவன், விழுந்து, அழுத, காடு, பேசிய, நடந்தான், ஓடியது, வளர்ந்த, உருண்டு, பங்குனி,

| பெயர்ச்சொல் | வினைச்சொல் | பெயரெச்சம் | வினையெச்சம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |



# எது வெற்றி?

- 4 வயதில் தனியாக நடக்க முடிந்தால் அதுவெற்றி.
- 8 வயதில் தனியாக வெளியே சென்று வழிதவறாமல் வீடு திரும்பினால் அது வெற்றி.
- 12 வயதில் நல்ல நண்பர்கள் கிடைத்தால் அது வெற்றி.
- 18 வயதில் வாகன ஓட்டுநர் உரிமம் பெற்றால் அது வெற்றி.
- 22 வயதில் பட்டதாரியானால் அது வெற்றி.
- 25 வயதில் நல்ல வேலை கிடைத்தால் அது வெற்றி.
- 30 வயதில் தனக்கென குடும்பத்தை அமைத்துக் கொள்ள முடியுமானால் அது வெற்றி.
- 35 வயதில் போதுமான அளவு உழைக்க முடியுமானால் அது வெற்றி.
- 45 வயதில் இளைஞரைப் போன்ற உருவத்தைத் தக்க வைக்க முடியுமானால் அது வெற்றி.
- 50 வயதில் தன் பிள்ளைகளுக்கான நல்ல கல்வியை அளிக்க முடியுமானால் அது வெற்றி.
- 55 வயதில் தனது கடமைகளைத் தொடர்ந்து சரியாகச் செய்ய முடியுமானால் அது வெற்றி.
- 60 வயதில் ஓய்வுபெற வேண்டியவர் என நிராகரிக்கப்படாமல் செயலாற்ற முடியுமானால் அது வெற்றி.
- 65 வயதிலும் நோயில்லாமல் வாழ முடியுமானால் அது வெற்றி.
- 70 வயதில் பழைய நண்பர்களுடன் உறவாடி மகிழ முடியுமானால் அது வெற்றி.
- 80 வயதுக்கு மேல் மற்றவர் துணையின்றி வெளியே சென்று வழி தவறாமல் வீடு திரும்ப முடியுமானால் அது வெற்றி.

# பனிக் கட்டி மழை எவ்வாறு பொழிகிறது?



பூமிப் பரப்பிலிருந்து மேலே உயர்ந்து செல்லும் வெப்ப நீராவி, மிக விரைவில் குளிர்வடையும் போதுதான் பனிக் கட்டி மழை உண்டாகிறது என்று பெரும்பாலான விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். சூடான நீராவி பூமியிலிருந்து ஏறத்தாழ 1000 - 2000 மீற்றர் உயரத்தை அடையும் போது அது மேலிருந்து கீழே வந்து கொண்டிருக்கும் குளிர்ந்த காற்றுடன் கலக்கிறது. இந்தச் சூழ்நிலையில் நீராவி திடீரென்று மிகச் சிறிய பனிக் கட்டித் துண்டுகளாக மாற்றமடைகிறது. இந்தச் செயற்பாடு திரும்பத் திரும்ப நிகழும்போது பனிக் கட்டித் துண்டுகளின் பருமனும் எடையும் அதிகரிக்க கீழ் நோக்கிப் பொழிகிறது. எமது நாட்டில் எப்போதாவது அரிதாகத்தான் பனிக் கட்டி மழை பொழிகிறது. ஆனால் குளிர் நாடுகளில் பனிக்கட்டி மழை என்பது சாதாரணம். பனிக்கட்டி மழையின் காரணமாக சில ஐரோப்பிய நாடுகளில் விளை பயிர்கள் பெருமளவில் நாசமடைவதுண்டு. திராட்சைத் தோட்டங்களே அதிக அளவில் அழியும். பொதுவாக அதிக பருமன் இல்லாத பனிக்கட்டிகள் தான் மழையாகப் பொழியும். சில சந்தர்ப்பங்களில் அதிக பருமனுடைய பனிக் கட்டிகளும் பொழியும்.1889 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நீயூசவுத்வேல்ஸ் என்னும் இடத்தில் பொழிந்த பனிக்கட்டி மழையின் ஒவ்வொரு கட்டியும் ஒரு கிரிக்கெட் பந்தளவு பெரிதாக இருந்தது. இந்தப் பனிக்கட்டிகள் அதிக உயரத்தில் இருந்து வந்து விழுவதால் மனிதர்களுக்கும், கட்டடங்களுக்கும் அபாயம் ஏற்படும். பனிக் கட்டி மழை பெரிய பரப்பளவுள்ள இடத்தில் பொழியாது. சிறிய இடத்தை மையமாகக் கொண்டே பொழியும். தமிழில் இது ஆலம்கட்டி மழை எனக் கூறப்படும்.

## இனவாத...

விதைக் கப்பட்ட ஒரு நச்சு விதையே. அதனை ஒழிக்க இந்தக் கூட்டு அரசினால்தான் முடியும்.

இவ்வாறு வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

ஆழிக்குமரன் ஆனந்தனின் நினைவாக நீச்சல் தடாக நிர்மாணிப்புக்கான அடிக்கல் நாட்டு விழா வல்வெட்டித்துறை ரேவடி கடற்கரையில் நேற்றுமுற் பகல் இடம்பெற்றது.

அதில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டிலுள்ள இனவாதம் அரசியல்வாதிகளாலும் பிற்போக்குவாதிகளாலும் விதைக்கப்பட்ட நச்சுவிதையே. இதனை இல்லாதொழிப்பதற்கு அரசு முன்வர வேண்டும். இந்தக் கூட்டு கட்சி அரசினால்தான் அது முடியும். இதற்காக நாம் அனைவரும் இன, மத, மொழி பேதமின்றி ஒன்றாக அரசுக்கு அழுத்தம் கொடுத்து முன்னெடுக்க வேண்டும். தவறான சிந்தனைகள் மாறினால்நாட்டின் அரசியல்பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்று நான் நம்புகின்றேன்.

ஆழிக்குமரன் ஆனந்தன் நினைவாக இந்த நீச்சல் தடாகத்தை அமைப்பதற்காக முன்னாள் அயலுறவுத்துறை அமைச்சரும் தற்போதைய நிதி அமைச்சருமாகிய மங்கள சமரவீர கொழும்பில் இருந்து இங்கே வந்திருக்கிறார்.

ஆழிக்குமரன் ஆனந்தனின் மனைவி திருமதி மானெல் ஆனந்தன், மங்கள சமரவீரவின் கிட்டிய உறவினர்.

ஆழிக்குமரனின் இரண்டு புத்திரர்களுள் முதலாவது மகன் இராஜன் ஜே.ஆனந்தன் இந்திய கூகுள் நிறுவனத்தின் அதியுயர் வரிசையில் கடமையாற்றுகின்றார். இரண்டாவது மகன் இராஜேஸ் அபிமன்யு மின்னியல் இலத்திரனியல் துறையில் பொறியியல் பட்டம் பெற்று தகவல் தொழில்நுட்பத்தில் முதுமாணிப் பட்டத்தையும் பெற்று யுனிசெப் நிறுவனத்தில் மூத்த உதவித் தலைவராக பணியாற்றுகின்றார் என அறிகின்றேன்.

ஆனந்தனின் நினைவாகச் சுமார் 8 கோடி ரூபா செலவில் அமைக்கும் இந்த நீச்சல் தடாகம் சிறப்புற அமையவேண்டும்.

ஆனந்தன் 1971 இல் வல்வெட்டித்துறையில் இருந்து பாக்குநீரிணை வழியாக இந்தியாவில் இருக்கும் கோடிக்கரை எனும் ஊருக்கு நீந்திக் கரை சேர்ந்தார். இவருக்கு முன் இதே ரேவடி கடற்கரையில் இருந்து 1954ஆம் ஆண்டில் அமரர் நவரத்தினசுவாமி பாக்குநீரிணையை முதன் முதலாக நீந்திக் கடந்து சாதனை படைத்திருந்தார்.

20 இற்கும் மேற்பட்ட சாதனைகளைப் புரிந்த போதும் அவற்றில் 7 சாதனைகள் மட்டுமே கின்னஸ் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டன. முதலாவது சாதனையாக 1963 இல் வல்வெட்டித்துறையில் இருந்து கோடிக்கரை வரை நீந்திக் கடந்த சாதனை கின்னஸ் புத்தகத்தில் இடம்பெறவில்லை.

1971 ஆம் ஆண்டு முதன்முதலாக தலைமன்னாரில் இருந்து இந்தியாவில் உள்ள தனுஷ் கோடிக்கு நீந்திச் சென்று அங்கு பத்தே நிமிடங்கள் ஓய்வு எடுத்த பின் (பன்னாட்டு நியமங்களுக்கு ஏற்ப) மீண்டும் அங்கிருந்து தலைமன்னாருக்கு மொத்தம் 51 மணித்தியாலங்கள் 35 நிமிடங்களில் அவர் நீந்திக் கடந்தார் என்றார். (த-4)

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 26.05.2017 | வெற்றிவாரம் 2137 | வர்ணம் சிவப்பு
மேடம்
25 39 43 57
ஞாயிற்றுக்கிழமை வெற்றிப்பொதி
ரூ 2, 266, 188/=
2017.05.28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

சீட்டிழுப்பு வாரம்: 568 வர்ணம்: நீலம்
சீட்டிழுப்பு திகதி: 26.05.2017
வெற்றி இலக்கங்கள்
32 35 38 46 T
ரூ. 27,925,851/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு 1919

சீட்டிழுப்பு வாரம்: 141
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 26.05.2017
ரூ. 87,918,244/-
L 50 51 63 65
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு 1919

**தொடர்பு கொள்க**

யாழ்ப்பாணத்தில் உள்ள உங்கள் வீடுகளை புனரமைத்துக் கொள்ளவும் புதிய வீடுகளை கட்டிக்கொள்ளவும் தொடர்பு கொள்க. உத்தரவாதத்துடன் வேலைகள் செய்து கொடுக்கப்படும்.

T. P : 077 045 4140

**Annex வாடகைக்கு**

இரண்டு பெண்களுக்கு அரியாலையில் தங்குமிட வசதி உண்டு.

தொடர்பு - 077 994 8413

**வேலையாள்கள் தேவை**

கட்டட நிர்மாணப் பணிகளை மேற்கொண்டுவரும் எமது நிறுவனத்திற்கு களஞ்சிய கட்டட வேலைக்கான Labours தேவை.

T.P: 076 316 5730, 076 316 5731

**களஞ்சியக்காப்பாளர் தேவை**

கட்டட நிர்மாணப் பணிகளை மேற்கொண்டுவரும் எமது நிறுவனத்திற்கு கட்டடத்துறையில் முன் அனுபவம் வாய்ந்த கணினி அறிவுடைய களஞ்சியக் காப்பாளர் தேவை.

T.P: 076 316 5730, 076 316 5731

**வேலைவாய்ப்பு**

பரீட்சை வினாத்தாள்களை வீட்டில் வைத்து அல்லது பணிஇடம் வந்து Pagemaker இல் ரைப் செற்றிங் செய்து தரக்கூடியவர்கள் தேவை. தயவுசெய்து சிறந்த முன்னனுபவம் உள்ளவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும்.

இடம் - யாழ். - அத்தியடி

076 567 0241

**காணி, வீடு விற்பனைக்கு**

பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணத்தில் 6 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. நீளம் 120 அடி, அகலம் 120 அடிகளைக் கொண்டது. ஒன்பது அறைகளையும், நான்கு குளியல் அறைகளையும் கொண்ட பெரிய நாற்சதுர வீடு இக்காணிக்குள் உண்டு. இக்காணியின் முன் பக்கமாக கிழக்கு முகம் பார்க்கக்கூடிய திருமண மண்டபம், Shoping Complex, 10 கடைகள் கட்டக்கூடிய இட வசதியும் உண்டு. அரைவாசியாக பிரித்தும் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு - 077 3611 282

### மரண அறிவித்தல்

## நடராசா பரமேஸ்வரன் (பாப்பா)



பழைய பொலிஸ் நிலைய வீதி .சுன்னாகம் தெற்கை பிறப்பிட மாகவும் கூவில் வீதி, கருகம்பனையை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா பரமேஸ்வரன் (பாப்பா) அவர்கள் நேற்று (26.05.2017) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா இராசம்மா தம்பதியினரின் அன்பு புதல்வனும் காலஞ்சென்ற தம்பையா தங்கமுத்து தம்பதியரின் பாசமிகு மருமகனும் சற்குணவதியின் அன்புக் கணவரும் அமரர் யோகேஸ்வரன், சகுந்தலாதேவி மற்றும் செல்வரத்தினம், சிவஞானம், இராசமலர், விக்னேஸ்வரன்ஆகியோரின் அன்புச் சகோதரனும் அமரர் சந்திரலிங்கம் மற்றும் புஸ்பராணி, சூரசங்காரம், சிவநேசன், விஷ்ணுகாந்தன் (பிரான்ஸ்),லோககாந்திமதி ஆகியோரின் அன்பு மச்சானும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.05.2017) சனிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கிரிமலை செம்மண் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கூவில் வீதி, கருகம்பனை, கீரிமலை.**

**தகவல்: மனைவி**

### மரண அறிவித்தல்

## திருமதி சுகிர்தம் மகேசன்

*(ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/திருக்குடும்ப கன்னியர் மடம்)*



நாயன்மார்கட்டு, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுகிர்தம் மகேசன் நேற்று (26.05.2017) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் அன்னம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் மகேசன் (ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் - பண்டத்தரிப்புகோட்டம்) இன் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஜெபக்கொழுந்து, இராசமணி, தவம், பவளம், ஜோய்ஸ் தையல்முத்து ஆகியோரின் அன்புச் சகோதரியும் Dr. திருமகள் (பல் வைத்தியர், யாழ். போதனா வைத்தியசாலை), Dr.நாமகள் (சித்த மருத்துவம், நீர்வேலி உப அலுவலகம்), அருட்செல்வன் (பரிசாதகர், முல்லைத்தீவு ஆயுள்வேத வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் Dr.இராஜசேகரன் (கோப்பாய் அரசினர் வைத்தியசாலை), காண்டீபன் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் கோரளைப்பற்று), இன்பரோஜா (செல்வி) ஆகியோரின் பாசமிகு மாமியும் தாக்சாயினி (வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), பிரகலாதன் (யாழ்.இந்துக் கல்லூரி), கேதாரணி (வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), விதுசனன் (யாழ். இந்துக் கல்லூரி), கேசவி (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), காருணிகா, கேசாயினி ஆகியோரின் அன்புமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.05.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்தஅறிவித்தலைஉற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல. 6, இராணி வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**0718474756**

### மரண அறிவித்தல்

## திருமதி அன்னலட்சுமி ஐயாத்துரை



உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கனடா ரொரன்ரோவை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதிஅன்னலட்சுமிஐயாத்துரை கடந்த 25.05.2017 வியாழக் கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா ஐயாத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், தனபாலசுந்தரம்மற்றும்சிவபாலசுந்தரம், அருள்ஞானசுந்தரம், செல்வமனோகரி, இரதிமனோகரி, வரதராசசுந்தரம், குணமனோகரி ஆகியோரின் அன்புத் தாயாரும் பாக்கியலீலா, காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, தர்மகுணபவானி, ரஞ்சிதபவானி மற்றும் புஸ்பநாதன், ஜயராஜன், வாசுகி, யோகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற மலர்விழி மற்றும் எழிலன், தமிழழகன், தமிழமுதன், தமிழினி, ஆரணி, ரமணன், சிறீதர்சினி, திவாகரன், தினேஸ், விசாலினி, ஜெயவேணி, வித்தியா, அஜந்தி, அகிலன், அருணன், சஜீவன், அனுசியா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் பாவரசி, நிகரன், அபித்தா, சுதந்திரா, சம்யுக்தா, ஆத்மிகா, கபிஷன், சுவேதா ஆகியோரின் அன்புப் பூட்டியும் காலஞ்சென்றவர்களான ஞானேஸ்வரி, தங்கலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.05.2017) ஞாயிற்றுக் கிழமைரொரன்ரோ, கனடாவில்நடைபெறும். இந்தஅறிவித்தலைஉற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**உரும்பிராய் கிழக்கு.**
**உரும்பிராய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

### மரண அறிவித்தல்

மலர்வு
11
01
1937



உதிர்வு
25
05
2017

## திருமதி. கமலேஸ்வரி திருச்செல்வம்

(சின்னப்பொன்னார்)

கொக்குவில் கிழக்கு பொற்பதி வீதியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு தெகிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலேஸ்வரி திருச்செல்வம் (சின்னப்பொன்னார்) 25.05.2017 வியாழக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை திருச்செல்வத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி சின்னத்துரை மனோன்மணி தம்பதியினரின் அன்பு மகளும், திருகரன் (கொழும்பு) திருச்செல்வி (கனடா), கலைச்செல்வி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயக்குமார் (அபுதாபி), ஸ்ரீபவன் ( லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், றுமேஸ், கபிசா (தெகிவளை) அபிலாசா (கனடா), அக்சனா (கனடா) அஞ்சுலா (லண்டன்), ஆதிஷ் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கதிரியைகள் 28.05.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் பொரளை ஜெயரத்ன மலர்ச்சாலையில் நடைபெற்று தகனக்கிரியைகள் கனத்தை இந்து மயானத்தில் நடைபெறும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்
குடும்பத்தினர்.

07, சாள்ஸ் பிளேஸ்
தெகிவளை

## பெயர் மாற்றம்

நட்டாங்கண்டல் மாங்குளத்தை முகவரியாக கொண்ட **ஞானசேகரம் யோகராசா** ஆகிய நான் இன்றிலிருந்து **(27.05.2017)** எனது பெயரை **ஞானசேகரம் குணசிங்கம்** என மாற்றிக்கொள்கின்றேன். இனிவரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் அவ்வாறே பயன்படுத்துவேன் என்பதையும் அறியத்தருகின்றேன் .

**ஞானசேகரம் குணசிங்கம்**

---

ஓம் விராட் விஸ்வபிரம்மனே நமஹ

## நினைவஞ்சலி

**19 ஆம் ஆண்டு** | **21 ஆம் ஆண்டு**



உதயம் 23.10.1930
அஸ்தமனம் 12.06.1998



உதயம் 05.05.1940
அஸ்தமனம் 09.05.1996

**அமரர் தம்பிஐயா பாலகிருஷ்ணப்பத்தர்**
திதி: துதியை

**திருமதி யோகேஸ்வரி பாலகிருஷ்ணப்பத்தர்**
திதி: சஷ்டி

ஆண்டு பல ஆனாலும் ஆறவில்லை எம் துயரம் மாறாத நினைவுகளால் மனம் வெந்து மாய்கிறோம்
அழகிய உங்கள் விரிந்த முகம் என்றும் எம் நெஞ்சங்களில் குடியிருக்கும் அன்புத் தெய்வமே
ஆண்டவன் அடியில் சாந்தி பெறுக!

57, கச்சேரி நல்லூர்,
நாயன்மார் வீதி, யாழ்ப்பாணம்.

பா.ஜெதீஸ்வரா
பாலகிருஷ்ணா ஆபரணமாளிகை
நல்லூர்.

---

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 07.05.2017 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

அமரர்
**சபாபதிப்பிள்ளை கோபாலசுவாமி**
(ஓய்வுபெற்றதலைமை புகையிரத பாதுகாவலர்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (27.05.2017) சனிக்கிழமை அதிகாலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 28.05.2017 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனநிகழ்விலும்கலந்துகொள்ளும்வண்ணம்அன்புடன்அழைக்கின்றோம். இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

**ஈஸ்வரி வாசா**
**அல்வாய் கிழக்கு, அல்வாய்.**

**குடும்பத்தினர்.**

---

## மரண அறிவித்தல்

# திருமதி நல்லம்மா அப்புத்துரை



யாழ். மட்டுவில் தெற்கு, மருதங்குளம் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லம்மா அப்புத்துரை 24.05.2017 புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான தம்பு ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற அப்புத்துரையின் அன்பு மனைவியும் காலஞ் சென்றவர்களான செல்லப்பா - கதிரி தம்பதியரின் பாசமிகு மருமகளும் மனோன்மணி, மகேஸ்வரி (டென்மார்க்), புனிதராணி, பரமேஸ்வரி (டென்மார்க்), அருட்செல்வம் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் குணரத்தினம், சின்னராசா (டென்மார்க்), சக்திவேல், பூபாலசிங் கம் (டென்மார்க்), கவிதா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற அப்பையா, செல்லமுத்து, பாக்கியம், சின்னத்தம்பி, சிவஞானம், கனகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் லிதர்சினி, கௌசலா (சுவிஸ்), லிதராஜ் (டென்மார்க்), குலதீபன் (சுவிஸ்), சிந்துஜா (டென்மார்க்), ரெனிதாஸ் (டென்மார்க்), கபிசன் (டென்மார்க்), தனுசியா, தனுவிந்தன் (சுவிஸ்), துஸ்யந்தன், தர்சிலன், திலக்ஷன், மதன் (டென்மார்க்), மனோஜா (டென்மார்க்), மாதுர்ஷன் (டென்மார்க்), அக்ஷதா (சுவிஸ்), அஸ்விதன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் தட்ஷஜன், ஷாருஜன், ஆருகன், விதுஷா, இசைவாணன், மதுஷா (சுவிஸ்), வர்ணிகா, பிரவீன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.05.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மட்டுவில் சின்னத்தூர் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மருதங்குளம் வீதி, மட்டுவில் தெற்கு,**
**சாவகச்சேரி, யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**0212057609, 0767388190**

---

## பணிப்பெண் தேவை

நல்லூர் ஆலயத்திற்குச் சமீபமாக கோயில் வீதியில் வசிக்கும் வயது முதிர்ந்த பெண் ஒருவருடன் முழு நேரம் தங்கி துணையாக இருப்பதற்கு ஐம்பது வயதிற்கு மேற்பட்ட பெண் ஒருவர் தேவை. சமையல் வேலை செய்யத் தேவையில்லை. உணவு வழங்கப்படும். விண்ணப்பிக்க விரும்புவோர் கிராம அலுவலரின் நற்சான்று கடிதத்துடன் முழு அளவிலான புகைப்படத்தினையும் இணைத்து (05.06.2017) இற்கு முன் விண்ணப்பிக்கவும். சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கலாம்.

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி**

விளம்பர இல .5536,
C/o உதயன் 361,கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.

---

## யா/மகாஜனக் கல்லூரி- தெல்லிப்பழை பழைய மாணவர் சங்கம் (தாய்ச் சங்கம்) வருடாந்தப் பொதுக் கூட்டம் - 2017

**காலம் :- 11.06.2017 (ஞாயிற்றுக்கிழமை)**
**நேரம் :- முற்பகல் 9.30**
**இடம் :- பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபம்**

மேற்படி பொதுக்கூட்டத்தின்போது புதிய நிர்வாக சபைத் தெரிவு இடம் பெறுவதோடு புதிதாக அங்கத்துவம் பெற விரும்புபவர்கள் அன்றைய தினம் இணைந்து கொள்ளலாம்.


பிரேரணைகள் இருப்பின் 04.06.2017 இற்கு முன் செயலாளரிடம் சமர்ப்பிக்கவும்.

**தொடர்புகளுக்கு :-**
**077 638 4114**

**செயலாளர்.**

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 09 . 01 . 1937
மறைவு 25 . 04 . 2017

கடந்த 25.04.2017 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

**அமரர் செல்லையா மகாதேவன்**
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

அவர்கள் சிவபதமடைந்த செய்தி கேட்டு எமது இல்லத்திற்கு வருகை தந்து ஆறுதல் கூறி சகல வழிகளிலும் உதவியவர்களுக்கும் உள்நாட்டில் இருந்தும் வெளிநாட்டில் இருந்தும் தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் அஞ்சலிப்பிரசுரங்கள், மலர்வளையங்கள் மற்றும் பதாகைகள் வெளியிட்டோருக்கும் போசனங்கள் தந்து உதவியவர்களுக்கும் மற்றும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொ ண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனை வருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொ ள்கின்றோம்.

மேலும் இன்று (27.05.2017) சனிக்கிழமை மு ப. 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதி போசன நிகழ்வில் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தர் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக் கின்றோம்.

**இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வ கை தருமாறு அன்புடன் அழைக்கின்றோ**

**கோப்பாய் வீதி,**
**முதலாம் ஒழுங்கை. உரும்பிராய் தெற்கு.**

**டும்பத்தினர்.**

---

## வடக்குப்...

பிளாஸ்ரிக் பொருள்களையும் தவிர்ப் பதற்கான உறுதியுரை நாளை மறுதினம் 29ஆம் திகதிதிங்கட்கிழமை காலப் பிரார்த்தனையில் எடுக்கப்படவுள்ளது.

இவ்வாறு வடக்கு சுற்றாடல் அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஐக்கியநாடுகள் சபையால் ஆண்டுதோறும் ஜூன் 5ஆம் திகதி உலக சுற்றுச்சூழல் தினமாகப் பன்னாட்டு அளவில் கொண்டாடப்பட்டு வருகிறது. சுற்றுச் சூழல்பற்றி உலகின் கவனத்தை ஈர்த்து, விழிப்புணர்வை ஏற்படுத்திச் சூழல் பாதுகாப்பில் அனைவரினதும் ஆக்கபூர்வமான பங்களிப்பை வேண்டுவதே இந்தத் தினத்தின் நோக்கமாகும். இதையொட்டி, அரச தலைவரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக உலகச் சுற்றுச்சூழல் தினத்துக்கு முன்னரான, நாளை மறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் ஜூன் 4 ஆம் திகதி வரையான ஒருவார காலப்பகுதி தேசிய சுற்றுச்சூழல் வாரமாகக் கடைப்பிடிக்கப்படவுள்ளது.

தேசிய சுற்றுச்சூழல் வாரத்தின் தொடக்க நாளான நாளை மறுதினம் திங்கள்கிழமை காலை ஒன்றுகூடலின் போது சகல பாடசாலைகளிலும் எல்லா வகையான பிளாஸ்ரிக் பைகள் மற்றும் ஒருநாள் பாவித்துவிட்டு வீசும் பிளாஸ்ரிக் பொருள்களைப் பயன்பாட்டில் இருந்து விலக்குவது தொடர்பாக அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் சத்தியப்பிரமாணம் மேற்கொள்ள வடக்குச் சுற்றாடல் அமைச்சு கல்வி அமைச்சுடன் இணைந்து ஏற்பாடுகள் செய்துள்ளது.

"பிளாஸ்ரிக் கழிவுகளினால் இயற்கைச் சூழலுக்கும் மனித உடல் நலத்துக்கும் ஏற்பட்டுள்ள பெரும் பாதிப்புகளைக் கருத்திற் கொண்டும், வருங்கால சந்ததிகளுக்கு ஆரோக்கியமான சுற்றுச்சூழலைக் கையளிக்கும் நோக்குடனும் எல்லாவகையான பிளாஸ்ரிக் பைகளையும், ஒருநாள் பாவனைக்குரிய பிளாஸ்ரிக்கினால் ஆன குவளைகள், போசன விரிப்புகள், உணவுத் தட்டுகள், உணவுப் பெட்டிகள் ஆகியவற்றையும் இன்றில் இருந்து பயன்படுத்தவும் கொள்வனவு செய்யவும் மாட்டோம்" என்ற உறுதிமொழி சகல பாடசாலைகளிலும் எடுக்கப்படவுள்ளது.

பாடசாலை நிதியில் அல்லது பாடசாலையுடன் தொடர்புடைய சங்கங்களின் நிதியில் பிளாஸ்ரிக் பைகள் மற்றும் ஒருநாள் பாவனைக்குரிய பொருள்கள் கொள்வனவு செய்வதை முற்றாகத் தவிர்க்கவும் ஆவன செய்யப்பட்டுள்ளது என்றுள்ளது.

(த-10)

## சாவு: 91...

அதிகரித்துச் செல்வதனால், அவற்றின் அருகில் வசிப்பவர்களை வெளியேறுமாறு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

ஆட்டிப்படைக்கும் இயற்கை

தென்பகுதி மாவட்டங்களான மாத்தறை, காலி, களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி, அம்பாந்தோட்டை, கம்பகா மற்றும் கொழும்பில் நேற்றுமுன்தினம் இரவிலிருந்து தொடர்ச்சியாக மழை பெய்கின்றது. நீர்த் தேக்கங்களின் நீர் மட்டம் எகிறி வருகிறது. நிலைமையைக் கட்டுப்படுத்த அவற்றின் வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன.

களு, களணி, ஜின், நில்வல ஆகிய ஆறுகளின் நீர் மட்டம் அதிகரித்துள்ளது. தொடர் மழையினால் ஏற்பட்ட வெள்ளம், ஆறுகளின் நீர் மட்ட அதிகரிப்பு என்பன போதாது என்று மண் சரிவும் ஏற்பட்டுள்ளது. இந்த இயற்கைச் சீற்றத்தினால், நேற்றுக் காலையிலிருந்தே பல பிரதேசங்களில் சாவு ஓலம் கேட்கத் தொடங்கியது. புதையுண்டவர்களைக் கூட மீட்க முடியாதளவுக்கு மழை தொடர்ந்து கொண்டிருந்தது.

*சிக்கலில் மீட்புப் பணி*

இராணுவத்தினர் 800 பேரும் வான் படையின் 7 உலங்கு வானூர்திகளும் உதவிப் பணிகளுக்காகக் களத்தில் இறக்கப்பட்டுள்ளன. விட்டுக்கொடுக்காது மழையும்தொடர்ந்து கொட்டித் தீர்ப்பதால் மீட்பு மற்றும் உதவி வழங்கலில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடுவதாக பாதுகாப்புத் தரப்பினர் கூறியுள்ளனர்.

சீறிப் பாய்ந்து செல்லும் வெள்ளம் மற்றும் ஆற்று நீரோட்டத்தின் காரணமாக பல முதன்மைச் சாலைகள் மூடப்பட்டுள்ளன. பல பிரதேசங்களுக்கான வீதிப் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு வெளியாள்கள் வருவதை தவிர்க்குமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டனர். ஏற்கனவே பாதைகள் முடக்கப்பட்டுள்ள நிலையில் இருக்கும் பாதைகளால் வெளியாள்களும் வரும்போது வீதிகளில் நெருக்கடி ஏற்படுவதாக அவர்கள் குறிப்பிட்டனர்.

*தலைநகரும் தாக்கப்படுகின்றது*

லக்சபான நீர்த் தேக்கத்தின் இரண்டு வான் கதவுகளும் மஸ்கெலிய கெனியோன் நீர்த் தேக்கத்தின் இரண்டு வான் கதவுகளும் திறந்து விடப்பட்டுள்ளன. இதனால் களனி கங்கையின் நீர் மட்டம் அதிகரித்துள்ளது. தலைநகர் கொழும்பில், களனி கங்கையை அண்மித்த கொலன்னாவை, சீதாவக, கடுவெல மற்றும் ஹோமாகம மற்றும் கம்பகா மாவட்டத்தின் களனி, வத்தளை மற்றும் பியகம ஆகிய பிரதேசங்களிலிருந்து சுமார் 2,000 குடும்பங்கள் வரை வெளியேற்றப்பட்டுள்ளனர்.

*மண்சரிவு*

மண்சரிவினால் களுத்துறை, காலி, கேகாலை, இரத்தினபுரி மாவட்டங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. மண்சரிவில் சிக்குண்டு புதையுண்டு போனவர்களில் 91 பேர் வரையில் சடலமாக மீட்கப்பட்டனர். சுமார் 110 பேர் வரையில் காணாமற்போயுள்ளனர். இந்த நான்கு மாவட்டங்களிலும் தொடர்ந்தும் மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வான் படைச் சிப்பாய் உலங்கு வானூர்தியிலிருந்து தவறி வீழ்ந்து உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் நீனுவப் பகுதியில் இடம்பெற்றது. (உ-5)

## உதவிப்...

இடர் முகாமைத்துவ மைய நிலையம் கேட்டுள்ளது.

வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு படுக்கை விரிப்புக்கள், நில விரிப்புக்கள், மெத்தைகள், பாதுகாப்பு ஆடைகள், பாய்கள், நடமாடும் மலசல டங்கள், நுளம்பு வலைகள், ரெயின்கோட்கள், தறப்பாள்கள், ரோச் லைற்கள், குடைகள், துவாய்கள், தீப்பெட்டிகள், பெண்களுக்கான சுகாதாரப் பொருள்கள், செருப்புக்கள் உள்ளிட்டவை ஆயிரக் கணக்கில் அவசர உதவியாகத் தேவை என்று கோரப்பட்டுள்ளது. (வ)

## இடர் பாதிப்பு...

முகாமைத்துவ மைய நிலையம் நேற்றிர[illegible] வெளியிட்ட புள்ளிவிவரங்கள் தெரிவி[illegible]கின்றன.

*களுத்துறை மாவட்டம்*

9 ஆயிரத்து 210 குடும்பங்களைச் சேர்ந்த 30 ஆயிரத்து 638 பேர் பாதிப்பு. 38 பேர் உயிரிழப்பு. 5 பேர் காயம். 80 பேரைக் காணவில்லை. 3 வீடுகள் முழுமையாகச் சேதம். 152 வீடுகள் பகுதியளவில் சேதம்.

*இரத்தினபுரி மாவட்டம்*

328 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து ஆயிரத்து 168 பேர் பாதிப்பு. 46 பேர் உயிரிழப்பு. 2 பேர் காயம். 4 வீடுகள் முழுமையாகச் சேதம். 65 வீடுகள் பகுதியளவில் சேதம்.

*கேகாலை மாவட்டம்*

781 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 121 பேர் பாதிப்பு. 2 பேர் உயிரிழப்பு.

*மாத்தறை மாவட்டம்*

இருவர் உயிரிழப்பு. 30 பேரைக் காணவில்லை.

*கம்பகா மாவட்டம்*

3 ஆயிரத்து 211 குடும்பங்களைச் சேர்ந்த 13 ஆயிரத்து 732 பேர் பாதிப்பு. இருவர் உயிரிழப்பு ஒருவர் காயம். 29 வீடுகள் பகுதியளவில் சேதம்.

*அம்பாந்தோட்டை மாவட்டம்*

168 குடும்பங்களைச் சேர்ந்த 691 பேர் பாதிப்பு. ஒருவர் உயிரிழப்பு.

*கொழும்பு மாவட்டம்*

922 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 883 பேர் பாதிப்பு.

*காலி மாவட்டம்*

ஆயிரத்து 866 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 157 பேர் பாதிப்பு. இருவர் காயம். (வ)

## மீண்டும்...

முடிவு எட்டப்படவில்லை. புதிய அரசமைப்பை உருவாக்கி இலங்கையில் தீர்வு ஒன்றை எட்டும் முயற்சிக்குக் கிடைத்த மேலுமொரு பின்னடைவு இது என்று அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

புதிய அரசமைப்புத் தொடர்பான யோசனைகளை முன்வைப்பதற்காக அரசமைப்புச் சபையாக மாற்றப்பட்ட நாடாளுமன்றத்தால் வழிநடத்தல் குழு ஒன்று நியமிக்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக உப குழுக்களும் நியமிக்கப்பட்டன. 6 உப குழுக்களும் தமது அறிக்கையை ஏற்கனவே நாடாளுமன்றத்தில் முன்வைத்துவிட்டன. அந்த முன்மொழிவுகளையும் அரசின் தன்மை, தேர்தல் முறைமை, நிறைவேற்று அரச தலைவர் முறைமைபோன்ற முக்கியவிடயங்களையும் ஆராய்ந்து நாடாளுமன்றத்துக்கு முன்வைக்கும் பணி வழிநடத்தல் குழுவுக்கு வழங்கப்பட்டது. இதற்காக நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து அரசியல் தரப்புகளுக்கும் (மகிந்த தரப்பு அடங்கலாக) குழுவில் இடமளிக்கப்பட்டது.

இந்தக் குழுவின் இடைக்கால அறிக்கை கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 10ஆம் திகதியே நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அது நடைபெறவில்லை. இடைக்கால அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டாலும் அது குறித்து அரசியல் தரப்புகளிடையே கருத்தொற்றுமை ஏற்படவில்லை. எனவே இதனை நிவர்த்தி செய்து இடைக்கால அறிக்கையை விரைவில் நாடாளுமன்றத்தில் முன்வைக்க வழிகாட்டல் குழு இரண்டு தடவைகள் கூடியபோதும் இலக்கு நிறைவேற்றப்படவில்லை.

குழு இரண்டாவது தடவையாக கடந்த 23ஆம் திகதி கூடியது. தொடர்ச்சியாக 4 நாள்களில் 5 அமர்வுகளை நடத்தி இடைக்கால அறிக்கையை இறுதி செய்வது என்று திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், மூன்று நாள்கள் மட்டுமே குழு கூடியது. மூன்று அமர்வுகள் மட்டுமே நடந்தன. நான்காவது நாளான நேற்று நடைபெற இருந்த அமர்வு கைவிடப்பட்டது. கொழும்பு மற்றும் இடங்களில் ஏற்பட்ட வெள்ள இடர் காரணமாக அமர்வு கைவிடப்பட்டதுடன் திகதி குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டது. அரச தலைவர் மைத்திரி பால சிறிசேனவுடன் கலந்துரையாடிய பின்னரே குழு மீண்டும் கூடும் திகதி தீர்மானிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

இதன் காரணமாக, இடைக்கால அறிக்கை நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படுவது மேலும் தாமதமாகியுள்ளது. (உ-5)

## சிறுமியை...

நேற்றுத் தீர்ப்பளித்தது. "எதிரிக்கு எதிராக முன்வைக்கப்பட்ட 3 குற்றச்சாட்டுக்களும் வழக்குத் தொடுநரால் நிரூபிக்கப்பட்டதால் அவை ஒவ்வொன்றுக்கும் தலா 20 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது. தண்டனையைக் குற்றவாளி ஒன்றன் பின் ஒன்றாக அனுபவிக்க வேண்டும். பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 6 லட்சம் ரூபாவை இழப்பீடாகக் குற்றவாளி வழங்க வேண்டும்" என்று வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தீர்ப்பளித்தார்.

2014ஆம் ஆண்டு வவுனியாவில் பெண் தலைமைத்துவக் குடும்பத்தைச் சேர்ந்த பதின்மவயதுச் சிறுமி வன்புனரப்பட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. சிறுமியின் தாயார் பணிப் பெண்ணாக வெளிநாடு சென்றிருந்த போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வவுனியா முதலியாகுளம் பகுதியைச் சேர்ந்த சிவில் பாதுகாப்பு படைச் சிப்பாயான காதர் முகைதீன் கமால் அல்லது அமரசிங்க ஆராய்ச்சிலாகே தர்மரட்ண என்பவரின் பொறுப்பிலேயே சிறுமியை அவரது தாயார் விட்டுச் சென்றார். அதனால் அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. சிறுமியை வன்புணர்ந்தார் என்ற குற்றச்சாட்டில் சிறுமியின் பாதுகாவலரை பொலிஸார் கைது செய்தனர்.

சந்தேகநபருக்கு எதிரான சுருக்கமுறையற்ற விசாரணைகள் வவுனியா நீதிவான் மன்றில் இடம்பெற்று வந்தன. ஆரம்ப விசாரணைகள் நிறைவடைந்ததும் சந்தேகநபருக்குப் பிணை வழங்கப்பட்டது. வழக்கு சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு வவுனியா நீதிவான் மன்றால் பாரப்படுத்தப்பட்டது.

சந்தேகநபருக்கு எதிராக 3 குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வவுனியா மேல் நீதிமன்றில் கடந்த நவம்பர் 11ஆம் திகதி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு விசாரணைகள் மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் முன்னிலையில் இடம்பெற்று வந்தன.

இந்த வழக்கு நேற்றுத் தீர்ப்புக்காக மன்றினால் நியமிக்கப்பட்டிருந்தது.

"சிறுமியை 3 தடவைகள் வன்புணர்ந்தார் என்று சாட்சியங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டது. அவர் மீதான குற்றச்சாட்டுக்களை நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் வழக்குத் தொடுநரால் நிரூபிக்கப்பட்டுள்ளது" என்று மன்று அறிவித்தது.

"அண்மைக்காலமாக வவுனியா மேல் நீதிமன்றில் அதிகளவான சிறுவர் மீதான துர்நடத்தை வழக்குகள் இடம்பெற்று வருகின்றன. பெரும்பாலான வழக்குகளில் குற்றவாளிகளும் அவரைச் சார்ந்தவர்களும் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பில் எந்தவொரு அக்கறையும் எடுப்ப தில்லை" என்று நீதிபதி தீர்ப்பில் சுட்டிக் காட்டினார்.

"குற்றவாளிக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் ஒவ்வொன்றுக்கும் அவருக்கு அதிகபட்ச தண்டனையாக 20 ஆண்டுகள் கடூழியச் சிறை விதிக்கப்படுகிறது. ஒவ்வொரு தண்டனையும் குற்றவாளி ஒன்றன்பின் ஒன்றாக அனுபவிக்க வேண்டும்.

3 குற்றச்சாட்டுகளுக்கும் தலா 2 இலட்சம் ரூபா வீதம் 6 இலட்சம் ரூபா பணத்தை பாதிக்கப்பட்ட சிறுமிக்கு இழப்பீடாகக் குற்றவாளி வழங்க வேண்டும். அதனைச் செலுத்தத் தவறின் 2 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை அவர் அனுபவிக்க நேரிடும். குற்றவாளி 10 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்த வேண்டும். அதனைச் செலுத்தத் தவறின் ஒரு மாதகால சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும்" என்று நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தண்டனைத் தீர்ப்பளித்தார்.

வழக்குத் தொடுநர் தரப்பில் அரச சட்டவாதி மாதினி விக்னேஸ்வரன் வழக்கை நெறிப்படுத்தியிருந்தார். (வ-4)

## கிணற்றுக்கு...

டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த சில தினங்களாக இந்தக் கிணற்றுக்குள் இருந்து ஆயுதங்கள் மீட்கப்பட்டு வந்தன. மேலும் ஆயுதங்கள் அங்கு உள்ளபோதும் அவற்றை மீட்கமுடியாத நிலை உள்ளதால் அதனை அப்படியே கிணற்றுக்குள் வைத்து வெடிக்க வைக்கத் தீர்மானிக்கப்பட்டது.

நீதிமன்ற அனுமதி கிடைத்தவுடன் எஞ்சியுள்ள ஆயுதங்கள் வெடிக்கவைக்கப்படும் எனப் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

நீதிமன்ற அனுமதி கிடைக்காமையாலேயே அந்த முயற்சி கைவிடப்பட்டதாகவும், ஓரிரு தினங்களில் அனுமதியைப் பெற்று ஆயுதங்கள் வெடிக்க வைக்கப்படும் எனவும் பொலிஸார் மேலும் கூறினர். (த-21-26)

## புலிகள்...

வித்ததாவது: கிளிநொச்சியில் பொலிஸ் வாகனம் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டைச் சாதாரண சம்பவமாக எடுத்துக் கொள்ள முடியாது. மே 18ஆம் திகதிக்கு அடுத்த நாள் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றதால் அது ஆழமான அர்த்தத்தைக் கொண்டுள்ளது. மீண்டும் புலிகள் உயிர் பெற்று வருகின்றனர் என்பதற்கு இந்தச் சம்பவம் சிறந்த உதாரணமாகும்.

எமது ஆட்சியில் இவ்வாறு இடம்பெறுவதற்கு நாம் அனுமதிக்கவில்லை. சிவாஜிலிங்கம் பிரிவினைவாதக் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு இடம்கொடுக்கவில்லை. ஆனால், இந்த ஆட்சியில் தலைமை அமைச்சர், அரச தலைவர் மற்றும் பொலிஸார் ஆகியோர் முன்னிலையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பிரிவினைவாதத்தை ஆதரித்துப் பேசுகின்றனர். அரச அனுசரணையுடன்தான் இவையெல்லாம் நடக்கின்றன.

மீண்டும் புலிகள் உயிர்பெற்றுவருவதற்கு நாம் இடங்கொடுக்கலாமா? தமது பிள்ளைகள் புத்தகங்களை வைத்துவிட்டுக் கழுத்தில் மீண்டும் சயனைட் குப்பிகளைத் தொங்கவிடுவதற்குத் தமிழ்த் தாய்மார்கள் விரும்புகிறீர்களா? அவர்கள் ஒருபோதும் விரும்பவில்லை. ஆனால், இந்த அரசு அவர்களின் விருப்பத்துக்கு எதிராகபுலிகளின் விருப்பத்துக்கு ஆதரவாகச் செயற்படுகின்றது.

தெற்கில் ஒரு சட்டமும் வடக்கில் ஒரு சட்ட[illegible]
நடைமுறைப்படுத்தப்படுகின்றன. நாம் [illegible]
யாமல் ஆர்ப்பாட்டம் செய்தால்கூட நீதி[illegible]
றத்தால் தண்டிக்கப்படுகின்றோம். ஆ[illegible]
வடக்கில் நாட்டுக்கு விரோதமான நா[illegible]
இரண்டாகப் பிளவுபடுத்தும் செயற்பா[illegible]
முன்னெடுக்கப்படுகின்றபோது பொலி[illegible]
பார்த்துக்கொண்டு நிற்கின்றனர்.

சரத் பொன்சேகாகூட அவரது அமைச்ச[illegible]
வியைக் காப்பாற்றுவதற்காக வீரனாக இ[illegible]
துரோகியாக மாறிவிட்டார். கிளிநொச்சி[illegible]
பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை தெற்கில் நடக்[illegible]
சாதாரண சம்பவத்துடன் ஒப்பிட்டுக் கருத்து[illegible]
கூறியுள்ளார். இவர்கள் சேர்ந்து இந்த நாட்டுக்கே துரோகம் செய்கின்றனர்என்றார். (த3)

## முகாமைத்துவ...

பரீட்சைகள் திணைக்களத்தின் உதவிப் பரீட்சைகள் ஆணையாளர் எஸ்.பிரணவதாசன் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பரீட்சையை ஒத்திவைப்பதற்கான தீர்மானம், அலரிமாளிகையில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்றுக் காலை நடைபெற்ற சிறப்புக் கூட்டத்திலேயே எடுக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

இந்தப் பரீட்சையில் 93 ஆயிரத்து 952 பரீட்சார்த்திகள் தோற்ற இருந்தனர். பரீட்சைக்காக நாடு முழுவதிலும் 658 மத்திய நிலையங்களில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(த-5)

## ஐ.நா...

திடீர் வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள நிலைமை கட்டுக்கடங்காமல் இருப்பதால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி உதவிகளை வழங் வேண்டியிருக்கிறது. அரசால் மட்டும் இதனைச் செய்து முடிக்க முடியாது என்பதால் வெளி உதவியை அரசு கோரியிருக்கிறது.

உடனடியாகஉதவ இந்தியா முன்வந்துள்ளது. உதவிப் பொருள்களுடனான இந்தியக் கப்பல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இலங்கையை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(உ-5,21)

## தீர்ப்பாயத்தின்...

என்று தெரிவிக்கப்பட்டது.

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் 3 நீதிபதிகள் தீர்ப்பாயம் (ட்ரயல் அட் பார்) முன்னிலையில் நடாத்த தலைமை நீதியரசர் பிரியசாத் டெப் பரிந்துரை வழங்கினார்.

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தலைமையில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன், திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் ஆகியோரை தீர்ப்பாயத்தின் நீதிபதிகளாக நியமிக்கப்பட்டனர்.

இந்த வழக்கின் விசாரணைகளை விரைவில் ஆரம்பிப்பது தொடர்பில் 3 மேல் நீதிமன்ற நீதிபதிகளும் நாளை மறுதினம் திங்கட்கிழமை சந்தித்துக் கலந்துரையாடுவர் என்று தெரிவிக்கப்பட்டது. தீர்ப்பாயத்தின் அமைவிடம், சாட்சியப் பதிவுகளுக்கான ஏற்பாடுகள் உள்ளிட்ட விடயங்களை அவர்கள் ஆராய்வர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(வ)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், மே 27

**துடுப்பாட்டம்**

இலங்கை கிரிக்கெட் சபையின் ஆட்டமொன்று வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரிமைதானத்தில் இன்று காலை இடம்பெறவுள்ளது. வினஸ் அணியை எதிர்த்து சுழிபுரம் விக்ரோறி அணி மோதவுள்ளது.

**கலைமதியின் கால்பந்தாட்டம்**

நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சில இமையாணன்மத்தியவிளையாட்டுக்கழகமைதானத்தில்இன்றுஇடம்பெறவுள்ளன. பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணியும், தொடர்ந்து உடுப்பிட்டி சிவகுமரன் அணியை எதிர்த்து பாசையூர் சென். அன்ரனிஸ் அணியும் மோதவுள்ளன.

(ம-23-108)



# சுழிபுரம் விக்ரோறியா மாகாணச் சம்பியன்

யாழ்ப்பாணம், மே 27

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மென்பந்துத் துடுப்பாட்டத் தொடரில் 20 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி கிண்ணம் வென்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று இந்த இறுதியாட்டம் இடம்பெற்றது. பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையை எதிர்த்து சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரிஅணி, நிர்ணயிக்கப்பட்ட 6 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 63 ஓட்டங்களைப் பெற்றது. நிந்துசா அதிகபட்சமாக 36 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். பந்துவீச்சில் ஜெனிசா 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.

64 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி 44 ஓட்டங்களை மட்டும் பெற்று 19 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

கிருசிகா பெற்ற 15 ஓட்டங்களே அதிகபட்சம். பந்துவீச்சில் விக்ரோறியாக் கல்லூரியின் சார்பில் நிந்துசா 2 இலக்குகளையும், தேனுசா, கலைமதி இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ம-23)

# வடமாகாணத் தடகளத் தொடர் துரையப்பாவில் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 26

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் நடத்தும் 11ஆவது மாகாணமட்டத் தடகளத் தொடர் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

இன்று காலை 7 மணிமுதல் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் தடகளப் போட்டிகளும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இருபாலாருக்குமான கயிறு இழுத்தலும் நடைபெறவுள்ளன. இடைவேளை சிறப்பு நிகழ்வாக கராத்தே கண்காட்சியும் நடைபெறவுள்ளது. முதல்நாள் நிகழ்வுக்கு விருந்தினராக வடமாகாண தலைமைச் செயலாளர் அ.பத்திநாதன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

நாளை நடைபெறவுள்ள இரண்டாம் நாள் நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

**முதல்நாள் நிகழ்வுகள்**

இன்று ஆண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் ஓட்டம், ஈட்டி எறிதல், முப்பாய்ச்சல், இருபாலாருக்குமான தட்டெறிதல், குண்டெறிதல், உயரம் பாய்தல், 800 மீற்றர் ஓட்டம், 400 மீற்றர் சட்டவேலி தெரிவு, 4 நபர்கள் பங்குபற்றும் 100 மீற்றர் அஞ்சல் ஓட்டம், பெண்களுக்கான 5 ஆயிரம் மீற்றர் மற்றும் நீளம் பாய்தல் ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன.

**இரண்டாம்நாள் நிகழ்வுகள்**

இரண்டாம் நாளான நாளை இருபாலாருக்குமான கோலூன்றிப் பாய்தல், 400 மீற்றர் ஓட்டம், சம்மட்டி எறிதல், 100 மீற்றர் ஓட்டம், 400 சட்டவேலி, 4 நபர்கள் பங்குபற்றும் 400 மீற்றர் அஞ்சல் ஓட்டம், ஆயிரத்து 500 மீற்றர் ஓட்டம், ஆண்களுக்கான 5 ஆயிரம் மீற்றர், நீளம் பாய்தல், 110 மீற்றர் சட்டவேலி, பெண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் ஈட்டி எறிதல், இருபாலாருக்குமான கயிறு இழுத்தல், கால்பந்தாட்ட இறுதியாட்டம் ஆகியன நடைபெறவுள்ளன. (ம-422-108-23)

# கலைமதி, நவஜீவன்ஸ் அரையிறுதிக்குத் தகுதி

கரணவாய், மே 27

வல்வை றெயின்போ விளையாட்டுக் கழகத்தின் கால்பந்தாட்டத் தொடரில் கலைமதி விளையாட்டுக் கழகம் மற்றும் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் என்பன அரையிறுதிக்குத் தகுதி பெற்றன.

றெயின்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது காலிறுதி ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் மோதியது. ஆட்டத்தின் 15 ஆவது நிமிடத்தில் கலைமதியின் கோலைப் பதிவுசெய்தார் வினித். இரண்டாம் பாதியில் மாற்றங்கள் ஏதும் ஏற்படவில்லை. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது கலைமதி.

தொடர்ந்து இடம்பெற்ற மற்றொரு காலிறுதியாட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின.

நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்கள் நிறைவில் இரு அணிகளும் தலா ஓர் கோலைப் பதிவுசெய்ததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றிபெற வேண்டிய நிலை ஏற்பட்டது. 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதிபெற்றது நவஜீவன்ஸ் அணி. (ம-108)



# போராடி வென்றது குருநகர் பாடும்மீன்

யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையிலான தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் குருநகர் பாடும்மீன்அணிபோராடிவெற்றிபெற்றது. அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில்நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் அணி மோதியது. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் 20ஆவது நிமிடத்தில் மயூரன் பாடும்மீனின் முதல் கோலைப் பதிவுசெய்தார். அதுவே ஆட்டத்தின் ஒரேகோலுமாக அமைந்தது. (ம-23)




# ஆவரங்கால் மத்தி சம்பியன்

கரணவாய், மே 27

திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் வைரவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட தொடரில், ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் கிண்ணம் வென்றது.

திக்கம் மத்திய சனசமூக நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகமும் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகமும் மோதின.

5 செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் செற்றை 25:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது ஆவரங்கால் மத்தி. இரண்டாவது செற்றை 25:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது கலைமதி. மூன்றாவது செற் 25:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் ஆவரங்கால் மத்தியின் வசமானது. நான்காவது செற் 25:23 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கலைமதியின் வசமானது. முதல் நான்கு செற்களின் நிறைவில் இரு அணிகளும் தலா இரண்டு செற்களைக் கைப்பற்றியிருந்தன.

இறுதி செற்றில் வெற்றிபெறும் அணியே சம்பியன் என்ற நிலையில் அந்த செற்றை 16:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:2 என்ற செற் கணக்கில் கிண்ணம் வென்றது ஆவரங்கால் மத்தி. ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் 3:2 என்ற செற் கணக்கில் இளவாலை மத்தியை வீழ்த்தி மூன்றாமிடத்தை தனதாக்கியது. (ம-108)

# கலைமதியின் கால்பந்தாட்டத் தொடரில் யங்கம்பன்ஸ், பல்கலை முன்னேற்றம்

யாழ்ப்பாணம், மே 27

கலைமதியின் கால்பந்தாட்டத் தொடரில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் என்பன முன்னேறின.

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக் கழகம் மோதியது. 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது யங்கம்பன்ஸ்அணி. தொடர்ந்துஇடம்பெற்ற ஆட்டத்தில் நாச்சிமார் கோவிலடி சிறி அம்பாள் விளையாட்டுக் கழகமும் யாழ்ப்பாண பல்கலைக் கழகமும் மோதின. இதில் 8:1 என்ற கோல் கணக்கில் யாழ்ப்பாண பல்கலைக் கழக அணி வெற்றி பெற்று முன்னேறியது. (ம-108)

# விசாரணை

பாகிஸ்தான் அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர் உமர் அக்மல், மினி உலகக்கிண்ணத் தொடரில் இருந்து திடீரென நீக்கப்பட்டதை அடுத்து இந்த விடயத்தில் விசாரணை நடத்த முடிவெடுத்துள்ளது பாகிஸ்தான் கிரிக்கெட் சபை.
உமர் அக்மல் உடற்தகுதியில் தோல்வியடைந்ததை அடுத்தே மினி உலகக்கிண்ணத் தொடரில் இருந்து வெளியேற்றப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.
எனினும் இந்த விடயத்தில் பாகிஸ்தான் அணியின் பயிற்சியாளர் ஆர்தர் தலைமைத் தேர்வாளர் இன்சமாம் இருவருக்கும் இடையில் மோதல்போக்கு உள்ளது என்று செய்திகள் வெளியாகியிருந்த நிலையில் இது தொடர்பில் விசாரணை நடத்த முடிவெடுத்துள்ளது பாகிஸ்தான் கிரிக்கெட் சபை.
"பாகிஸ்தானில் இருந்து உடல்தகுதியுடன் சென்ற உமர் அக்மல், இங்கிலாந்தில் எவ்வாறு உடல்தகுதியை இழந்தார் என்பது தொடர்பில் விசாரணை நடத்த விரும்புகிறோம்" என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் சகாரியர்கான் தெரிவித்தார்.
அக்மலுக்குப் பதில் ஹரிஸ் சொகைல் சேர்க்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)


மன்னார் மாவட்ட அணி


யாழ். மாவட்ட அணி

# மன்னார் - யாழ்ப்பாணம் நாளை மீண்டும் மோதல்

யாழ்ப்பாணம், மே 27
வடமாகாண மாவட்ட அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மின்னொளியில் நடைபெறவுள்ளது. மன்னார் மாவட்ட அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் மாவட்ட அணி மோதவுள்ளது. மன்னார் மாவட்ட அணி தனது ஆதிக்கத்தைத் தக்கவைக்குமா அல்லது யாழ்ப்பாண மாவட்ட அணி மன்னாரின் வெற்றி நடைக்கு முடிவு கட்டுமா என்ற எதிர்பார்ப்பு பெரிய அளவில் ஏற்பட்டுள்ளது.
2010ஆம் ஆண்டிலிருந்து 2013ஆம் ஆண்டுவரை மன்னார் மாவட்ட அணி யாழ்ப்பாண மாவட்ட அணியை வீழ்த்தி தொடர்ந்து நான்கு வருடங்கள் மகுடம் சூடியது. 2014ஆம் ஆண்டு மன்னாரை வீழ்த்தி கிண்ணம் வென்றது யாழ்ப்பாண மாவட்ட அணி. 2015ஆம் ஆண்டு இரு அணிகளும் இணைச் சம்பியனாகத் தெரிவாகின. கடந்த வருடம் மீண்டும் வெற்றி பெற்றது மன்னார் மாவட்ட அணி. நடப்பு வருடத்திலும் இந்த இரு அணிகளுமே இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளன. எந்த அணி கிண்ணம் வெல்லும் என்பதில் மிகையான எதிர்பார்ப்பு உள்ளது. (ம-422)




## ஸ்ரெய்ன் இல்லாதமை பின்னடைவு

இங்கிலாந்து மண்ணில் தென்னாபிரிக்கா களமிறங்குகின்ற தென்றால் கிரிக்கெட் ரசிகர்களின் கவனம் தென்னாபிரிக்க வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரெய்ன் மீது குவிந்திருக்கும். ஆனால் மினி உலகக்கிண்ணத் தொடரில் அவர் இல்லாமல் களமிறங்கவுள்ளது தென்னாபிரிக்கா. இது நிச்சயம் அந்த அணிக்கு பின்னடைவே. இங்கிலாந்து ஆடுகளங்களில் சிறப்பாக பந்துவீசவல்லவரான ஸ்ரெய்னின் விலகல் தென்னாபிரிக்காவுக்குப் பின்னடைவாக இருக்கின்ற போதிலும், ரபாடா, மோர்கல் இணை அந்தக் குறையை ஓரளவேனும் நிவர்த்திசெய்ய வல்லது. தென்னாபிரிக்காவின் பந்துவீச்சு எதிர்காலம் என்று ரபாடா வர்ணிக்கப்படுகிறார். அவரது ஆற்றல் மினி உலகக்கிண்ணத்தில் வலுவாக நிலைபெறும் என்பது பலரினதும் எதிர்பார்ப்பு.
வேகப்பந்துவீச்சும் துடுப்பாட்டமும் செய்யக்கூடியவரான சகல துறை வீரர் மொறிஸ் தென்னாபிரிக்காவின் கூடுதல் பலம். இதுவரை ஒரு தடவையாவது உலகக்கிண்ணம் வெல்லாத தென்னாபிரிக்கா இம்முறை சாதிக்க வேண்டும் என்பது பலரினதும் விருப்பமாகவும் உள்ளது. தென்னாபிரிக்க அணி விவரம் - வில்லியர்ஸ் (தலைவர்), பிளாசிஸ், அம்லா, டுமினி, குயின்டன் டி ஹொக், பெக்கார்டின், தாகிர், மில்லர், மொறிஸ், பிளுக்வையோ, ராபாடா, மகாராஜ், மோர்கல், பார்நெல், பிறிட்ரோறியஸ்.



## இங்கிலாந்து தென்னாபிரிக்கா ஆட்டம் இன்று

இங்கிலாந்து - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் இரண்டாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.
தொடரில் மூன்று ஆட்டங்கள் முதலாவது ஆட்டத்தில் இங்கிலாந்து வெற்றிபெற்றது. இதனால் தென்னாபிரிக்க அணி ஏனைய இரு ஆட்டங்களிலும் வெற்றிபெற வேண்டும் என்ற சிக்கல் உள்ளது.
மாறாக இன்றைய ஆட்டத்தில் இங்கிலாந்து வெற்றிபெற்றால் அந்த அணி கிண்ணம் வெல்வது உறுதியாகும். இதனால் தென்னாபிரிக்கா இன்று கடும் எதிர்ப்புக் காட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

## மானிப்பாய் இந்துக் கல்லூரி மாகாணத்தில் சம்பியனானது

யாழ்ப்பாணம், மே 27
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில் 20 வயது ஆண்கள் பிரிவில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி கிண்ணம் வென்றது.
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி நிர்ணயிக் கப்பட்ட 6 பந்துப் பரிமாற்றங்களில் 27 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. 2.2 பந்துப்பரிமாற்றங்களில் இலங்கை அடைந்து வெற்றிபெற்றது மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி. (ம-23)




**வாடகைக்கு** யாழ். நகரில்
பெண்களுக்கான சகல வசதிகளுடன் கூடிய விடுதி அறைகள் மாத வாடகைக்கு உண்டு.
**தொடர்பு-077 0417705**

**இன்று 10 ஆவது ஆண்டில்**
**காலடி பதிக்கும்**
**"அன்னை புத்தகசாலை"**
எமது வளர்ச்சிக்கு உறுதுணையாய் நின்று வரும்
அனைத்து வாடிக்கையாளர்களுக்கும்
எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்
கொள்கிறோம்.
**உரிமையாளர், ஊழியர்கள்.**
021 222 9881

**தாதியர் தேவை**
மானிப்பாய் கிறின் ஞாபகார்த்த வைத்தியசாலை வளாகத்தில் அமைந்துள்ள எமது நரம்பு நோயியல் புனர்வாழ்வு நிறுவனத்திற்கு முன் அனுபவமுள்ள பதிவு செய்யப்பட்ட அல்லது ஓய்வு பெற்ற தாதியர் தேவைப்படுகிறது. ஆர்வமுடையோர் சுயவிவரங்களை எதிர்வரும் 04.06.2017 இற்கு முன்னர் கிடைக்ககூடியதாக அனுப்பவேண்டும்.
**INSTITUTE OF MEDICALSCIENCES**
Green Memorial Hospital,Manipay
Email : theimsjaffna@gmail.com Web site :www.theims.net
Tel : 021 222 6990/021 225 6335/0777 28164
Office time -8.00 am to 4.00 pm

**வட இந்திய காசி சீரடி யாத்திரை**
**ஆரம்பம் : 05.08.2017**
**யாத்திரீகர் - 20 நாள்கள் : 15**
செல்லுமிடங்கள்:- டெல்லி, ஆக்ரா, தாஜ்மகால், அலகாபாத் (கங்கா, ஜமுனா, சரஸ்வதி), திருவேணி, சங்கமம், கயா, காலமானவர்களுக்கு சிரார்த்தம் செய்யுமிடம், புத்தகயா, புத்தாலயங்கள், சீத்தமடி, காசி (வாரனாசி), 3நாள் குருச் சேத்திரம், பாண்டவர்கள் யுத்தம் புரிந்த இடம், மும்பாய், சீரடி பாபா, சனி சிங்கனாப்பூர், அக்கல்கோட், பாபா, இராமேஸ்வரம், மதுரை, துல்க்காப்பூர் அம்மன்கோயில், வேறு இடங்களும் காணலாம். ஒருநாள் சென்னையில் சொப்பிங். உங்களிடம் வாங்கும் ரூபாவுக்கு எமது சேவை. 4 விமானப் பயணம், AC வாகன வசதி, மூன்று வேளை மடப்பள்ளி ஆள்கள் சமைத்த உணவு, காப்பி, ரீ, படகுக் கட்டணங்கள் எயாபோட் போக, வர வாகன வசதி, 2 பேருக்கு குளியலறை (வெஸ்ரன் கொமட்), இணைந்த அறைகள் (NON AC) குடிநீர் (மேலும் ஆலயங்களில் எடுக்கும் புகைப்படங்கள் 25 அன்பளிப்பாகத் தரப்படும்) விருப்பமுடையவர்கள் பாஸ் போர்ட் போட்டோக் கொப்பியும், ஒரு பாஸ்போர்ட் சைஸ் புகைப் படமும் அனுப்பி பதிவு செய்யவும். மேலும் விவரங்களைக் கேட்டு அறிந்து பதிவு செய்யவும்.
கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன்
மகன் ராஜன்
No.59,3/6, செட்டியார் தெரு, கொழும்பு -11
Tel: 077 768 0102 / 077 736 2154 - பேஸ்புக்
10.06.2017 இற்கு முன்பும், 29.06.2017 இற்குப் பின்பும் தொடர்பு கொள்ளலாம்.

# இங்கிலாந்து கால்பந்து அணி; வெய்ன் ரூனிக்கு இடமில்லை



கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடரின் தகுதிச் சுற்று ஆட்டத்துக்கான இங்கிலாந்து அணியின் அந்த அணியில் நட்சத்திர வீரராகத் திகழும் ரூனிக்கு இடம் மறுக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடருக்கான தகுதிச் சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இங்கிலாந்து அணி தனது அடுத்த ஆட்டத்தில் ஸ்கொட்லாந்துக்கு எதிராக அடுத்த மாதம் மோதவுள்ளது. இந்த ஆட்டத்துக்கான இங்கிலாந்து அணி நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது.

ரூனிக்கு இடம் மறுக்கப்பட்டது. இந்த ஆட்டத்துக்கு முன்பாக பிரான்ஸின் நட்புறவு ஆட்டமொன்றிலும் மோதவுள்ளது. இந்த ஆட்டத்துக்கான அணியிலும் ரூனிக்கு இடம் கொடுக்கப்படவில்லை. கடந்த சில ஆட்டங்களில் ரூனிக்கு இடம் கொடுக்கப்படவில்லை.

அவர் காயமடைந்திருந்ததாலேயே அவருக்கு அணியில் இடம்கொடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. தற்போது அவர் உடல்தகுதியுடன் உள்ள நிலையில் அவர் நீக்கப்பட்டமையானது பல அதிர்வலைகளைத் தோற்றுவித்துள்ளது.

31 வயதான ரூனி, இங்கிலாந்து அணிக்காக இதுவரை 53 கோல்களைப் பதிவுசெய்துள்ளார். தேசிய அணிக்காக அதிக கோல்களைப் பதிவுசெய்த இங்கிலாந்து வீரராகவும் ரூனியே உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# நன்னடத்தை அணியாக நல்லூர் அணி தெரிவு




யாழ்ப்பாணம், மே 26

யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளின் அடிப்படையில் சிறந்த நன்னடத்தை அணியாக நல்லூர் அணி தெரிவானது.

இந்தவிருதானது விளையாட்டுச் செயற்பாடுகளில் ஒழுக்கவியல் சிறந்த நன்னடத்தை மற்றும் பங்கு பற்றுதல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் அறிவிக்கப்பட்டது.

ஆயிரத்து 378 புள்ளிகளைப் பெற்று நல்லூர் பிரதேச செயலக அணி சிறந்த நன்னடத்தை அணியாகத் தெரிவு செய்யப்பட்டது.

ஆயிரத்து 266 புள்ளிகளைப் பெற்று யாழ்ப்பாண பிரதேச செயலக அணி இரண்டாவது இடத்தையும், ஆயிரத்து 221 புள்ளிகளைப் பெற்று உடுவில் பிரதேச செயலக அணி மூன்றாவது இடத்தையும், ஆயிரத்து 205 புள்ளிகளைப் பெற்று தெல்லிப்பழை பிரதேச செயலக அணி நான்காம் இடத்தையும், ஆயிரத்து 86 புள்ளிகளைப் பெற்று பருத்தித்துறை பிரதேச செயலக அணி ஐந்தாவது இடத்தையும் பெற்றன. (ம-108)

**வாழ்த்துகின்றோம்**
மிகக் குறுகிய காலத்தில் மக்கள் மனதில் நீங்காத இடம் பிடித்த நிறுவனம் **"அன்னை புத்தகசாலை"** தனது 10 ஆவது ஆண்டில் காலடி எடுத்துவைக்கும் இவ்வேளை எமது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்.
**சாங்கிதா மல்ரி சென்ரர்**
**யாழ்ப்பாணம்.**
Best Wishes

**வாழ்த்துகின்றோம்**
வடமாகாணத்தின் அறிவுக்களஞ்சியமான
**"அன்னை புத்தகசாலை"**
இன்று தனது 10 ஆவது ஆண்டு நிறைவு
**தகர விழாவினை**
கொண்டாடுகின்றது.
இதன் பணி மென்மேலும் சிறப்புற வாழ்த்துவதுடன் இதன் உரிமையாளர்களையும் மற்றும் அலுவலர்களையும் பாராட்டுகின்றோம்.
**யாழ் ஆசான் வெளியீடு**
**மானிப்பாய், யாழ்ப்பாணம்.**
**077 711 1212/021 225 5514**

மாணவர்களே! அரச தனியார் உத்தியோகத்தர்களே LapTop பிரியர்களே!
உலகத்தரம் வாய்ந்த **Laptop**கள் உங்கள் கைகளில்...




Touch screen Laptopகள்

| Asus E202S EEBOOK | | DELL LAPTOP 7TH GEN | | HP 250 G5 |
|---|---|---|---|---|
| Model | Asus E202S EEBOOK | Model | Dell Inspiron 15 5566 | HP 250 G5 |
| Processor | Intel N3060 | Processor | Intel Core i3 2.40GHz (7100U) | 6th Generation Intel® Core™ i3 -6006U |
| Ram | 4 GB DDR3 | Ram | 8 GB DDR4 | 4 GB DDR3L-1600 SDRAM |
| Hard Disk | 500 GB | Hard Disk | 1 TB | 500 GB SATA |
| Options | Wifi/CR/BT | Optical Drive | DVD/RW+DL | DVD+/-RW SuperMulti DL |
| Screen | 11.6 LED | Options | Wifi/CR/BT | Wifi/CR/BT |
| Colour | Dark blue | Screen | 15.6 LED Touch Display | 15.6" LED HD Display |
| Operating System | DOS | Graphics | Shared Graphics | Intel® HD Graphics |
| Web cam | Yes | Operating System | Windows 10 Home | FREE DOS |
| | | Web cam | Yes | Yes |
| Warranty:1YEAR | | Warranty:1YEAR | | Warranty:1YEAR |
| Price 41,000.00 | | Price 69,500.00 | | Price 52,000.00 |
| FREE- MOUSE , NORTON ANTIVIRUS | | FREE- BAG , MOUSE , NORTON ANTIVIRUS | | FREE- BAG, MOUSE, NORTON ANTIVIRUS |

NALIN Information Technologies Pvt Ltd
**NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.**
No. 195/2, Parameswara Junction,
Palaly Road, Jaffna.
021 222 1121
077 766 7975
உங்கள் LapTopகளுக்கு முந்துங்கள் உலகை வெல்லுங்கள்
கையிருப்பு உள்ளவரை மட்டுமே

**வாழ்த்துகின்றோம்**
இன்று 10 ஆவது ஆண்டில் காலடி பதிக்கும் **அன்னை புத்தகசாலைக்கு** எமது நல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.
**கிருஷ்ணா பிறிண்டர்ஸ்**
**சுன்னாகம்.**
**021 224 2475**
Best Wishes

**வாழ்த்துகின்றோம்**
இன்று 10 ஆவது ஆண்டில் காலடி பதிக்கும் யாழ் நகரின் முன்னணி நிறுவனமான **அன்னை புத்தகசாலைக்கு** எமது நல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.
**குறிஞ்சி வெளியீடு**
**"புலமை மஞ்சரி" கண்டி.**
**077 315 5022**
Best Wishes

**வாழ்த்துகின்றோம்**
இன்று 10 ஆவது ஆண்டில் காலடி பதிக்கும் **அன்னை புத்தகசாலைக்கு** எமது நல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம். தரம் 5 புலமைப்பரிசில் எதிர்பார்க்கை வினாத்தாள்கள்-10 "மின்னல்" 9 மாவட்டங்களை சேர்ந்த முன்னணி ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்டது.
**புகழ் வெளியீடு**
**யாழ்ப்பாணம்.**
**077 411 8950**
Best Wishes

**வாழ்த்துகின்றோம்**
10 வருடத்தில் சாதனைகள் பல புரிந்த **அன்னைபுத்தகசாலைக்கு** எமது நல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம். வட புலத்தில் மாணவர்களின் மனதில் மாங்காத இடம் பிடித்த நிறுவனம்.
**ஒமேகா வெளியீடு**
**கொழும்பு.**
**077 814 3271**
Best Wishes

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.05.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.